விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபத்து நான்கு — Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 மாசி 07 ஞாயிற்றுக்கிழமை (19.02.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 062

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# சுயநிர்ணய உரிமையை விட்டுக் கொடுக்காதீர்கள்

## கூட்டமைப்பிடம் சிவில் சமூகம் எடுத்துரைப்பு

(வவுனியா)

இலங்கையின் இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் அரசாங்கத்துடன் நடத்தும் பேச்சுவார்த்தைகளில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை விட்டுக் கொடுக்காத வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு




பேச்சுவார்த்தையை முன்னெடுக்க வேண்டும் என தமிழ் சிவில் சமூகம் வலியுறுத்தியுள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)

# சர்வதேச விசாரணைப் பொறிமுறை இலங்கையில் உருவாக்கப்பட வேண்டும்

## தொண்டு நிறுவனங்கள் அமெரிக்காவிடம் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கை தொடர்பில் சர்வதேச விசாரணைப் பொறிமுறை உருவாக்கப்பட வேண்டும் என தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

எதிர்வரும் 27ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளின்போது சுயாதீன சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஒன்றை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என சுட்டிக்காட்டியுள்ளன.

சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் கண்காணிப்பகம், கார்டர் நிலையம்; பிரஜைகளுக்கான சர்வதேச தீர்வுகள் ஜனநாயக கூட்டமைப்புத் திட்டம், சுதந்திர இல்லம், மகளிர் உரிமை பெரும்பான்மைப் பேரவை உள்ளிட்ட உலகின் முன்னணி தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் கூட்டாக இணைந்து அமெரிக்காவிடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளன.

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் உரிய முறையில் விசாரணை செய்யப்பட்டு நீதியை நிலைநாட்ட அமெரிக்கா நடவடிக்கை எடுக்கவேண்டும் என கோரப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு அறிக்கை உள்ளிட்ட பல்வேறு சர்வதேச அறிக்கைகளில் யுத்தக் குற்றச் செயல்கள் இடம்பெற்றதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என அந்த அமைப்புக்கள் குறிப்பிட்டுள்ளன.

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவின் அறிக்கையை சர்வதேச சமூகம் ஏற்றுக் கொள்ளவில்லை என தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் குறிப்பிட்டுள்ளன.

சுயாதீன விசாரணைகளின் மூலம் குற்றச் (24ஆம் பக்கம் பார்க்க)

# மினிபஸ் மோதியதில் குடும்பஸ்தர் பலி

## மாதகலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மாதகல் பகுதியில் மினிபஸ் மோதியதில் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியானார்.


நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் மாதகல் மேற்கு கடற்கரைக்கு அண்மித்ததாக வேலுப்பிள்ளை கடைச் சந்திப் பகுதியில் இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

மாதகலை சேர்ந்த பொனிபஸ்(வயது 45) என்ற (24ஆம் பக்கம் பார்க்க)

# சிலாபம் மீனவரின் இறுதிக்கிரியையில்...

(சிலாபம்)

எரிபொருள் விலையேற்றத்திற்கு எதிராக சிலாபம் மீனவர்களினால் கடந்த திங்கட்கிழமை நடத்தப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போது பொலிஸாரினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பலியான மீனவரான அன்ரனி பெர்ணான்டோவின் இறுதிக் கிரியைகள் நேற்று சனிக்கிழமை மாலை சிலாபம் (24ஆம் பக்கம் பார்க்க)



# பால்மா விலையும் அதிகரிக்கும் வாய்ப்பு

(கொழும்பு)

பால்மாவின் விலைகளை அதிகரிப்பதற்கு அரசாங்கத்திடம் பால்மா விநியோக நிறுவனங்கள் அனுமதி கோரியுள்ளன.

இந்த அனுமதி வழங்கப்பட்டால் 400 கிராம் பால்மாவின் விலை 15 ரூபாயினால் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அங்கர், நெஸ்பிறே, மெலிபன், டயமன்ட் முதலான பால்மாவை விநியோகிக்கும் நிறுவனங்கள் இறக்குமதி, உற்பத்தி, விநியோக செலவுகளை (24ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கில் உள்ள இராணுவ முகாமை அகற்ற கோத்தபாயவிடம் அமெரிக்கா வலியுறுத்து



(கொழும்பு)

வடக்கில் உள்ள இராணுவ முகாம்களை அகற்ற வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தியுள்ளதாக கொழும்பு ஊடகமொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அண்மையில் கொழும்புக்கு விஜயம் செய்த அமெரிக்க பிரதிநிதிகள், பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசும்போதே, வடக்கில் உள்ள இராணுவ முகாம்களை அகற்றுமாறு வலியுறுத்தினர்.

எனினும் இதற்கு பதிலளித்துள்ள பாதுகாப்புச் செயலாளர், இலங்கையில் வடக்கில் போன்றே தெற்கிலும் இராணுவ முகாம்கள் இருப்பதாகவும் அவற்றை அகற்றுவது குறித்து தீர்மானிப்பது, அரச பாதுகாப்புச் சபையே என கூறியுள்ளார்.

அத்துடன் சுதந்திரமான நாடு என்ற வகையில் இலங்கையில் உள்நாட்டு பாதுகாப்பு தொடர்பில் தீர்மானங்களை எடுக்க இலங்கைக்கு சுதந்திரம் உள்ளதாகவும் கோத்தபாய தெரிவித்துள்ளார் என கொழும்பு ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. (ந-8;11)

# இராணுவத்தின் நற்பெயரைக் காப்பாற்ற சுயாதீன விசாரணை நடத்த வேண்டும்

நன்மதிப்பை வென்றெடுக்க இலங்கையில் சுயாதீன விசாரணைகள் நடத்தப்பட வேண்டியது மிகவும் அவசியமானது என சர்வதேச அனர்த்தக் குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை இராணுவம் தனது நற்பெயரை தக்கவைத்துக் கொள்ள வேண்டுமாயின் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சுயாதீன விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென சர்வதேச அனர்த்தக் குழுவின் இலங்கைப் பணிப்பாளர் அலன் கீனன் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பில் சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டுமென்ற அமெரிக்காவின் நிலைப்பாடு வரவேற்கத்தக்கது. இலங்கையில் மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன.

இதற்கு சிலாபத்தில் மீனவர் படுகொலை செய்யப்பட்டமை, நீதிமன்ற வளாகத்தில் கைதி கடத்தப்பட்டமை (24ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மாகாணமட்ட ஒலிம்பியாட் 2ஆவது தெரிவுக்கான பயிற்சி

(யாழ்ப்பாணம்)

மாகாணமட்ட ஒலிம்பியாட் விஞ்ஞானம் 2வது தெரிவுப் பரீட்சைக்காக பயிற்சி முகாம் ஒன்று எதிர் வரும் 21, 22, 23ஆம் திகதிகளில் யாழ் கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும் என வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இப்பயிற்சி முகாமுக்கு பின்வரும் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அமல்ராஜ் ஆரோன் திவ்வியன் மன்னார் சென். சேவியர் ஆண்கள் பாடசாலை, குயின்ரஸ் ஜோயல் மன்னார் சென். சேவியர் ஆண்கள் பாடசாலை, கிருபானந்தன் கஜலக்ஸி யாழ் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை, ஸ்ரீஸ்கந்தராஜா செந்தூரன் வ/ரம்பைக்குளம் மகாவித்தியாலயம், சீலன் அஜந்த் நிதுஷன் சூசை மன்/புனித வளனார் றோ.க. த.வி., பாலகிருஷ்ணன் திஸாந்த் மன்/சென். சேவியர் ஆண்கள் பாடசாலை, ஜெராட் அபிஷன் வ/தமிழ் ம.ம.வி., தங்கரட்ணம் விசாகன் வ/தமிழ் ம.ம.வி., மோகனசேகரன் கயல்விழி யாழ் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை, செந்தில்குமரன் பிரேமி வ/ரம்பைக்குளம் மகா வித்தியாலயம்.

மனோகரன் துஷாந்த் யா/நெல்லியடி ம.ம.வி., சிவகுமார் பிரணவி வ/ரம்பைக்குளம் மகாவித்தியாலயம், கங்காதரன் கஜனன் வ/விபுலானந்தா கல்லூரி, அசோக்குமார் அபிதன் வ/தமிழ் ம.ம.வி., அருள்மாறன் மயூரி யாழ் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை, ஜி. ஆரோன் மெல்வின் யா/சென்.ஜோன்ஸ் கல்லூரி, பரமேஸ்வரன் சஜிகா யா/சாவ. இ.க, மொனாலிஷன் ராஜரட்ணம் யா/சென். ஜோன்ஸ் கல்லூரி, ஆனந்தன் சண்முகப்பிரியா யாழ் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை, நந்தகுமார் வித்தியாசகன் யா/இந்துக் கல்லூரி, ராஜகுமார் விவேகா யா/நெல்லியடி ம.ம.வி., ரங்கநாதன் தர்சிகா வ/விபுலானந்தா கல்லூரி, முகுந்தன் கிஷோத்தமன் வ/தமிழ் ம.ம.வி., கேதீஸ்வரன் கரிகரன் மன்/சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி, மகேந்திரராஜ் அமுதவிழி யா/சுண்டுக்குளி பெண்கள் கல்லூரி. (ந)

# திருடர்களின் கத்திக்குத்துக்கு இலக்கானவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்

(யாழ்ப்பாணம்)

கடந்த மாதம் 31ஆம் திகதி இனந் தெரியாத நபர்களினால் கத்திக் குத்துக்கு இலக்காகிப் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

காரைக்கால் வீதி இணுவில் கிழக்கைச் சேர்ந்த செல்லையா கைலாசநாதன் (வயது67) என்பவரே உயிரிழந்தவராவார்.

பிரஸ்தாப நபர் யாழ். நகரில் உள்ளதனது கடையை மூடிவிட்டு வீடு திரும்பிச் செல்கையில் அவரைப் பின் தொடர்ந்த சிலர் அவர் வைத்திருந்த பணத்தை பறித்தெடுக்கும் முயற்சியில் ஈடுபட்ட போது கத்தியால் குத்தி விட்டு தப்பிச் சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-11)

# பாலைதீவில் விகாரை அமைப்பு கத்தோலிக்க மக்கள் எதிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவை அண்மித்ததாக தனித்தீவாகவுள்ள பாலைத்தீவில் கடற்படையினரால் அமைக்கப்பட்டு வரும் பௌத்த விகாரை தொடர்பில் கத்தோலிக்க மக்களும் மதத்தலைவர்களும் தமது கடுமையான அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

குறித்ததீவு, மண்டைதீவை அண்மித்ததாகவுள்ள பகுதி. எனவே யுத்தம் காரணமாக இந்தத் தீவில் கடற்படையினர் முகாமிட்டிருந்ததுடன் பொதுமக்கள் எவரும் அங்கு செல்ல அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை.

ஆனால் கச்சதீவைப் போன்று இந்தத் தீவிலும் கிறிஸ்தவர்களின் பாரம்பரியமான கத்தோலிக்கத் தேவாலயம் ஒன்று அமைந்துள்ளது.

பாரம்பரியமும் அதிகளவான மக்களால் வருடாவருடம் வழிபாட்டிற்கு உரியதாகவும் இந்தத்தேவாலயம் யுத்தத்துக்கு முன்னர் இருந்தது.

மேலும் கடற்றொழிலாளர்கள் இந்தத்தீவில் ஓய்வெடுக்கும் இடமாகவும், வலைகளை உலர்த்திக்கொள்ளும் இடமாகவும் பயன்படுத்தப்பட்டிருந்தது. இந்நிலையில் யுத்தத்தின் பின்னர் மக்கள் இந்தத்தீவுக்கு அண்மைக் காலமாக சென்று வருகின்றனர்.

இந் நிலையில் இத் தேவாலயத்திற்கு அருகிலேயே தற்போது கடற்படையினரால் பௌத்தவிகாரையொன்று அமைக்கப்பட்டு வருகின்றது. (ந-8,11)

# கைத்தொழில் பேட்டைகளில் உள்ள குறைபாடுகளை நிவர்த்திக்க ஏற்பாடு!

## அமைச்சர் டக்ளஸ் தலைமையில் ஆராய்வு

(கொழும்பு)

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கைத்தொழிற் பேட்டைகளில் காணப்படுகின்ற அடிப்படைத் தேவைகள் தொடர்பில் நேற்று விரிவாக கலந்துரையாடப்பட்டது.

கைத்தொழிற்பேட்டைகள் தற்பொழுது ஏக்கலை, பண்ணை, பல்லேகலை, ஹொரணை, பாணந்துறை போன்ற பகுதிகளில் செயற்பட்டு வருகின்றன.

அச்சுவேலிப் பகுதியில் கைத்தொழிற் பேட்டை விரைவில் மீள ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதற்கான நடவடிக்கைகளை துரித கதியில் மேற்கொண்டு வருகின்றார்.

இக்கைத்தொழில் பேட்டைகளில் பெரிய நடுத்தர மற்றும் சிறிய பரிமாண கைத்தொழில்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தோல், உலோகம், மரம், தும்பு, இறப்பர், சார்ந்த உற்பத்திகள் உணவு உற்பத்திகள் போன்ற பல்வேறு துறைசார்ந்த உற்பத்திகளை மேற்கொண்டு வருகின்ற இக் கைத்தொழிற் பேட்டைகளில் பல்வேறு அடிப்படை வசதிகள் குறைபாடாக காணப்படுவதாக கைத்தொழிலாளர்களால் பல்வேறு கோரிக்கைகள் அமைச்சரிடம் முன்வைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இக் கைத்தொழிற் பேட்டைக்கு நேரடி விஜயங்களை மேற்கொண்டு நிலைமைகளை ஆராய்ந்ததுடன் இவ்விடயம் தொடர்பில் மேலும் ஆராய்ந்தறிந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக உயர்மட்டக்குழுவொன்றை நியமித்தார்.

இவ்வாறு நியமித்துள்ள இக்குழு முன்வைத்துள்ள அறிக்கை தொடர்பில் நேற்று ஆராயப்பட்டதுடன் இந் நிகழ்வில் கலந்து கொண்ட கைத்தொழிலாளர்களினதும் துறைசார் அதிகாரிகளினதும் கருத்துக்களும் கேட்டறியப்பட்டன.

அமைச்சர் டக்லஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்ற இக் கலந் துரையாடலில் அமைச்சின் செயலாளர், மேலதிகச்செயலாளர்கள், கைத்தொழில் அமைச்சு அதிகாரிகள் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தலைவர் உட்பட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். (ந-8,11)

# பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யா/பெரியபுலம் மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.30 மணியளவில் கனகசிங்கம் மண்டபத்தில் பழைய மாணவர் சங்கத் தலைவர் செ.இளங்கோ தலைமையில் நடைபெறவுள்ளது. (ந-11)

# சிவராத்திரியை முன்னிட்டு நாளை பஸ் சேவை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை போக்குவரத்துச் சபையில் இருந்து திருக்கேதீஸ்வரத்திற்கு நாளை திங்கட்கிழமை பஸ் சேவைகள் இடம்பெறவுள்ளதாக பருத்தித்துறை போ.சபையின் முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இச் சேவையானது சிவராத்திரி தினத்தை முன்னிட்டு மேற்குறித்த தினத்தில் காலை 9 மணிக்கும் நண்பகல் 12 மணிக்கும் இடம்பெறவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-3,10)

# மின்சார சபையின் பிந்திய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

இணுவிலிருந்து கோம்பயன் மணல் பகுதிக்கான மின்சாரம் இன்று தடைப்படமாட்டாதென யாழ்ப்பாண மின் அத்தியட்சகர் அறிவித்துள்ளார்.

அதேநேரம் உரும்பிராய், கோண்டாவில், நல்லூர், கந்தர்மடம், ஆரியகுளம் பகுதி, ஸ்ரான்லி வீதி, யாழ். மனோகராச்சந்தி, கச்சேரியடி, கொழும்புத்துறை, பாசையூர், குருநகர் ஆகிய இடங்களில் இன்று மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கெனவே 3 பக்கத்தில் வெளியான செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களிலும் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என்பதை வாசகர்கள் கவனத்தில் கொள்ளவும். (ந)


சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம்

வருடாந்தப் பொதுக்கூட்டம் 2012

காலம் : 26.02.2012
நேரம் : காலை 11.00மணி
இடம் : யாழ். மத்திய கல்லூரி

அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். தனிப்பட்ட அழைப்புக்கடிதம் கிடைக்கப்பெறாவிடினும் இதனை ஏற்று பொதுக்கூட்டத்திற்கு சமுகம் தரவும்.

குறிப்பு : அங்கத்தவர்கள் தமது முகவரியில் மாற்றம் இருப்பின் கீழ்வரும் முகவரியுடனோ அல்லது தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

திரு. பொ.கேதீசன்
28,அம்மன் வீதி, கந்தர்மடம்.
தொ.இல : 0773946501

பொதுச்செயலாளர்,
சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம்

(7481)

Vision Bus Booking Centre

AC
Non AC
Normal
ஆசனங்கள்

இல. 112, தபாற் பெட்டி சந்தி, திருநெல்வேலி.

- யாழ் - கொழும்பு பிரயாண பதிவுகளை வீட்டில் இருந்தவாறே மேற்கொள்ளலாம்.
- எமது திருநெல்வேலி தரிப்பிடத்தில் இருந்தும் பிரயாணத்தை மேற்கொள்ளலாம்.
- கொழும்பு செல்லும் பல்கலைக்கழக மாணவர்களிற்கு விசேட கட்டண கழிவு.


HOT LINE - 0779210136

(7531)

காணி துப்புரவு செய்தலும் மட்டப்படுத்தலும்
(Land Clearing & Leveling)

Excavator இயந்திரம் மூலம் நியாய விலையில்

உங்கள் காணிகள் துப்புரவு செய்து மட்டப்படுத்தி தரப்படும். மணித்தியால அடிப்படையில் அல்லது ரொக்கத்திலும் செய்து தரப்படும்.



தொடர்பு:-
0777 908451

(7530)

வேலை வாய்ப்பு

யாழ். நகரில் திறந்திருக்கின்ற Marketing Company க்கு புதிதாக ஆட்கள் சேர்த்துக்கொள்ளப்படவிருக்கின்றனர். 6 மாதகால Field (வியாபார) பயிற்சிநெறியுடன், எவ்வித பரீட்சையுமின்றி பயிற்சியின் பின்னர் ரூ. 35000/- சம்பள அளவுத்திட்டத்துடன் ஒரு அலுவலகமும் உங்களுக்காக தரப்படும்.

தகைமைகள்:- O/L வயதெல்லை:- 24 ற்கு கீழ்ப்பட்டோர்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-
Thailand Dynamic Marketing
இல. 148, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். மத்திய கல்லூரிக்கு அருகாமையில்)

வார நாட்களில் காலை 11.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00மணி வரை எமது அலுவலகம் திறந்திருக்கும்

(7528)

மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும், கனடா நிரந்தர பிரஜாவுரிமையுடைய் கௌரவ குடும்பத்தை சேர்ந்த பொறியியலாளர் 49வயதும் 5' 10" உயரமுள்ள மணமகனுக்கு அழகும் இளமையுமான மண மகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர் (தற்போது யாழ் வந்துள்ளார்).

தொடர்பு:- 077 5671922
Email :goodguess99@hotmail.com

(7526)

Room வாடகைக்கு கொடுக்கப்படும்

பெண்களுக்கு மட்டும். தனி ஒருவருக்கு 7000/-. மூன்று பேருடன் சேர்ந்திருப்பதாயின் ஒருவருக்கு 3000/-. பரமேஸ்வரா சந்திக்கு அருகில்.

T.P. 0771304944

(7532)

காணி விற்பனைக்கு

கண்டி வீதி (A9) நாவற்குழியில் (அரச உணவுக் களஞ்சியத்திற்கு எதிரில்) நான்கு பரப்பு விஸ்தீரணமும் சுற்றிவர முட்கம்பி வேலியிடப்பட்டு நல்ல தண்ணீர் கிணற்றுடன் புதிதாக அமைக்கப்பட்ட 27'x37' பரப்பளவுடைய முதற் தளம் பிளாற் இடப்பட்டு மூன்று மாடிக்கான அடித்தளம் இடப்பட்ட கட்டிடத்துடன் கூடிய காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு :-
0773080344

(7540)

EASY ENGLISH
ஆசிரியர்: சண்முகம் முத்துலிங்கம்
YAALH ENGLISH ACADEMY
யாழ். நகரில் வகுப்பிட அனுசரணை:
புதிய உயர் கல்லூரி
விபரங்களுக்கு :0773212711

(7379)

# மல்லாவி எரிபொருள் நிலையம் விரைவில் திறக்கப்படவுள்ளது

(மல்லாவி)

துணுக்காய், மாந்தை கிழக்கு பிரதேச மக்களின் நன்மை கருதி துணுக்காய் பல நோக்கு கூட்டுறவு சங்கத்தினால் மல்லாவி நகரத்தில் உள்ள அதன் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் எரிபொருள் விநியோகம் ஆரம்பிக்கப்பட்ட வேலைகள் நிறைவடைந்த நிலையில் வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக துணுக்காய் பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் தலைவர் த.பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

கடந்த வருட இறுதிப் பகுதியில் துணுக்காய் பல நோக்கு கூட்டுறவு சங்கத்தினால் மல்லாவி நகரத்தில் மண்ணெண்ணெய், டீசல் ஆகியவற்றின் எரிபொருள் விநியோகம் ஆரம்பிக்கப்பட்ட நிலையில் பொதுமக்கள், அரச உத்தியோகத்தர்கள் பெற்றோலுக்காக பலமைல் தூரம் சென்றும், பணவிரயம் செய்தும் மாங்குளத்திலும் கிளிநொச்சியிலும் கொள்வனவு செய்வதை கருத்தில் கொண்டு இந்த பெற்றோல் விநியோக சேவையை வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

(அ-3-15)

# கண்டிய நடன அளிக்கைகள்

(கொழும்பு)

கொழும்பிலுள்ள அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயத்தின் அனுசரணையுடன் யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியினால் இரண்டாவது தடவையாக கண்டிய நடன கற்கை நெறியில் பயிற்சிபெற்ற மாணவ மாணவிகள் வழங்கும் கண்டிய நடன அளிக்கைகள் இன்று ஞாயிறு மாலை 4 மணிக்கு வலி. தென்மேற்கு பிரதேச சபையின் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலைத்தூது அழகியல் கல்லூரியின் அதிபர் திருமதி அஞ்சலா அல்போன்ஸ் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் சு.முரளிதரனும், சிறப்பு விருந்தினராக வலி. தென்மேற்கு பிரதேசசபையின் தவிசாளர் அ.ஜெப நேசன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

(அ)

# பாம்பு தீண்டி சாரதி மரணம்

நித்திரையில் இருந்தவேளை விஷப்பாம்பு தீண்டி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு பருத்தித்துறை தும்பளைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இ.போ.ச.பஸ் சாரதியான குறித்த நபர் தனது கடமையை முடித்து விட்டு வீட்டிற்குச் சென்று உறக்கத்தில் இருந்தவேளை பாம்பு தீண்டியுள்ளது.

இச்சம்பவத்தில் அப்பகுதியைச் சேர்ந்த கோபாலு சுதாகரன் (வயது 31) என்ற நபரே உயிரிழந்துள்ளார். இவரது சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. (அ-3-10-24)

# வாரம் ஒரு தகவல்

## கணக்கு சரியா?

"சேர்! எங்களுடைய அப்பாதான் என்னை உங்களிடம் அனுப்பி வைத்தார்!"

"என்ன விடயம்?"

நான் கணித பாடத்தில் குறைவான புள்ளிகளை பெற்று வருகிறேன் என்று அப்பா சொல்கிறார். அதற்காக உங்களிடம் படிப்பதற்காக அனுப்பி வைத்தார்.

பொருத்தமான இடத்துக்குதான் அவர் உன்னை அனுப்பி வைத்துள்ளார். என்னிடம் வந்துள்ள நீ கவலைப்படவேண்டிய தேவை இல்லை. ஏனெனில் கணித பாடத்தில் அதிக புள்ளிகளைப் பெற்றுக் கொள்வாய் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. இருந்தாலும் உனக்கு புத்திமதி சொல்கிறேன் கேள் என்றார்.

"என்ன சேர்?" சொல்லுங்கள் என்றான்.

"நீ தினமும் வெண்டிக்காய் சாப்பிடவேண்டும்!"

"ஏன்?"

ஞாபக சக்திக்கு அது நல்லது "எல்லோரும் அப்படித்தான் சொல்கிறார்கள் அது உண்மையா சேர்?"

கலிபோர்னியா பல்கலைக்கழக விஞ்ஞானி கேரிலிங் என்பவரும் அப்படித்தான் சொல்லியுள்ளார்.

அது எப்படி சேர்?

மனிதனுடைய அபாரமான நினைவாற்றலுக்கு மூளையிலேயுள்ள "கால்பெய்ன்" என்ற நொதியமே காரணம் என்றார் அவர். இந்த கால்பெய்னை ஊக்குவிக்கின்ற மூலப்பொருள் வெண்டிக்காயிலேயே இருக்கிறது. அதனாலேயேதான் வெண்டிக்காய் சாப்பிடச் சொல்கிறார்கள்"

நான் அந்த அளவுக்கு குறைவான புள்ளிகளை பெறுபவன் அல்ல சேர். அப்பாதான் அப்படி சொல்கிறார்.

சரி நான் இப்பொழுது கேள்விகளை தொடுக்கின்றேன். பதிலை சொல் என்றார்.

"சரி சேர் என்றான்"

உங்களுடைய அப்பா என்னிடம் 100 ரூபாய் கடனாக வாங்கியிருந்தார். மாதம் 10 ரூபா வீதம் அதை எனக்கு தரும்படி கூறினேன். தற்போது ஆறு மாதம் ஆகிவிட்டது. இப்போது அவர் எனக்கு எவ்வளவு பணம் தர வேண்டும்.

"எதுவும் இல்லை சேர்!" என்றான். "சரியாகப் பார்த்து சொல் என்றார்"

"சரியாகத் தான் சொல்கிறேன் சேர் என்றான்!"

"உனக்கு இதுவே சொல்லத் தெரியவில்லையே!" என்றார்.

உங்களுக்கு சேர் எங்களுடைய அப்பாவின் குணமே தெரியவில்லையே என்றான்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# நூல் வெளியீட்டுவிழா

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் எழுதிய ஆறுமுகநாவலர் என்ற சிறுவர்களுக்கான நூல் வெளியீட்டு விழா நாளை திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரிக்கு அருகில் உள்ள அன்பொளி கல்வியகத்தில் வே.அன்பழகன் தலைமையில் இடம்றெவுள்ளது.

ஐந்தாம் குரவர் எனப் போற்றப்படும் நாவலரின் வாழ்வும் வளமும் இந்நூலில் எடுத்தாளப்பட்டுள்ளன. (அ-2)

# மாலை நேர வீதி ஓட்டம்

(யாழ்ப்பாணம்)

யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய் வல்லுநர் போட்டியின் முன்னோடி நிகழ்ச்சியாக 5 கிலோ மீற்றர் தூரம் கொண்ட மாலை நேர வீதி ஓட்டம் நடைபெறவுள்ளது.

இவ்வீதியோட்ட நிகழ்வை இன்று மாலை 5 மணிக்கு யாழ்.கல்வி வலய உடற்கல்வி பணிப்பாளர் சண்.தயாளன் ஆரம்பித்து வைப்பார். (அ)

# மின்தடைபற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

வீதி அகலிப்பு பணிகளுக்காக உயர் அழுத்த மின்விநியோக மார்க்கங்களை மாற்ற வேண்டியிருப்பதாலும் மின்விநியோக மார்க்கங்களில் பராமரிப்பு வேலைகள் செய்யும் பொருட்டும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணிவரை மின் விநியோகம் தடைப்படும் என யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இதற்கமைய கரந்தன், நீர்வேலி, சிறுப்பிட்டி, கோப்பாய், இருபாலை, முடமாவடிப்பகுதி, பாற்பண்ணைப்பகுதி, திருநெல்வேலி நகரம், மருத்துவபீட பிரதேசம், ஆடியபாதம் வீதி, கொக்குவில் சந்தி வரையான பிரதேசம், கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம் ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்பட்டிருக்கும் என அவர் தெரிவித்துள்ளார். (அ)

# இராசி பலன்

19.02.2012

(மாசி 7, ஞாயிற்றுக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.32 மணிக்கு

திரயோதசி பின்னிரவு 4.43 மணிவரை

உத்தராடம் முன்னிரவு 11.56 மணிவரை

இராகுகாலம் 5.02-6.32 மணிவரை

சுபநேரம் 9.32-11.02 மணிவரை

பிரதோச விரதம்.

**மேடம்** குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும், தொழில் முன்னேற்றத்திற்காக அதிகம் பாடுபடுவீர்கள், சிவதூதன் வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், கௌரவமான நாள்.

**இடபம்** நந்தி வழிபாட்டால் நலம் காண வேண்டிய நாள், செய்தொழிலில் சிறப்படைய வேண்டிய நாள், நட்பு வட்டம் அதிகரிக்கும், திடீர் பயணங்களால் நன்மையுண்டு, புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

**மிதுனம்** வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், பேச்சில் நிதானம் தேவை, எடுத்த முயற்சிகளில் சிறிது தாமதம் ஏற்படலாம், பயணங்களில் விழிப்புணர்ச்சி தேவை, மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும்.

**கடகம்** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழும் நாள், உங்கள் கருத்துக்களை பலரும் கேட்டு நடக்க முன்வருவர், கல்யாணக் கனவுகள் நனவாகும், குடும்பத்தினரின் தேவைகளை பூர்த்தி செய்ய முன்வருவீர்கள்.

**சிங்கம்** வழிபாட்டால் செல்வவளம் பெருகும் நாள், பழைய கடன்களை வசூலிக்க எடுத்த முயற்சி வெற்றி பெறும், கடிதங்கள் மூலம் அனுகூலமான தகவல்கள் வந்து சேரலாம்.

**கன்னி** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், சுறுசுறுப்பாக செயற்படுவீர்கள், பிள்ளைகளால் ஏற்படும் செலவுகளைக் குறைக்கும் எண்ணம் மேலோங்கும், பூர்வ புண்ணிய கருமங்களில் நாட்டம் காட்டுவீர்கள்.

**துலாம்** நீண்டகாலமாக வாங்க நினைத்த பொருளை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, தாய் வழி ஆதரவு பெருகும், பணத்தேவைகள் பூர்த்தியாகும், வழிபாட்டில் குதூகலம் காண வேண்டிய நாள்.

**விருச்சிகம்** பெரிய மனிதர்கள் வீடு தேடி வருவர், பாராட்டும் புகழும் கூடும், நண்பர்கள் மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரலாம், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள்.

**தனுசு** எதிர்பாராத தனவரவுகள் வந்து சேரலாம், அரசியல் செல்வாக்கு மேலோங்கும், கொடுக்கல்- வாங்கல்கள் ஒழுங்காகும், இல்லத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான அறிகுறி தோன்றும்.

**மகரம்** உடல் நலம் சீராகும், புண்ணிய காரியங்களில் நாட்டம் செல்லும், பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டும் எண்ணம் மேலோங்கும், வழிபாட்டால் வளர்ச்சி கூடும் நாள்.

**கும்பம்** சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், மனக்குழப்பங்கள் அதிகரிக்கும், காரிய அலைச்சல்கள் அதிகரித்தாலும் ஆதாயமும் கிடைக்கலாம், சயன சுகக்குறைவான நாள்.

**மீனம்** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும் நாள், கூட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும், நந்தி வழிபாடு நன்மை தரும், நண்பர்கள் நல்ல தகவல்களைக் கொண்டு வந்து சேர்ப்பர்.

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 35 | 30 | 30 |
| உருளைக்கிழங்கு | 60 | 60 | 60 |
| பச்சைமிளகாய் | 40 | 50 | 65 |
| தக்காளி | 20 | 30 | 30 |
| மரவள்ளிக்கிழங்கு | 30 | 30 | 25 |
| கோவா | 30 | 20 | 30 |
| கரட் | 40 | 60 | 40 |
| பூசணி | 35 | 40 | 35 |
| புடோல் | 20 | 60 | 40 |
| வாழைக்காய் | 40 | 30 | 30 |
| சின்ன வெங்காயம் | 60 | 40 | 50 |
| பெரிய வெங்காயம் | 65 | 60 | 60 |
| பாகற்காய் | 50 | 80 | 60 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 40 |
| கரணைக்கிழங்கு | -- | 40 | -- |
| பயற்றங்காய் | 140 | 100 | 100 |
| லீக்ஸ் | 70 | 80 | 60 |
| பீற்றூட் | 35 | 20 | 30 |
| கறிமிளகாய் | 70 | 60 | 60 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 350 |
| போஞ்சி | 30 | 30 | 20 |
| கத்தரி தம்புள்ள | 15 | 20 | 15 |
| கீரை - 1 பிடி | 5 | 10 | 10 |
| தேசிக்காய் | 30 | 40 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 15-30 | 20 | 25 |
| வெங்காயப் பூ | 50 | 60 | 70 |

# ஐ.நா.சபை இலங்கையில் இடம்பெற்ற போர் குற்றங்களை விசாரணை செய்ய வேண்டும்

## ஐரோப்பிய நாடாளுமன்றில் தீர்மானம்

(கொழும்பு)

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைக் கழகத்தில் எதிர்வரும் 27 ஆம் திகதி 19 ஆவது அமர்வை நோக்கி பலரது கவனமும் குவிக்கப்பட்டுள்ள நிலையில் நேற்று முன்தினம் ஐரோப்பிய பாராளுமன்றத்தில் தமிழ் மக்களின் கோரிக்கைக்கு சாதக மான தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.**

நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் படி ஐக்கிய நாடுகள் சபை இலங்கையில் இடம் பெற்ற அனைத்து யுத்தக் குற்றங்களுக்கெதிரான விசாரணை ஒன்றினை நடத்த வேண்டுமென்று கோரியுள்ளது.

இலங்கையில் நடந்த யுத்தக் குற்றங்களுக்குப் பொறுப்பானவர்களுக்கு எதிரான நடவடிக்கை மேலும் வலுப்படவேண்டிய தேவைக்கு ஆதரவு வழங்கும் அதேவேளை ஐ.நா. செயலாளர் நாயகம் நியமித்த குழுவின் அறிக்கை வழங்கிய ஆலோசனைப்படி ஐ.நா. அனைத்து குற்றங்களையும் விசாரிக்க ஒரு விசாரணைக் குழுவை நியமிக்க வேண்டும் என்பதை கோருகின்றோம்.

பேச்சுரிமை, மாறுபட்ட கருத்து வைப்பதற்கான உரிமை முதலான உரிமைகளை மேம்படுத்துவதற்கு ஐ.நாவின் விசேட அதிகாரியை அழைக்க வேண்டும் என்று இலங்கை அரசை அழைக்கின்றோம் என்ற தீர்மானத்தை ஐரோப்பிய பாராளுமன்றம் நிறைவேற்றியுள்ளது.

இத்தீர்மானம் நிறைவேற்றுவதை தடுப்பதற்கு இலங்கை அரசு பல்வேறு இராஜதந்திர வழியிலான குறுக்கீடுகளை ஏற்படுத்தி தமக்குச் சார்பான ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலம் இத் தீர்மானத்தின் மீது செல்வாக்குச் செலுத்தி அதனைச் சிதைக்க முற்பட்டது.

குறிப்பாக சிங்களவரான நிராஜ் தேவா போன்ற பழைமைவாத கட்சியின் ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்கள் இலங்கைக்கு ஆதரவாக தீர்மானத்தை மாற்ற எத்தனித்தனர்.

எல்.எல். ஆர்.சி. பரிந்துரைகளை பாராட்டும் வகையான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு இலங்கை அரசு தனது அனைத்து சக்திகளையும் பாவிக்க முற்பட்ட வேளையில் பிரித்தானிய தமிழர் பேரவை, பிரித்தானிய தமிழ் கொன்சவேட்டிவ், தமிழ் சொலிடாரிற்றி போன்ற அமைப்புக்களுடன் இணைந்து அழுத்தங்களை மேற்கொண்டு இலங்கையின் மேற்படி சதியினை முறியடித்து ஒப்பீட்டளவில் தமிழர் தரப்பிற்கு சாதகமான தீர்மானத்த்தை ஐரோப்பிய பாராளுமன்றத்தில் கொண்டு வருவதற்கு எடுத்த முயற்சி வெற்றியளித்துள்ளது. (அ-2)

## ஆர்ப்பாட்டம் நடத்த நீதிமன்றம் தடை

(கொழும்பு)

உயிரிழந்த சிலாபம் மீனவரின் இறுதிக் கிரியைகள் இடம்பெறும் நேற்றைய தினத்தில் எந்தவொரு ஆர்ப்பாட்டத்தையும் நடத்தக்கூடாது என நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

சிலாபம் பொலிஸார் நேற்றைய தினம் நீதிமன்றில் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய சிலாபம் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

எவ்வித வன்முறைகளும் இன்றி அன்னாரது இறுதி கிரியைகளை நடத்துமாறு பொலிஸார் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-2)

# தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழினப் பெண்களுக்கு ஆளுமையையும் அதிகாரத்தையும் வழங்கினார்கள்

## கனேடிய செனட்சபை புகழாரம்

தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழ் பெண்களுக்கு அதிகாரத்தையும் ஆளுமையையும் தாராளமாகக் கொடுத்திருந்தார்கள் என்று இலங்கை விவகாரங்களில் அதீதமாக ஈடுபட்டுவரும் கனேடிய செனட் மொபினா ஜபார் தெரிவித்தார்.

கனேடிய மனிதவுரிமை மையம் கனேடிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் செனட்டர்களுக்குமென நடத்திய மாநாட்டில் மனித வுரிமை மாநாட்டில் கலந்துகொண்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கைக்கு சமாதான காலத்திலும் தற்போதும் பல தடவைகள் விஜயம் செய்த மொபினா ஜபார் கள நிலைமைகளை தெளிவுபட எடுத்துக் கூறியதுடன் பேச்சுவார்த்தை மூலமான ஒரு தீர்விற்கான அவசியம் அங்கேயிருப்பதையும் சூடானிற்காக கனடாவின் பிரதிநிதியாக இருந்த இந்தச் செனட் சுட்டிக் காட்டினார்.

குறிப்பாக பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்ட புலிகளின் பெண்கள் குழுவினர் தங்கள் முடிவுகளை தாங்களே எடுக்கும் அதிகாரமும் ஆளுமையும் கொண்டவர்களாக இருந்தார்கள் என்றும் ஆனால், அரச தரப்பில் கலந்துகொண்ட பெண்களோ தங்களின் முடிவிற்காக மேலிடத்தின் பதிலுக்காக காத்திருந்தார்கள் என்பதையும் சுட்டிக்காட்டினார்.

இலங்கையிலுள்ள பெண்களுடன் தொடர்ந்து வேலைத்திட்டங்களில் தான் ஈடுபட்டு வருவதால் கனேடிய மனிதவுரிமை மையத்தின் இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை பெருமையாக கருதுவதாகவும் தெரிவித்த செனட் ஊஒரு போரின் முடிவில் ஒரு இணக்கப்பாடு ஏற்பட வேண்டுமென்பதே உலக நியதியாக இருப்பதைச் சுட்டிக்காட்டியதோடு எங்களுக்கு விருப்பமில்லாத ஒரு முடிவு போரின் முடிவில் ஏற்பட்டதையும் இனங்களுக்கிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான தேவை இன்னமும் நிறையவே இருக்கிறது என்பதையும் இன்னமும் தமிழினத்திற்கெதிரான நிகழ்வுகள் தொடர்வதையும் தெரிவித்தார்.

பல போரியல் தேசங்களின் பேச்சுக்களை அவதானித்ததிலிருந்து இலங்கையில் இடம் பெற்ற விடுதலைப்புலிகள்-இலங்கை பேச்சுவார்த்தையிலேயே பெண்களுக்கு அதிக உரிமை வழங்கப்பட்டிருந்ததை தான் உறுதிபடக் கூறமுடியுமெனவும் அந்தப் பேச்சு துரதிர்ஷ்ட வசமான ஒரு போரில் முடிவுற்றதையும் சுட்டிக்காட்டினார்.

கனேடிய அரசில் மட்டத்தில் ஈழத்தமிழர் விவகாரத்தில் மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு உதவிய அமைப்பு என கனடாவின் சகல கட்சிகளினதும் பாராட்டைப் பெற்ற கனேடிய மனிதவுரிமை ம்மயத்தின் நிகழ்வுகளின் மூலம் இலங்கை சார்ந்த ஆதரவுச் செயற்பாடுகளில் ஈடுபட்ட அரசியல்வாதிகள் கூட மாற்றம் பெற்று தமிழர்களின் நலன்களுக்காக வாதாடும் நிலை உருவாகியுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. (அ-2)

# பறவைக்காய்ச்சல் வைரஸ் குறித்த முடிபுகளை வெளியிடுவதில் தாமதம்

(கொழும்பு)

சர்ச்சைக்குரிய எச்5என்1 பறவைக் காய்ச்சல் வைரஸ் தொடர்பான ஆராய்ச்சியை வெளியிடுவது தொடர்பான முடிவினை நிபுணர்கள் தாமதப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இது வெளியிடப்படும் பட்சத்தில் உயிரியல் பயங்கரவாதிகளால் அவை தவறாக பயன்படுத்தப்படலாம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதனை முழுமையாக வெளியிடுவது தொடர்பாக மேலதிக கலந்துரையாடல் இடம் பெற வேண்டுமென ஜெனீவாவில் நடைபெற்ற உலக சுகாதார ஸ்தாபனத்தின் பேச்சுவார்த்தையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே பேச்சுவார்த்தை நிறைவடையும் வரை காத்திருப்பதாக இதனை வெளியிட விரும்பும் இரண்டு பத்திரிகைகளில் ஒன்று குறிப்பிட்டுள்ளதாக பி.பி.சி.செய்தி வெளியிட்டுள்ளது.

பயங்கரவாதிகள் இந்த வைரசினை பயன்படுத்தலாம் என்ற அச்சம் காரணமாக ஆராய்ச்சியின் முக்கியமான பகுதிகளை வெளியிட வேண்டாம் என குறித்த பத்திரிகைகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தன. எனினும் இது கல்விக்கான உரிமையை மறுப்பதாக சில விஞ்ஞானிகள் எதிர்ப்பு வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. எச் 5 என் 1 வைரஸ் மிகவும் இலகுவாக மக்களிடையே பரவும் என குறித்த ஆராய்ச்சியில் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# நாமல் உள்ளடங்கிய தூதுக்குழு பாலஸ்தீன நாட்டுக்கு விஜயம்

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ மற்றும் பிரதியமைச்சர் பைசர் முஸ்தபா உள்ளடங்கிய அரசு உயர் மட்ட தூதுக்குழுவொன்று நேற்று மூன்று நாள் உத்தியோகபூர்வமாக பாலஸ்தீனத்திற்கு விஜயம் செய்யவுள்ளதாக வெளிவிவகார அமைச்சின உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

பாலஸ்தீன அரசாங்கத்தின் அழைப்பின் பேரிலேயே இத்தூதுக் குழுவினர் பாலஸ்தீனத்திற்கு விஜயம் மேற்கொள்கின்றதாக அவர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் விசேட தூதுவராகவே நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ பாலஸ்தீன விஜயம் மேற்கொள்வதாக அவர் மேலும் தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ விஞ்ஞான தொழிநுட்ப பிரதி அமைச்சர் பைசர் முஸ்தபா நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹன புஷ்ப குமார மற்றும் வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாரத்ன அமுனுகம ஆகியோரும் இக்குழுவில் உள்ளடங்குகின்றனர்.

இதேவேளை இஸ்ரேலிய நாடாளுமன்றத்தின் அழைப்பின் பேரில் இலங்கை நாடாளுமன்ற குழுவொன்று கடந்த ஜனவரி 29 ஆம் திகதி இஸ்ரேலுக்கு விஜயம் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ-2)



நெடுந்தீவு முகிலனின் பயணிகள் கவனத்திற்கு எனும் நூல் வெளியீட்டு விழா அண்மையில்யாழ்.பஸ்நிலையத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சிகரம் பணிப்பாளர் றுஷாங்கன் நூலினை வெளியிட்டு வைக்க சொப்பாங் உரிமையாளர் பெற்றுக் கொள்வதனையும் அருகில் நூலின் ஆசிரியர் முகிலன் நிற்பதையும் ஏனைய விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

# இலங்கை போர்க்குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணை அவசியம்

## தன்னார்வத்தொண்டு நிறுவனங்கள் வலியுறுத்து

**இலங்கை தொடர்பில் சர்வதேச விசாரணைப் பொறிமுறையொன்று உருவாக்கப்பட வேண்டுமென தன்னார்வத்தொண்டு நிறுவனங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.**

**எதிர்வரும் 27 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை அமர்வுகளின் போது சுயாதீன சர்வதேச விசாரணைப் பொறிமுறைமை ஒன்றை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென சுட்டிக்காட்டியுள்ளன.**

சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமை கண்காணிப்பகம், காற்டர்நிலையம்,பிரஜைகளுக்கான சர்வதேச தீர்வுகள், ஜனநாயகக் கூட்டமைப்புத் திட்டம், சுதந்திர இல்லம், மகளிர் உரிமை பெரும்பான்மை பேரவை, உள்ளிட்ட உலகின் முன்னணி தன்னார்வத்தொண்டு நிறுவனங்கள் கூட்டாக இணைந்து அமெரிக்காவிடம் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளன .யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்கள் உரியமுறையில் விசாரணை செய் யப்பட்டு நீதியை நிலை நாட்ட அமெரிக்கா நடவடிக்கை எடுக்கவேண்டுமென கோரப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு அறிக்கை உள்ளிட்ட பல்வேறு சர்வதேச அறிக்கைகளில் யுத்தக் குற்றச் செயல்கள் இடம் பெற்றதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என அந்த அமைப்புக்கள் குறிப்பிட்டுள்ளன.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் அறிக்கையை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளவில்லை என தன்னார்வத்தொண்டு நிறுவனங்கள் குறிப்பிட்டுள்ளன.

சுயாதீன விசாரணைகளின் மூலம் குற்றச் செயல்களுக்கு தண்டனை வழங்கும்பொறிமுறைமை ஒன்றை உருவாக்கி பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் வழங்க வேண்டியது மனித உரிமைப் பேரவையின் கடமையாகும் என சுட்டிக்காட்டியுள்ளன. (அ-2)

# பனைவள ஆராய்ச்சி நிலையம் தொடர்பில் கலந்துரையாடல்



யாழ். கைதடியில் அமைக்கப்பட்டு வரும் பனை அபிவிருத்தி சபைக்குரிய வனவள ஆராய்ச்சி நிலையம் கட்டிமுடிக்கப்படும் நிலையில் இருப்பதால் மேற்படி கட்டடத்திற்கான இயந்திரங்கள், தளபாடங்கள், வாகனங்கள் உட்பட ஏனைய அனைத்து வசதிகளும் எதிர்வரும் மே மாதம் பூர்த்தி செய்யப்படவுள்ளதாக இந்திய தூதரக செயலாளர் மோகன் தெரிவித்துள்ளார்.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழுள்ள பனை அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையம் தொடர்பான கலந்துரையாடல் நேற்று கொழும்பிலுள்ள இவ் அமைச்சின் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது மேற்படி கருத்துக்கள் பரிமாறப்பட்டன. அங்கு மேலும் தெரிவிக் கப்பட்ட கருத்துக்கள் வருமாறு,

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களது ஆலோசனைக்கமைய சென்னை மற்றும் கேரள திருவனந்தபுரத்தில் அமையப் பெற்றுள்ள பனைவள ஆராய்ச்சி நிறுவனங்களில் தமிழக விவசாய பல்கலைக்கழகத்துடன் இணைந்த பனை வள அபிவிருத்தி சார்ந்த பயிற்சிகளை எமது நாட்டவர்களுக்கு வழங்க இந்தியா முன்வந்துள்ளது.

அதுமட்டுமல்லாமல் இயந்திராதிகள் கொண்டுவரப்பட்டு பொருத்தப்படுவதுடன் அதுசார்ந்த இயக்கும் அடிப்படை பயிற்சிகளும் இந்தியத் தொழில்நுட்பவியலாளர்களால் வழங்கப்படவுள்ளது.

மீளச் செயற்படுத்தப்படவுள்ள மேற்படி பனைவள ஆராய்ச்சி நிலையத்திற்கென புதிதாக ஆளணிகளை இணைத்துக்கொள்ளும் முகமாக அதற்கான அனுமதி பெறப்படுவது தொடர்பிலும் இங்கு அவதானம் செலுத்தப்பட்டது.

இதுவரையில் அநேகமாக பனை விதைகளே நட்டுவந்த நிலையில் அவை போதிய பயன்தருவதில்லை என்பதால் அமைச்சர் ஆலோசனைக்கமைய பனை விதை நாற்று மேடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு நாற்று மேடைகளில் பதியம் செய்யப்பட்ட ஒரு இலட்சம் பனங்கன்றுகளை இவ்வருடம் நடுவதற்கான ஏற்பாடுகள் பனை அபிவிருத்தி சபையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பனை வளம் செழித்து வளரும் பகுதிகளில் அரச காணிகளில் பனந்தோப்புகளை உருவாக்கும் அதே வேளை இத்தோப்புக்களில் ஊடு பயிர் களை இனங்கண்டு அவற்றைப் பயிரிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

பனை வளம் சார்ந்த ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளுக்கு வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் உதவிகளைப் பெறுவதுடன் இத மூலம் நிபுணத்துவ பயிற்சிகளை வழங்குவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

இதனூடாக பழச்சாறு, பனங்களி, மதுசார உற்பத்தி மற்றும் ஏனைய் பனைசார் உற்பத்திகள் மேம்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# வவுனியா அதிபர்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கு

(வவுனியா)

ஓமந்தை கனேடிய செஞ்சிலுவைச் சங்கமும் கல்வி அமைச்சும் இணைந்து சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுக்கும் நோக்கில் வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் பாதுகாப்பாக இருப்போம் என்னும் தொனிப்பொருளிலான சிறுவர்களுக்கான நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கொன்று வவுனியா தெற்கு பாடசாலை அதிபர்களுக்கு வலயக்கல்விப் பணிமனையில் ஆலோசனை வழிகாட்டல் ஆசிரிய ஆலோசகர் ஆறு சுபாஸ்கரன் தலைமையில் வியாழனன்று இடம்பெற்றிருந்தது.

இதன்போது சிறுவர்கள் எதிர்நோக்கும் பாலியல் துஷ்பிரயோக நடவடிக்கைகளை தடுப்பது மற்றும் அவற்றை இனங்காணல் தொடர்பான கருத்துரைகள் வழங்கப்பட்டதுடன் துஷ்பிரயோக நடவடிக்கைகள் மற்றும் அதிபர்கள் தமது சமூகத்தில் எதிர்கொண்டு வரும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இந்நிகழ்வுக்கு வவுனியா தெற்கு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சேமராஜா, பிரதிக்கல்விப் பணிப்பாளர் திருமதி. நா. மாணிக்கவாசகம், கோட்டக்கல்விப் பணிப்பாளர் எம்.பி .நடராஜா, கனேடிய செஞ்சிலுவைச் சங்கத்தின் சிரேஷ்ட தமிழ்மொழிமூல பயிற்றுனர் திருமதி தனலக்சுமி றொபின்சன், வடமாகாண உள சமூக வள நிலைய உதவி முகாமையாளர் ஆனந்த நடராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ-2)

# காசநோய் தினத்தை முன்னிட்டு கட்டுரை, ஓவியப் போட்டிகள்

உலக காசநோய் தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் தேசிய மட்டத்திலான கட்டுரைப் போட்டியும் ஓவியப் போட்டியும் எதிர்வரும் மார்ச் மாதம் 24 ஆம் திகதி இடம் பெறவுள்ளதாக யாழ்ப்பாண மார்பு நோய் சிகிச்சை நிலைய யாழ். மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி டாக்டர் சி.எஸ். யமுனா நந்தா அறிவித்துள்ளார்.

மேற்படி இரு போட்டிகளும் எமது எதிர்காலச் சந்ததிக்கு காசநோயினை அளிக்கமாட்டோம் என்ற கருப் பொருளினைக் கொண்டவையாகவே அமையவுள்ளது.

கட்டுரையானது ஆயிரத்து 200 தொடக்கம் ஆயிரத்து 1500 சொற்களை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும். இதில் பிரிவு 1 இல் 10-14 வயதிற்குட்பட்டவர்களும் பிரிவு 2 இல் 15-19 வயதிற்குட்பட்டவர்களும் பிரிவு 3 இல் 19 வயதிற்கு மேற்பட்டவர்களும் உள்ளடக்கப்படவுள்ளனர்.

ஓவியமானது 17'' x 23'' அளவினை உடையதாக இருத்தல் வேண்டும்

ஓவியம் வரையும்போது எண்ணெய் கலர் வர்ணத்தினை பாவிப்பது நன்று.

இதில் பிரிவு 1 இல் 10-14 வயதிற்குட்பட்டவர்களும் பிரிவு 2 இல் 15-19 வயதிற்குட்பட்டவர்களும் பிரிவு 3 இல் 19 வயதிற்கு மேற்பட்டவர்களும் பங்கேற்கலாம்.

அத்துடன் 19 வயதிற்குட்பட்டவர்கள் பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தலுடனும் 19 வயதிற்கு மேற்பட்டவர்கள் கிராம சேவையாளரின் உறுதிப்படுத்தலுடனும் பெயர், பிறந்த திகதி தொலைபேசி இலக்கம், முகவரி என்பவற்றை உள்ளடக்கிய படிவத்தினை பூர்த்தி செய்து பொறுப்பதிகாரி மார்பு நோய் சிகிச்சை நிலையம் என்ற முகவரிக்கு எதிர்வரும் மார்ச் மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் அனு ப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

அத்துடன் போட்டியாளர்கள் எந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்களோ அவர்கள் அந்தந்த மாவட்டத்திலுள்ள மார்பு புற்றுநோய் சிகிச்சை நிலையத்திற்கு தங்கள் ஆக்கங்களை மேற்படி விலாசமிட்டு அனுப்பிவைக்குமாறு அவர் குறிப்பிட்டுள்ளார். கடந்த 2011 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட காசநோய் தினப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு தேசிய மட்டத்திலான சான்றிதழும் பணப்பரிசும் சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டது.

இதில் பரிசில் பெற்ற மாணவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு, பி.வாகினி (அரசடி வீதி,நவாலி தெற்கு, மானிப்பாய்) கே.பிறயத் (யாழ்ப்பாணக்கல்லூரி),ஆர் ஸ்ரான்லினி (பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி) , எஸ். விஜிதா (மகாஜனா கல்லூரி) (அ-2)

# கவிதை நூல் அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)

கீர்த்தனா ராஜேந்திராவின் பூவொன்றின் புதியமொழி என்ற கவிதை நூல் அறிமுக விழா தலை வர் பொ.ஐங்கரநேசன் தலைமை யில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிக்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் வாழ்த்துரையினை ஓய்வுநிலைய அதிபர் தி.கிருஷ்ணகுமாரும் சுன்னாகம் இலங்கை வங்கி கிளையில் முகாமையாளர் பொன். பாலகுமார், தலைமையுரையினை சூழலியலாளர் பொ.ஐங்கரநேசன், அறிமுகவுரையினை பேராசிரியர் கலாநிதி தி.வேல் நம்பி ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். நூலின் சிறப்புப் பிரதியை இலங்கை வங்கிக் கிளையின் முகாமையாளர் இ.பிறேமராஜனும் பெற்றுக் கொள்வார்கள். மதிப்பீட்டுரையை இலங்கை வங்கியின் ஓய்வுநிலை உத்தியோகத்தர் சொ. சிவபாலனும் தமிழ்த்துறை ஆலோசகர் திருமதி கௌரி முகுந்தனும் ஆற்றவுள்ளனர். (அ-4)


**ASAP புலமைப்பரிசில்**

**2011-2012**

வடக்கு,கிழக்கு மாணவர்களுக்கானது

- நீங்கள் வடக்கு மாகாணத்தில் வசிக்கும் மாணவரா?
- பாடசாலைக் கல்வியை பூர்த்திசெய்துள்ளீர்களா?
- வேலைவாய்ப்பினை எதிர்பார்த்துள்ளீர்களா?
- USAID நிறுவனத்தின் அனுசரணையுடன் அரசாங்கத்தினால் இலவசமாக வழங்கப்படும் கணனி மற்றும் ஆங்கில பயிற்சியில் பங்குபற்றி அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழை பெற்றுக் கொள்ளுங்கள்

**விண்ணப்ப படிவத்தினை IDM சாவகச்சேரியில் பெற்றுக்கொள்ள முடியும்.**

மேலதிக தகவல்களுக்கு

IDM
NATIONS CAMPUS
Chavakachcheri Branch
Managed by Step into(pvt)Ltd.
No.276, Kandy Road, Chavakachcheri.
021 2 270 270 / 021 7 200 600

அனுசரணை

ADB EKSP USAID ASAP

**Vacancy @ IDM**

Autocad கற்பிக்க கூடிய இளமானி அல்லது முதுநிலைமானி பட்டம் பெற்ற அனுபவம் வாய்ந்த வருகை விரிவுரையாளர்கள் (Visiting lecturer) தேவை.விண்ணப்பங்களை அனுப்பவேண்டிய முகவரி

மனிதவள முகாமையாளர்,IDM சாவகச்சேரி,276 கண்டி வீதி, சாவகச்சேரி, *Tel: 021 7 200 600, E-mail: idmchava@yahoo.com*

# திரைவிமர்சனம்

# வேட்டை

பயந்த சுபாவமுள்ள அண்ணன் வீரமும் துணிச்சலும் மிகுந்த தம்பி ஆகிய இரண்டு சகோதரர்களை பற்றிய கதை வேட்டை.

மாதவன்- ஆர்யா இருவரும் அண்ணன் தம்பிகள். இதில் அண்ணனான மாதவன் பயந்தாங்கொள்ளியாக இருக்கிறார். சிறுவயதிருந்தே தன்னை யார் அடித்தாலும் அவர்களுக்கு பதிலடி கொடுக்க தனது தம்பி ஆர்யாவைத்தான் அழைத்து செல்வார். இந்நிலையில் பொலிஸ்காரரான அவர்களின் அப்பா திடீரென்று இறந்து விட அந்த வேலை மாதவனுக்கு கிடைக்கிறது. இதனால் ஆடிப்போகிறார் அவர். ஆனால் ஆர்யா அவரை சமாதானம் பண்ணி வேலையில் சேர்க்கிறார். தூத்துக்குடி ரவுடிகள் ஏரியாவில் பொலிஸ்காரராக காலடி எடுத்து வைக்கிறார் மாதவன். ஆனால், அவர் காக்கிச் சட்டையை மட்டுமே மாட்டிக் கொள்ள அவர் செய்ய வேண்டிய அடிதடி வேலைகளையெல்லாம் மாறு வேடத்தில் ஆர்யா செய்து முடிக்கிறார். இதனால் மாதவனுக்கு பாராட்டுக்கள், பரிசுகள் குவிக்கின்றன.


ஆனால், ஒரு கட்டத்தில் உண்மை வில்லன் கோஷ்டிக்கு தெரியவர மாதவனை அடித்து துவம்சம் செய்கின்றனர். இதனால் இனி மேல் நமக்கு இந்த வேலையே வேண்டாம் என்று முடிவெடுக்கிறார் அவர். ஆனால், அவருக்கு மனத் தைரியம் கொடுத்து கோழைத் தனத்தை மாற்றி மீண்டும் வேலைக்கு செல்ல வைக்கிறார் ஆர்யா. அதுவரையில் சிரிப்பு பொலிஸாக இருந்த மாதவன் அதன் பின்னர் அதிரடி பொலிஸாக மாறுகிறார். வில்லன் கோஷ்டிகளுடன் ஆவேசமாக மோதுகிறார். பின்னர் இருவரும் சேர்ந்து வில்லன் கோஷ்டிகளை வேட்டையாடி முடிக்கிறார்கள் என்பதே வேட்டையின் கதை. இதற்கிடையில் அண்ணன்- தம்பிகளின் காதல் என்று படம் நகர் கிறது.



வரும். அவர்கள்

உடலமைப்புத்தான் அண்ணன் பழைய ஹீரோ இல்லை என்பதை நினைவுபடுத்திக் கொண்டேயிருக்கிறது.

ஆர்யாவுக்கு நகைச்சுவை உணர்வு நன்றாக வருகின்றது. நட்பும் தான்.... அக்ஷனும் காமெடியும் நன்றாக எந்த நடிகரும் தோல்விப்படங்களைத் தொடர்ந்து கொடுக்க நேர்ந்தாலும் தமிழ் சினிமாவைப் பொறுத்தவரை தோற்றுப் போவதில்லை. இன்னும் சொல்லப்போனால் ஆர்யாவின் முதல் முழு நீள ஆக்ஷன் படமென்றுகூட வேட்டையைச் சொல்லலாம். ஆர்யா அடி வாங்கும் போது மாதவன் அந்த



கூண்டில் ஏறித்தாண்டி வருவது மனோசக்தி என்கிற தத்து வத்தின் அடிப் படையில் சாத்தியமே கால்கள் முற்றிலுமாக செயல் இழந்தவர்கள் கூட அசாதாரண மான நேரங்களில் எழுந்து நடந்திருக்கிறார்கள். -இது அறிவி யல் பூர்வமான உண்மை. இருந்தாலும் நேற்று மரண அடி வாங்கின வில்லனின் அடியாட்கள் அடுத்த நாளே ஃபேக்டரி ஃப்ரெஷ்ஷாக வருவது கொஞ்சம் சலிப்பினை ஏற் படுத் துகிறது. இரும்புக் கம்பிகளால் முகத்தில் அடிவாங்குகிறார்களா அல்லது ஃபேசியல் செய்து கொள்கிறார்களா என்கிற அளவிற்கு ரசிகனுக்கு மண்டை காய்ந்து போகிறது. சில ஓட்டைகள் இருக்கின்றன. அவற்றை சில டயலொக்குகளால் அடைக்க முயற்சித்திருக்கிறார் லிங்குசாமி. இரண்டுபேரும் வில்லன்களை தீர்த்துக் கட்டும் என்கவுண்டர் ஜிவ்வென்று அதிர வைக்கிறது தியேட்டரை. இதைப்போலவே ஆக்ஷன் ரசிகர்கள் ரசிக்கிற இன்னொரு காட்சி தனது கட்டை விரலை வெட்ட வரும் வில்லனின் கட்டை விரலை ஆர்யா காவு கொள்வது. மற்றபடி அஞ்சால் அலுப்பு மருந்தை மொத்த விலைக்கு வாங்கி வருடம் முழுக்க தேய்த்துக் கொள்கிற அளவுக்கு உதைத்து தள்ளுகிறார்கள்.

சமீராரெட்டி, அமலா பால் அக்கா தங்கையாக வருகின்றனர். சமீரா ஸ்கூட்டரை உடைத்து சண்டைக் காரராக ஆர்யா அவரோடு அறிமுகமாவதும் பின்னர் அண்ணன் மாதவனுக்கு அப்பெண்ணே மனைவியாக வருவது கண்டு தவிப்பதுமாகிய காட்சிகள் ரசிக்கும்படி உள்ளது.

> நடிப்பை பொறுத்தவரை ஆர்யாவுக்கு ஒரே முகம். அண்ணன் மாதவனுக்குத்தான் ஆறுமுகம். எனக்கிந்த வேலை வேண்டாம் என்று பதறுவதில் ஆரம்பித்து பக்காவாக எதிரிகளை சுளுக்கெடுக்கின்ற வரைக்கும் விதவிதமாக நடிக்கிறார்.

அமலா பாலுக்கு பாடல் காட்சிகளில் தான் வேலை என்றாலும் குளியலறையில் இருந்து குளித்து விட்டு வருபவர் தனது வீட்டு ஹோலில் ஆர்யா இருப்பதை அறியாமல் அவருக்கு பின்னால் நின்று கட்டியிருந்த டவலை அவிழ்த்து கட்டுகிறார். ஆனால், அவர் முன்பு இருக்கும் கண்ணாடியில் தனது உடம்மை பார்த்திருப்பாரோ என்று அமலாபால் பதறும் காட்சி சுவாரஸ்யம்.

அதேசமயம் அதை திருட்டுத்தனமாக பார்த்து ரசித்து விட்டு அமலாபாலுக்கு ஆர்யா நன்றி சொல்வது அற்புதம். மேலும் ஆர்யா - அமலாபாலின் உதட்டு முத்தம் இளவட்ட ரசிகர்களுக்கு நல்ல வேட்டையா்க அமைந்திருக்கிறது.

உயர் பொலிஸ் அதிகாரியாக வரும் நாசர் அப்பப்ப காமெடி செய்கிறார். ஏட்டு தம்பி ராமய்யா, வில்லன் அசுதோஷ் ராணா கவனம் ஈர்க்கிறார்கள். வில்லனுக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்காக அவர் சம்பந்தப்பட்ட காட்சிகளை வளர்த்து படத்தின் நீளத்தை அதிகரித்திருப்பது தேவையா? பாடல்களின் பின்னணி ரசிக்க வைக்கிற அளவுக்கு யுவன்சங்கர் ராஜாவின் இசை மனதை தொடவில்லை. சமீரா மற்றும் அமலாபால் இடம்பெறும் ஒரு பாடல் மட்டும் கொஞ்சம் சுமாராக இருக்கிறது. நீரவ் ஷாவின் ஒளிப்பதிவு இந்தப் படத்திற்கு தேவைதானா? என்று கேட்க வைக்கிறது. அந்த அளவுக்கு சாதாரண ஒளிப்பதிவாக இருக்கிறது. இன்னும் தேரடி வீதியில் போன்ற பாடல்களின் வெற்றியை மறக்காத லிங்குசாமி அதே பாணியை பயன்படுத்தி பாட்டுக்களை படமாக்கி வருகிறார். அதேபோல சண்டைக்காட்களிலும் தூசுக்களை பறக்க விடுவதயையும் மறக்கவில்லை போலிருக்கிறது. (சேர் ரசிகர்களுக்கு அலுத்து போச்சு சேர்)

ஆக்ஷன் படம் என்பதை மனதில் கொண்டு லாஜிக்குகளை யோசிக்க வைக்காமல் விறுவிறு என காட்சிகளை நகர்த்துகிறார் லிங்குசாமி. என்றாலும் அவரது பழைய படங்களின் சாயல் ஆங்காங்கே தலை தூக்குகிறது. குறிப்பாக ரன் படத்தின் பாடல் காட்சிகள் இங்கேயும் எட்டிப்பாக்கின்றன. மேலும் வழக்கமான பொலிஸ் கதைகளின் சாயலும் வில்லன் அதை எதிர்கொள்ளும் காட்சியமைப்புக்களும் இரண்டாம் பாகத்தின் சுவாரஸ்யத்தை குறைக்கிறது. ஆனால், போரடிக்கவில்லை. ஒரு நல்ல படம் பார்த்த திருப்தியை கொடுத்திருக்கிறார் லிங்குசாமி. மொத்தத்தில் வேட்டை லிங்குசாமிக்கு சரியான வேட்டைதான்.




ஈராஸ் இன்டர்நஷனல் நிறுவனம் வழங்க மீடியா ஒன் குளோபல் என்டடெயின்மெண்ட் தயாக்கும் படம் கோச்சடையான்.

சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் தான் ஹீரோ. அவர் ஜோடியாக தீபிகா படுகோன் நடிக்கிறார். ரஜினியின் இளைய மகள் சவுந்தர்யா இயக்குகிறார். ஏ.ஆர் ரகுமானின் இசை, இயக்கம், மேற்பார் கே.எஸ். ரவிக்குமார். இதில் சிவபெருமான் போல ஆக்ரோஷமாக ரஜினி நடனமாடும் காட்சி இடம்பெற இருக்கிறது. சிவசங்கர் மாஸ்டர் இந்த நடனத்தை அமைக்க இருக்கிறார். பரபரப்பாக படமாக்கப்பட்டு கொண்டிருக்கும் கோச்சடையான் பட்டையை கிளப்புமா? பார்ப்போம்....




## மீண்டும் "தாராவுக்கு" தூது விடும் சிம்பு....!

ஏற்கனவே ஒஸ்தி படத்தில் நயன்தாராவை நடிக்க வைக்க முயற்சி செய்த சிம்பு இப்போது நயன்தாரா மீண்டும் நடிக்க வந்ததையடுத்து தன்னுடைய அடுத்த படத்தில் நடிக்க வைக்க இயக்குநர் ஒருவர் மூலம் முயற்சி செய்து வருகிறாராம். பிரபுதேவாவை காதலிப்பதற்கு முன்னர் சிம்புவை காதலித்தவர் நடிகை நயன்தாரா. சிம்புவுடனான காதலும் முறிந்து தவி



இப்போது பிரபுவுடனான காதலும் முறிந்து தேவா ... நயன் தாரா சினிமா வில் ஆரம்பித்து முதற்கட்ட தெலுங்கில் திலும் தமிழில் ஜோடியாக படத்திலும் பேச்சு நடந்து வரு கின்றது. த்துவரும் மீண்டும் நடிக்க விட்டார். மாக ஒரு படத் அஜித் ஒரு நடிக்க வார்த்தை

இநந்நிலையில் நயனதாராவுக்கு தூதுவிட்டு இருக்கிறாராம் சிம்பு. அதாவது தன்னுடைய அடுத்த படத்தில் நயன்தாரா தான் நடிக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார். இதற்காக இயக்குநர் ஒருவரும் நயன்தாராவிடம் பேசியதாக கூறப்படுகின்றது. மீண்டும் ரீ என்டரி ஆகியிருக்கும் நயன்தாராவை சிம்புவுடன் ஜோடி சேர்த்து படம் இயக்கினால் படம் ஹிட்டாவதோடு நல்ல வசூலும் பெறும் என்பது அந்த இயக்குநரின் நம்பிக்கை என்கிறார்கள் விபரமறிந்தவர்கள்....! அது எப்படி இருந்தாலும் அம்மணிக்கு அனுபவம் கை கொடுக்கும் தானே!

## "அரவான்" ரிலீஸுக்கு முன்பே நாயகிக்கு மவுசு!

அரவான் பட நாயகி அர்ச்சனா கவியை தமிழின் முன்னணி ஹீரோக்கள் பலரும் விரும்புகிறார்களாம். இந்த தகவலை அர்ச்சனா கவியே வெளியிட்டுள்ளார்.



டைரக்கடர் வசந்தபாலன் இயக்கத்தில் உருவாகியிருக்கும் அரவான் படத்தில் தன்ஷிகாவுடன் இன்னொரு நாயகியாக நடித்திருப்வர்தான் புதுமுக நடிகை அர்ச்சனா கவி.

அரவான் படம் இன்னும் ரிலீஸ் ஆகாத நிலையில் அர்ச்சனாவை பல முன்னணி இயக்குநர்களும் முன்னணி ஹீரோக்களும் விரும்பி தங்களது படத்தில் நடிக்கும் படி அழைத்திருக்கிறா ர்களாம்.

இது பற்றி அர்ச்சனா அளித்துள்ள பேட்டியில் அரவான் சூட்டிங் முடிந்தவுடனேயே நான் கேரளாவுக்கு வந்து விட்டேன். படத்தின் ரிலீஸுக்கு பின்பு தான் சென்னைக்கு வருவேன். தமிழில் பல முன்னணி இயக்குநர்கள் என்னுடன் பேசினார்கள். இப்போதைக்கு நடிக்க மாட்டேன். அரவான் படத்தை பார்த்து விட்டு பேசுங்கள் என்று சொல்லி விட்டேன் என்றார்.

இன்னொரு விடயம் சொன்னால் நீங்களே ஆச்சரியப்படுவீர்கள். விஜய், விக்ரம் போன்ற மல்டி ஸ்டார்களின் படங்களில் கூட நடிக்க வாய்ப்பு வந்துள்ளது என்று வேறு அர்ச்சனாவை சொல்லி திரிகிறார்.

# மாசி மாத இராசி பலன்கள்

# 13.02.2012-13.03.2012




**மகம், பூரம், உத்திரம்**
**1 ஆம் பாதம்**

**வெற்றி வாய்ப்புகள் வீடுவந்து சேரும்!**

**நினைத்ததை நினைத்த நேரத்தில் செய்து முடிக்கும் ஆற்றலை பெற்ற சிம்ம இராசி நேயர்களே!**

அனைத்துலக செய்திகளும் உங்கள் காதுகளுக்குக் கிடைக்கும். ஆத்மவலிமை உங்களுக்கு அதிகம். செயலாற்றும் திறமையும் திடமான மனமும் உங்களுக்கு இருப்பதால் தான் வரலாற்றில் இடம்பெறும் விதத்தில் உங்கள் வாழ்க்கை அமைகிறது. எப்போதும் எதிலும் முன்னோடியாக இருக்கவேண்டும் என்று விரும்புவீர்கள். உங்கள் போல கொள்கைப்பிடிப்பு அதிகம் உள்ளவர்கள் வேறு யாரும் கிடைக்கமாட்டார்கள்.

உங்களுக்கு இந்த மாசிமாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்போது, சென்ற மாதத்தைக் காட்டிலும் சிறப்பாக இருக்கும் என்றே சொல்ல வேண்டும். செவ்வாயின் வக்ரம் மட்டும் இல்லாமல் இருந்தால், உங்கள் மனதில் மகிழ்ச்சி மட்டுமே குடிகொண்டிருக்கும். ஆனால், இந்த மாதத்தில் விலகிய சனியும் வக்ரம் பெறுகிறார். வீற்றிருந்து உங்கள் இராசியில் உலாவரும் செவ்வாயும் வக்ரம் பெறுகிறார்.

அது மட்டுமல்ல 2,11 க்கு அதிபதியான புதனும் மாததொடக்கத்தில் உச்சம் பெறுகிறார். மாதக்கடைசியில் வக்ரம் பெறுகிறார். எனவே, எதிலும் ஒரு பிடிப்பின்மை, இனம்புரியாத கவலை இருந்து கொண்டே இருக்கும். வாழ்க்கைத் தேவைகள் அப்போதைக்கு அப்போது பூர்த்தியானாலும், வக்ர இயக்க காலத்தில் மட்டும் கொஞ்சம் எச்சரிக்கை யோடு செயற்படுவதுதான் நல்லது.

சனி உங்கள் இராசிக்கு 6, 7 ஆகிய இடங்களுக்கு அதிபதியாவார். எதிரிகள் ஸ்தானம் கடன்சுமை மற்றும் வியாதிகளின் தன்மையை உணர்த்தும் இடத்திற்கு அதிபதி வக்ரம்பெறும் போது, எதிரிகளின் பலம்குறையலாம். ஆனால், அதேநேரத்தில் எதிரிகளை வெல்லும் ஆற்றலைகொடுக்கும் செவ்வாயும் அல்லவா வக்ரம் பெறுகிறார். எனவே, மனோபயம் அதிகரிக்கும். மறைமுக எதிர்ப்புக்களை சமாளிக்க என்ன செய்யலாம்? என்ற யோசனை 24 மணி நேரமும் இதயத்தில் இடம்பிடிக்கும்.

எல்லாவற்றிற்கும் பரிகாரம் என்று ஒன்று உண்டு. உங்கள் சுயஜாதக அடிப்படையிலும் பரிகாரங்களைச் செய்யலாம். செவ்வாய், சனிக்குரிய ஸ்தலங்களுக்கும் யோகபலம்பெற்ற நாளில் சென்று வழிபட்டுவரலாம். அங்காரக கவசமும் சனிகவசமும் பாடி அதனதன் சந்நிதியில் வழிபாடு செய்யலாம்.

பெப்ரவரி 28 ஆம் திகதி மீன இராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். அங்கு புதன் உச்சம்பெறுவதோடு, மார்ச் 11 ஆம் திகதி கும்ப இராசியில் புதன் வக்ரம் பெறப் போகிறார். இதன் விளைவாக பணப்புழக்கம் அதிகரிக்கும். பாராட்டும் பொறுப்புக்களும் பதவிகளும் வந்துசேரும். மனப்பயம் அகலும். மங்கல நிகழ்ச்சிகளுக்காக ஒரு தொகையை செலவிட்டு மகிழப் போகிறீர்கள்.

சுக்கிரன் மார்ச் 1ஆம் திகதி மேச இராசிக்கு செல்லப்போகிறார். குருவுடன் சேர்ந்து பலவித நன்மைகளை உங்களுக்கு வழங்கப் போகிறார். தொழில் வளர்ச்சி கூடும். உடல் நலத்தில் உற்சாகம் குடிகொள்ளும். இலாபம் இரு மடங்காக வந்துசேரலாம். சகோதரி வழிஉறவு புதுப்பிக்கப்படும். அவர்கள் வாயிலாக தொழில் தொடங்குவதற்குரிய மூலதனம் ஒருசிலருக்கு கிடைக்கலாம்.

இந்த மாதம் ஆறுமுகப் பெருமான் வழிபாடு உங்கள் அல்லல்களை நீக்கும்.

அதேவேளை இந்த மாதம் எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும் மாதமாக அமையப் போகிறது. குருபார்வையால் குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். கூட இருப்பவர்களால் ஏற்பட்ட தொல்லை அகலும். கணவன்- மனைவிக்குள் ஒற்றுமை பலம்கூடும். குல தெய்வ வழிபாட்டை மேற்கொள்வது நல்லது. சொந்தபந்தங்கள் வியக்கும்அளவு வளர்ச்சி அதிகரிக்கும். இந்த மாதத்தில் செவ்வாய் வக்ரத்திற்கு மட்டும் அவசியம் பரிகாரம் செய்துகொள்ள வேண்டும். அப்போதுதான் வீடுதேடி விவகாரங்கள் வரும்நிலை மாறும். விநாயகர் வழிபாடு வேதனை தீர்க்கும்.

# சிவல்புரி சிங்காரம்

**உத்திரம், 2,3,4, பாதங்கள்**
**அத்தம், சித்திரை 1, 2 பாதங்கள்**

**சந்தோசங்கள் அதிகரிக்கும்!**

**எதையும் ஒரு முறைக்கு பலமுறை யோசித்துச் செய்யும் கன்னி இராசி நேயர்களே!**

பேச வேண்டிய நேரத்தில் பேச வேண்டியதைப் பேசி காரியங்களைக் கச்சிதமாக முடித்துக் கொள்பவர்கள் நீங்கள். எதிரிகளை வெல்லக்கூடிய ஆற்றல் உங்கள் மனதில் இருந்தாலும் வெளிக்காட்டிக்கொள்ளமாட்டீர்கள். வெகுளியான தோற்றத்துக்குச் சொந்தக்காரர்களாக விளங்குவீர்கள். பகலிரவு பாராமல் பணிபுரிந்தாலும் பெற்றுக்கொண்டவர்கள் நன்றி செலுத்தவில்லையே என்று வருத்தப்படுவீர்கள்.

உங்களுக்கு இந்த மாசிமாத கிரக நிலைகளை ஆராய்ந்து பாரக்கும் பொழுது மாதத் தொடக்கத்திலேயே கும்ப ஸ்தானத்தில் சனி வக்ரம் பெறுகிறார். அஷ்ட மாதிபதி செவ்வாயும் வக்ரம் பெறுகிறார். அஷடமாதிபதியை சப்தமஸ்தானத்தில் இருந்து விரயாதிபதி சூரியன் பார்ப்பதால் விபரீத இராஜயோகம் செயற்படப் போகிறது. எனவே, நீங்கள் திட்டமிடாது செய்யும் காரியங்களிலும் வெற்றி கிடைக்கும். திருமண வாய்ப்பு முதல் தெய்வ தரிசனங்கள் வரை அடுக்கடுக்காக வந்து கொண்டே இருக்கும்.

பொதுவாக இம்மாதம் புதன் உச்சம் பெறுவதும் வக்கிரம் பெறுவதும் நல்லதுதானா என்று சிந்திப்பீர்கள். இராசிநாதன் உச்சம் பெற்றால் ஒருசில இராசிக்கு அது நன்மை. ஒருசில இராசிகளுக்கு அது நற்பலனைக் கொடுக்காது. உங்கள் இராசியைப் பொறுத்தவரை 10க்கு அதிபதியாகவும், விளங்குவதால் கேந்திராதிபத்தியம் பெற்ற கிரகம் வலிமை இழக்கும் பொழுது மிகுந்த நற்பலன்களை வழங்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பாடுபட்டதற்கு ஏற்றபலன் கிடைக்கும். இனத்தார் பகைமாறும். எடுத்த காரியங்கள் துரிதமாக முடிவடையும். ஆனால் சனியின் வக்ர இயக்கத்தால் குடும்பத்தில் சில குழப்பங்கள் ஏற்படலாம். செய்யும் முயற்சிகளில் சிறிது தாமதத்ததிற்குப் பிறகே வெற்றி கிட்டும்.

இதுபோன்ற காலங்களில் சனி கவசம்பாடி சனீஸ்வரரை வழிபடுவது நல்லது. கருநிறக்காகம் ஏறும் சனிபகவான் சந்நிதியில் ஜோடிதீபம் ஏற்றினால் உங் களுக்குப் பொறுமையும் பெருமை யும் வந்துசேரும். உச்ச சனியின் ஆதிக்கம் நடைபெறும் பொழுது ஒவ்வொரு முயற்சிகளிலும் திடீர் திடீரென மாற்றங்கள் உருவாகும்.

மீன இராசியில் பெப்ரவரி 28 ஆம் திகதி புதன் சஞ்சரிக்கப் போகிறார். இராசிநாதன் புதன் உச்சம் பெறும் இந்தநேரத்தில் உடல் ஆரோக்கியத்திற்கென்று ஒருதொகையை செலவிடும் சூழ்நிலை உருவாகலாம். உங்களுக்கோ உங்களைச் சார்ந்த குடும்பத்தினருக்கோ ஏதேனும் நோய்க்கான அறிகுறிகள் தோன்றினால் அங்ஙனம் தோன்றும் பொழுதே மருத்துவ ஆலோசனைகளை பெறுவது நல்லது. அது மட்டுமல்ல மார்ச் 11 ஆம் திகதி கும்பத்தில் புதன் வக்ரம் பெறப்போகிறார். இதன் விளைவாக உத்தியோக மாற்றம், ஊர்மாற்றம், இட மாற்றங்கள் ஒரு சிலருக்கு ஏற்படலாம். அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர். மாமன், மைத்துனர் வழியில் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறும்.




மேச இராசியில் மார்ச் 1 ஆம் திகதி சுக்கிரன் சஞ்சரிக்கப்போகிறார். அசுர குருவும் தேவ குருவும் இணையும் இந்த நேரத்தில் அபரிமிதமான பலன்களை அள்ளி வழங்குவார். பொதுவாக திடீர் திருப்பங்கள் உருவாகும். எதிர் பாராத தனவரவு கிட்டும். தந்தை வழிச் சொத்துக்கள் தக்கவிதத்தில் கைக்கு வந்துசேரும்.

இம்மாதம் தெற்கு நோக்கிய அம்பிகை வழிபாட்டையும் சனீஸ்வரன் வழிபாட்டையும் மேற்கொள்ளுங்கள் எதிர்பார்ப்புகள் நிறைவேறும்.

இம்மாதம் சுக்கிர பலத்தால் பணவரவு திருப்தி தந்தாலும், தொல்லை தரும் எதிரிகளின் பலம் கூடுதலாகவே உள்ளது. எனவே, அருகில் இருப்பவரையும் வாழ்க்கைத் துணையையும் அனுசரித்துச் செல்லுங்கள். கோபம், படபடப்பை விட்டுவிட்டு குணத்தோடு செயற்பட்டால் தேகநலம் சீராகும். செல்லும் இடங்களில் ஏமாற்றங்களைச் சந்திக்காமல் இருக்கும் சூழ்நிலையும் உருவாகும். சுயஜாதக ரீதியாக தெசா புத்திக்கேற்ப தெய்வவழிபாட்டை தேர்ந்தெடுத்துச் செய்தால் மன நிம்மதி கிடைக்கும்.

(தொடரும்)

# அமெரிக்க நுகர்வோர்கள் இலங்கை பொருட்களை புறக்கணிக்க வேண்டும்

## அமெரிக்க தமிழர் அமைப்பு கோரிக்கை

(வோஷிங்டன்)

அமெரிக்க தமிழர் அரசியல் செயற்பாட்டு சபையானது இலங்கையில் மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் எனக் கோரியும் ஈரானிய எண்ணெய் வளம் மீதான அமெரிக்காவின் தடைகளிலிருந்து இலங்கையை விலக்கக்கோரியும் அந்நாட்டால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளை அமெரிக்கா புறக்கணிக்க வேண்டும் எனக் கோரியும் அமெரிக்க நகரங்களில் கடந்த 11 ஆம் திகதி புறக்கணிப்பு போராட்டம் ஒன்றை மேற்கொண்டுள்ளது.

அமெரிக்காவில் உள்ள விக்டோரியா சீக்ரட் நிலையங்கள் முன் கூடிய ஆர்ப்பாட்டக்காரர்கள் இலங்கையை புறக்கணிக்க வேண்டும் என்பதற்கான தமது தரப்பு நியாயப்பாடுகளை எடுத்து விளக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

விக்டோரியா சீக்ரட் நிலையத்தில் மிகப் பெரிய ஆலை ஒன்று இலங்கையில் நிறுவப்பட்டுள்ளது.

இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தம் 2009 இல் முடிவுற்றதிலிருந்து ஒவ்வொரு மாதமும் இந்நிலையங்களின் முன் ஆர்ப்பாட்டக்காரர்கள் கூடி தமது புறக்கணிப்புப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

அமெரிக்க நுகர்வோர் அனைவரும் இலங்கையில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களை கொள்வனவு செய்யாது அவற்றைப் புறக்கணிக்குமாறும் இதில் கேட்கப்பட்டுள்ளது.

இலங்கை தனக்கு தேவையான மசகு எண்ணெயின் 93 சதவீதத்தை ஈரானிலிருந்தே இறக்குமதி செய்வதாகவும் ஈரானின் அணுவாயுத உற்பத்தியை முடக்கும் நோக்குடன் அமெரிக்காவால் விதிக்கப்பட்டுள்ள தடைகளில் இருந்து இலங்கையை விலக்களிக்குமாறும் அந்நாட்டு அரசாங்கம் கோரிக்கை விடுத்துள்ளதாக கொழும்பைத் தளமாகக் கொண்டியங்கும் சண்டே ரைம்ஸ் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கைக்கு இது தொடர்பில் விலக்களிப்பை வழங்குவதுதானது அமெரிக்காவின் ஈரான் மீதான தடைக்கான நோக்கத்தை மீறுவதாக அமைந்து விடும். அத்துடன் இலங்கையில் தற்போதும் யுத்தத்தின் போதும் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களை அசட்டை செய்வதற்கும் வழி வகுக்கும் எனவும் USTPAC இன் துணைத் தலைவர் கலாநிதி எலின் சான்டர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மனித உரிமை மீறல்கள் மற்றும் மனிதாபிமானம் என்பன மதிக்கப்பட வேண்டும். அத்துடன் ஈரானுக்கு எதிராக அமெரிக்காவாலும் அனைத்துலக சமூகத்தினாலும் இடப்பட்டுள்ள தடைகளை இலங்கை மதிக்க வேண்டும் என கலாநிதி சான்டர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கமானது அனைத்துலக மனிதாபிமானச் சட்டத்தை மீறிச் செயற்பட்டுள்ளதால் பொருளாதார ரீதியில் இலங்கையை முடக்குவதற்கான நடவடிக்கைகளில் அதிக கவனத்தை குவிக்கும் நோக்குடன் பணியாற்றி வருகின்றது.

அதாவது இலங்கைப் பொருட்களை புறக்கணித்தல் மற்றும் ஏனைய பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொண்டு அதன் மூலம் இலங்கை அரசாங்கமானது தமிழ் மக்கள் மீது மேற்கொண்டு வரும் மீறல்களை முடிவிற்கு கொண்டு வருவதற்கான செயற்பாடுகளிலும் இத்தமிழர் அமைப்பு ஈடுபட்டு வருகின்றது.

அத்துடன் நீண்டகாலம் இலங்கையில் தொடரப்பட்ட உள்நாட்டு யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறத்தக்க நிலைக்கு இலங்கையை இழுத்துச் செல்வதற்கான முயற்சியையும் USTPAC முன்னெடுத்து வருகின்றது.

(அ-2)

## படுவான்கரையில் கம்பியாறுக்கு குறுக்கே 11 கோடி செலவில் பாலம்

மட்டக்களப்பு மாவட்டம் படுவான் கரையின் போரதீவுப்பற்று பிரதேச செயலகத்துக்குட்பட்ட கம்பியாறுக்கு குறுக்காக 11 இலட்சம் ரூபா செலவில் பாலம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

கடந்த 30 வருடகாலமாக இடம்பெற்ற யுத்தநிலைமை காரணமாக கடுமையான பாதிப்புக்களை எதிர்கொண்ட பிரதேசங்களில் இப்பிரதேசமும் ஒன்றாகும்.

யுத்தத்தினால் பாதிப்புக்களை எதிர் கொண்ட பிரதேசங்கள் தொடர்பில் மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் விசேட கவனம் செலுத்தி வருவதுடன் அவற்றின் அபிவிருத்திப் பணிகளுக்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளார்.

இதனடிப்படையில் மீள்குடியேற்ற பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்த வேண்டுகோளுக்கமைவாக கம்பியாறுக்கு குறுக்காக பாலம் அமைப்பதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி பாலம் அமைக்கப்படுவதன் மூலம் ஆணைகட்டியவெளி, நெடிய வட்டை, சின்னவத்தை,மாலையர்கட்டு, காக்காச்சி வட்டை, விளாந்தோட்டம் உட்பட பல்வேறு பிரதேசமக்கள் நன்மையடையவுள்ளனர். (அ-2)

## பொலிஸாரின் தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறோம்

### ஐ.தே.க தெரிவிப்பு

(கொழும்பு)

எரிபொருள் விலையேற்றம் தொடர்பில் கண்டனம் வெளியிடும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சி தலைமையில் ஒன்றிணைந்த எதிர்க்கட்சிகளால் கொழும்பு தொடருந்து நிலையத்திற்கு முன்பாக நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட பொலிஸாரின் தாக்குதலை வன்மையாக கண்டிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஊடக அறிக்கையொன்று வெளியிட்டுள்ள பிரதான எதிர்க்கட்சி அநீதிக்கு எதிரான மக்கள் எழுச்சியை கண்ணீர் புகையாலும் பொலிஸ் தாக்குதலாலும் நிறுத்த முடியாது என குறிப்பிட்டுள்ளது.

ஜனநாயகத்தை நிலைநாட்டி பொதுமக்களுக்கு நிவாரணங்களை பெற்றுக் கொடுக்கும் வரை இந்த போராட்டம் தொடர்ந்து நாடளாவிய ரீதியாக விரிவுபடுத்தப்படும் என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த போராட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச, தயாசிறி ஜயசேகர, அசோக அபேசிங்க. புத்திக பத்திரண, ரஞ்சித் பண்டார ஆகியோர் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. (அ-2)

## புதையல் தோண்டிய மூவர் கைதாகினர்

வாகரை-மதுரன்கேணிகுளம் மற்றும் ஓவிலியாமடு ஆகிய கிராமங்களுக்கு இடையிலான பிரதேசத்தில் புதையல் தோண்டிய 3 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்களில் விசேட அதிரடிப்படை உறுப்பினர் ஒருவரும் அடங்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது பூசைப்பொருட்கள், புதையல் தோண்டுவதற்காக பயன்படுத்தப்பட்ட ஆயுதங்கள் மற்றும் மோட்டார்சைக்கிள் ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் நேற்றைய தினம் நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்படுத்தப்பட்டுள்ளனர் என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (அ-2)

## வருடாந்த பொதுக்கூட்டம்


(யாழ்ப்பாணம்)

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறும் அங்கத்தவர்கள் தமது முகவரியில் மாற்றம் இருப்பின் பொ. கேதீசன், இல 28, அம்மன் வீதி, கந்தர்மடம். தொலைபேசி இலக்கம் 077 3946501 எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறும் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழக பொதுச் செயலாளர் கேட்டுள்ளார்.(அ)







யா/ மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் மாணவர்களின் இசையும் அசைவும் நிகழ்வையும் வெற்றியீட்டிய இல்லத்துக்கான கேடயத்தை சண்டிலிப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச. சிவானந்தராஜா வழங்குவதையும் அருகில் பாடசாலை அதிபர் திருமதி ச. சிவகுமார் நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

# இரண்டாம் உலக யுத்தம்

## ஒரு மீள்பார்வை 45

## 'ஜேர்மனி, ஜப்பான் ஆக்கிரமிப்பின் விஸ்தரிப்பு 'மின்னல் வேக யுத்தம்' என்ற ஹிட்லர் போர்த்தந்திரத்தின் தோல்வி




சோவியத் தாய் நாட்டைக் காப்பாற்றுவதற்கு அணிதிரளுமாறு அரசாங்கமும் கம்யூனிஸ்ட் கட்சியும் சோவியத் பெண்களுக்கு அறைகூவல்விடுக்கும் சுவரொட்டி

அக்டோபரின் முதல் நாட்களிலேயே மஜாய்ஸ்க் கோட்டில் தற்காப்பு பலப்படுத்தப்பட்டது. அக்டோபர் 10ஆம் திகதி மேற்கு மற்றும் சேம இருப்பு சேனைகளின் துருப்புகள் மேற்கு சேனையாக ஒன்றிணைந்தன. லெனின்கிராட் போர்முனையிலிருந்து அழைக்கப்பட்ட ஜெனரல் ஜூக்கவ் மேற்கு சேனையின் தளபதியாக நியமிக்கப்பட்டார். வடமேற்கு மற்றும் தென்மேற்கு சேனைகளிலிருந்து துருப்புகள் உடனடியாக மஜாய்ஸ்க் கோட்டிற்கு அனுப்பப்பட்டன. தொலைகிழக்கிலிருந்து வந்தடிவிசன்களும் இங்கே அனுப்பப்பட்டன. நாட்டின் குடியரசுகள் அனைத்திலுமிருந்து அக்கால கட்டத்திற்கு சாதனையான வேகங்களில் ஆட்கள், ஆயுதங்கள் போர்த் தளவாடங்களோடு புகைவண்டிகள் வந்திறங்கின.

எல்லாம் சொந்த மாஸ்கோவின் பாதுகாப்பிற்கு என்று கம்யூனிஷ்டு கட்சி அறைகூவல் விடுத்தது. மாஸ்கோ சமர் முழுவதன் போதும் தலை நகரிலேயே இருந்த கட்சியின் மத்திய கமிட்டியும் பொலிட் பீரோவும் அரசு தற்காப்புக் கமிட்டியும் அரசாங்கமும் படைத் தலைமையகமும் மாஸ்கோவைக் காப்பாற்றுவதற்கான புதிய சக்திகளை அணிதிரட்டி அனுப்பவும் தலைநகரின் தற்காப்பை பலப்படுத்தவும் நகரில் உயர்வான ஒழுங்கமைப்பைப் பராமரிக்கவும் எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டன.

அரசுத்தற்காப்புக் கமிட்டியின் முடிவின்படி மாஸ்கோவிலும் இதன் அருகேயிருந்த புறநகர்களிலும் முற்றுகைநிலை கொண்டு வரப்பட்டது. இது தலைநகரின் தற்




காப்பில் ஒழுங்கமைப்பை அதிகப்படுத்தியது. அதேநேரத்தில் மாஸ்கோ அருகேயிருந்த நுழைவாயில்களில் இரண்டு எல்லைகளைக் கொண்ட புதிய தற்காப்பு எல்லைக்கோடு உருவாக்கப்பட்டது. மாஸ்கோ, போர்முனை நகரமாகியது.

தோற்றுவிக்கப்பட்ட மாஸ்கோ தற்காப்பு மண்டலத்தில் தலைநகரின் பாதுகாப்பு சக்திகளும் குடிமக்கள் தொண்டர்படை டிவிசன்களும் படைத் தலைமையகத்தின் சேம இருப்பிலிருந்து வந்த துருப்புகளும் அடங்கியிருந்தன. 4 இலட்சத்து 50 ஆயிரம் மாஸ்கோ வாசிகள் தற்காப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர்.

அக்டோபர் 13 ஆம் திகதி மாஸ்கோவில் கட்சித் தொண்டர்களின் கூட்டம் நடைபெற்றது. இது பாசிச ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக உறுதியான ஈவிரக்கமற்ற போராட்டத்தை நடத்துமாறும் கட்டுப்பாட்டைப் பலப்படுத்துமாறும், பீதியைப் பரப்புபவர்கள், பேடிகள், துரோகிகளுக்கு எதிராக உறுதியாகப் போராடுமாறும் கம்யூனிஸ்ட்டுக்கள், கம்சமோல் உறுப்பினர்கள், நகரின் தொழிலாளர்கள் அனைவருக்கும் அறைகூவல் விடுத்தது. நகரில் தொழிலாளர் பட்டாலியன்கள் தோற்றுவிக்கப்பட்டன. மாஸ்கோ தொழிற்சாலைகளில் ஆயுத உற்பத்தி முழு


போர்முனையாகக் காட்சிதரும் மொஸ்கோ நகர்

மூச்சோடு நடைபெற்றது.

ஒருசில நாட்களில் 25 தனி கம்யூனிஸ்ட் மற்றும் தொழிலாளர் கம்பனிகளும் பட்டாலியன்களும் தோற்றுவிக்கப்பட்டன. இவற்றில் முக்கால்வாசி கம்யூனிஸ்டுகளும் கம்சமோல் உறுப்பினர்களும் இருந்தனர். பெரும்பாலும் இவற்றைக் கொண்டும் உள்நாட்டுச்சண்டை பட்டாலியன்களைக் கொண்டும் மொத்தம் 39ஆயிரத்துக்கும் அதிகமான ஆட்களையுடைய குடிமக்கள் தொண்டர் படையின் 4 டிவிசன்களும் உருவாக்கப்பட்டன. போர்முனைக்கு உதவியாக அக்டோபர் மாதத்தின் முதல்பாதியில் மாஸ்கோ மொத்தமாக கிட்டத்தட்ட 50 ஆயிரம் போர் வீரர்கள் அடங்கிய இராணுவத்தை கூடுதலாக அனுப்பி உதவியது. ஸ்தல வான் எதிர்ப்பு பாதுகாப்பு கணிசமாக பலப்படுத்தப்பட்டது. 25 ஸ்தல வான் எதிர்ப்பு பாதுகாப்பு பட்டாலியன்களும் 4 பழுது பார்த்து புனரமைக்கும் ரெஜிமென்ட்களும் கம்சமோல்-இளைஞர் ஸ்தல வான் எதிர்ப்பு பாதுகாப்பு ரெஜிமென்டும் 3600 சுய பாதுகாப்பு குழுக்களும் உருவாக்கப்பட்டன.

மாஸ்கோ- ஐரோப்பியத் தலை நகரங்களிலேயே இது, ஒன்றுதான்- தரைவழியாகவோ வான்மூலமோ நெருங்க முடியாததாக இருந்தது.

இதனிடையே எதிரி, மாஸ்கோவை நோக்கிப்பாய முயன்றுகொண்டிருந்தான். ஜேர்மனியர்கள் அர்மோலைக் கைப்பற்றி தூலாவை நெருங்கினர். அக்டோபர் 14 ஆம் திகதி சோவியத் துருப்புக்கள் கலீனினை விட்டுவெளியேறின. எப்படியாவது எதிரி தாமதப் படுத்தி மஜாஸ்க் எல்லைக் கோட்டில் தற்காப்பை ஒழுங்கமைப்பதற்கான நேரத்தை வெல்வது அவசியமாயிருந்தது. மேற்கு சேனையின் வலப்புறத் துருப்புக்களைக் கொண்டு ஜெனரல் கோனெலின் தலைமையின் கீழ் கலீனின் சேனை தோற்றுவிக்கப் பட்டது. மேற்கு கலீலின் சேனைகளும் மித்ஸேன்ஸ்க்-ல்கோவ் எல்லைக் கோட்டுக்குப் பின்வாங்கிய பிரியான்ஸ்க் சேனையும் கடும் எதிர்ப்பைக் காட்டி எதிரியின் முக்கிய தாக்குதல் படைத் திரட்டுக்களைத் தடுத்து நிறுத்தின.

வியா ஸ்மா அருகே சுற்றி வளைக்கப்பட்ட சோவியத் படைகள் முக்கிய சக்திகளுடன்இணைவதற்காக கிழக்கே பிளந்து செல்ல முயன்று தொடர்ந்து போரிட்டன. இவை ஜெண்டர்படைத் தொகுதியின் 28 யூனிட்டுக்களைக்கட்டிப் போட்டன.


களமுனைச் செய்திகளைச் சேகரிக்கும் பெண் பத்திரிகையாளர்கள்

சோவியத் தலைமை மேற்கோண்ட நடவடிக்கைகளால் ஜேர்மனியர்கள் முன்னேறுவது மேன்மேலும் குறையத் தொடங்கியது.


ஜோசெப் ஸ்ராலின், சோவியத்யூனியனின் தலைவர் (19.ஜூலை.1941-1953மார்ச்.5) உயர்இராணுவக் கட்டளைத் தளபதி (1943-1953)

அக்டோபர் மாதத் தொடக்கத்தில் ஹிட்லர்படைகள் நாளொன்றுக்கு 25 கி.மீ. முன்னேறின என்றால் மாத இறுதியில் இவ்வேகம் 2-3 கி.மீ. களாகக்குறைந்தது. அக்டோபர் 30 ஆம் திகதி வாக்கில் மஜாய்ஸ்க் மற்றும் வலகலாம்ஸ்கிற்கு கிழக்கே போர்முனை ஸ்திரமடைந்தது. மாஸ்கோ மீதான முதல் ஜேர்மனியத் தாக்குதல் தோல்வியடைந்தது. சோவியத் துருப்புகளின் உறுதியான பாதுகாப்பால் எதிரியின் சக்திகள் கணிசமான அளவு பலவீனமடைந்தன. எதிரியின் முக்கிய தாக்குதல் படைத்திரட்டுகள் பரவலான போர்முனையில் சிதறிக் கிடந்தன. மாஸ்கோமீதான ஜேர்மனியத் தாக்குதலில் இரண்டு வார இடைவெளி ஏற்பட்டது.

சோவியத் உயர்மட்ட படைத் தலைமை இடைநேரத்தை மிகத் திறமையாகப் பயன்படுத்தியது. துருப்புகள் தேவையான முறையில் மாற்றியமைக்கப்பட்டன. இவற்றிற்கு அவசியமான ஆட்களும் இராணுவத் தளவாடங்களும் அளிக்கப்பட்டன. மாஸ்கோவிற்கு அருகேயிருந்த நுழைவாயில்களில் பல அடுக்குகளையுடைய, பல வரிசைகளைக்கொண்ட தற்காப்புக் கட்டுமானம் தொடர்ந்தது.

(தொடரும்)

# நாட்டு மக்களின் அவலங்களை அரசு புரிந்து கொள்ளவில்லை

## புரியவைப்பது போராட்டம் மூலமே என்கிறார் திஸ்ஸ

(கொழும்பு)



மக்களுக்காக நடத்திய போராட்டத்தின் மீது அரசாங்கம் தாக்குதல் நடத்தியதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித் துள்ளார்.

இத்தாக்குதல் சம்பவம் வன்முறையாகக் கண்டிக்கப்பட வேண்டும்.

மக்களின் அவலங்களை புரிந்து கொள்ள முடியாத அரசாங்கத்திற்கு போராட்டங்களின் மூலமே அவற்றை தெளிவுபடுத்த முடியும். மக்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்படும் வரையில் தொடர்ச்சியாக போராட்டம் நடத்தப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை எதிர்க்கட்சிகளினால் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் மிகவும் அமைதியான முறையில் நடத்தப்பட்டது.

அதிகாரத்தைப் பயன்படுத்தி அரசாங்கம் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல் நடத்தியது.

எரிபொருளுக்கான விலை மிகவும் அநீதியான முறையில் உயர்த்தப்பட்டுள்ளது. இது தொடர்பில் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். (அ-2)

# சவேந்திரசில்வா உறுப்புரிமை குறித்து இரகசிய கலந்துரையாடல்

போர்க்குற்றம் சாட்டப்பட்டுள்ள இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா ஐ.நா. அமைதிப்படை நடவடிக்கைகளுக்கு ஆலோசனை வழங்கும் சிறப்புக்குழுவின் உறுப்பினராக நியமிக்கப்பட்டமை தொடர்பில் நியூயோர்க்கில் நேற்று முன்தினம் உயர்மட்டக் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம் காலை ஐ.நா. அமைதிப்படைப் பணியகத்துக்கும் சில உறுப்பு நாடுகளின் தூதுவர்களுக்கும் இடையில் சவேந்திர சில்வாவின் நியமனம் குறித்து கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளதாக நியூயோர்க் தகவல்கள் கூறுகின்றன.

இந்தச் சந்திப்பில் பங்களாதேஷ், பாகிஸ்தான், இந்தியா உள்ளிட்ட சில நாடுகளின் தூவர்கள் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இக்கலந்துரையாடலின் பின்னர் ஐ.நா.வுக்கான அமெரிக்கத்தூதுவர் சுசன்ரைஸ் கருத்து வெளியிடுகையில்,

ஆலோசனைக் குழுவில் பணியாற்ற தெரிவு செய்யப்படும் போது அவருடைய பின்னணி குறித்து அக்கறை கொள்ள வேண்டும். இதுகுறித்து உறுப்புநாடுகளுடனும் ஐ.நா. செயலகத்துடனும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதற்குப் பதிலளிப்பது தொடர்பாக பல முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இது பற்றி பகிரங்கமாக விவாதிப்பது பெரும்பாலும் நல்லதல்ல என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் சவேந்திரசில்வா விவகாரம் குறித்து ஐ.நா. அமைதிப்படை பணியகம் சில நாடுகளின் தூதுவர்களுடன் கலந்துரையாடியமை குறித்துத் தெரிவிக்கையில், தன்னிடம் தகவல் இல்லை என்று கூறியதுடன் அமைதிப்படை நடவடிக்கைகளுக்கான பேச்சாளரிடம் கேட்குமாறு பான் கீ மூனின் பிரதிப்பேச்சாளர் எடுவாடோ டெல்புவே பதிலளித்துள்ளார். (அ-2)

# கஞ்சா கடத்திய இந்தியர்கள் கைது

(கொழும்பு)

காங்கேசன்துறை கடற்பரப்பினூடாக படகு ஒன்றில் கஞ்சா கடத்திய இரு இந்திய நாட்டவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 10.5 கிலோ கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் தலைமையகம் கூறியது. இவர்கள் கடந்த 17 ஆம் திகதி இரவு கைது செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் குற்றப்புலனாய்வு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் வெல்லவ பொலிசில் கையளிக்கப்பட்டனர். இப்பொலிஸார் மேலதிக விசாரணை நடத்துகின்றனர்.

இதேவேளை மீரிகம பல்லேவெல பகுதியில் மேற்கொண்ட தேடுதலின் போது ஆட்டோ ஒன்றில் மறைத்து வைக்கப்பட்ட 100 மில்லி கிராம் ஹெரோயின் மீட்கப்பட்டதுடன் இது தொடர்பில் ஒருவர் கைதாகியுள்ளார்.

இது தவிர மல்வானை பகுதியில் வைத்து 8 கிராம் மற்றும் 80 மில்லி கிராம் ஹெரோயின் உடன் ஒருவர் கைதாகியுள்ளார். கொஹுவலை சந்தியில் வைத்து ஒரு கிராம் ஹெரோயினுடன் பெண்ணொருவர் கைதானதாகவும் பொலிஸார் கூறினர். (அ-2)

# புகலிடகோரிக்கையாளர்களுக்கு ஒரு மில்லியன் நட்டஈடு ஒதுக்கீடு

## பிரித்தானியா தெரிவிப்பு

(கொழும்பு)

சிறுவர் புகலிடக்கோரிக்கையாளர்களுக்கு பிரித்தானியா ஒரு மில்லியன் பவுண்ட் நட்ட ஈடு வழங்கியுள்ளது. நாற்பது சிறுவர் புகலிடக்கோரிக்கையாளர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நட்ட ஈடாக இந்தப் பணம் வழங்கப்பட்டுள்ளது:

குறித்த சிறுவர் புகலிடக் கோரிக்கையாளர்களை பிரித்தானிய அதிகாரிகள் வயது வந்த புகலிடக்கோரிக்கையாளர்களுடன் தடுத்து வைத்திருந்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பிரித்தானிய அரசாங்கத்தினால் புகலிக் கோரிக்கையாளர்களுக்கு இவ்வளவு பாரிய தொகை நட்டஈடாக வழங்கியமை இதுவே முதல்தடவை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புகலிடக்கோரிக்கையாளர் தொடர்பான கொள்கைகளில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியம் என பிரித்தானியா ஒப்புக் கொண்டுள்ளது.

எவ்வாறாயினும் குறித்த சிறுவர் புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்ந்தும் தடுப்புக் காவலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இலங்கை, ஆப்கானிஸ்தான், ஈரான், நைஜீரியா, எரித்திரியா, உகண்டா, சோமாலியா மற்றும் சீனா ஆகிய நாடுகளைச் சேர்ந்த சிறுவர்களே இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

14 வயதான இலங்கைச் சிறுமியே இதில் மிகவும் இளவயதானவர் என தெரிவிக்கப்படுகின்றது. சித்திரவதைகள், பாலியல் துஷ்பிரயோகங்கள் போன்ற பல்வேறு பிரச்சினைகளினால் பாதிக்கப்பட்ட சிறுவர் புகலிடக் கோரிக்கையாளர்களே இவ்வாறு புகலிடம் கோரியுள்ளனர். (அ-2)

# கொள்ளையிட முயன்ற சிப்பாய் கைதானார்

குருநாகல் மக்கள் வங்கிக் கிளையின் தன்னியக்க பணப்பரிமாற்ற இயந்திரத்திலிருந்து பணத்தைக் கொள்ளையடிக்க முயற்சித்தார் எனும் குற்றச்சாட்டில் இராணுவ சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

22 வயதான இச்சிப்பாய் கெமனுவோச் படைப்பிரிவைச் சேர்ந்தவர். யாழ். நாவற்குளம் முகாமில் கடமையாற்றும் இவர் விடுமுறையில் சென்றிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

அலாரம் அடித்ததையடுத்து பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்தனர்.

அப்போது சந்தேகநபர் அங்கிருந்து தப்பியோடி குருநாகல் பொது நூலக மைதானத்தில் மறைந்திருந்த போது கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மேற்படி கிளையின் தன்னியக்க இயந்திரங்களில் அவ்வேளையில் 15 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான பணம் இருந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-2)


யாழ் நகரில்!

வாடகைக்கு

கார்கள், வான்கள்

Rent a Car



- சாரதியுடன் வாகனம்
- சாரதியில்லாமல் வாகனம்
- திருமண வைபவங்கள், சுற்றுலாக்களுக்கு
- வெளியூர் பயணங்களுக்கு
- கார், வான், கனரகவாகனங்கள்
- வாராந்த மாதாந்த வாடகைக்கு

K.J Enterprises

(7525)

105/06, சி.பொன்னம்பலம் லேன்,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

Hotline : 0759463632, 0750422904
Office : 021320 2198






# சிறுவர் அரங்கம்

15

## அம்புலி மாமா கதைகள்

## பேராசை



பிரம்மதத்தன் காசியை ஆண்டபோது போதிசத்வர் செருப்புத் தைக்கும் குடும்பத்தில் ஒரு சிறு கிராமத்தில் அவதரித்தார். அவர் பெரியவராகித் தன் குலத்தொழிலைச் செய்து ஒரு சித்த யோகியை அணுகி அவரிடமிருந்து ஒரு அபூர்வ மந்திரத்தைக் கற்றுக் கொண்டார்.

அந்த மந்திரத்தைக் கொண்டு காய் காய்க்காத காலத்தில்கூட மாமரங்களில் மாம்பழங்களை வரவழைத்து அவற்றை விற்று வாழ்ந்து வந்தார். தினமும் காட்டிற்குப் போய் ஒரு மாமரத்தின் அருகே நின்று மந்திரம் ஓதியவாறே அவர் அதன்மீது நீரைத் தெளிக்க அம்மரம் பழங்களாகக் கீழே உதிர்ந்து விழச் செய்யும். இவ்வாறு போதிசத்வர் செய்வதை ஒருநாள் சுநந்தன் என்ற அந்தண வாலிபன் பார்த்து விட்டான்.

அவன் எந்த வேலையையும் செய்யாமல் தனக்குப் பணம் வந்து குவிந்துவிடவேண்டும் என்று பகல் கனவு காண்பவன். அவன் போதிசத்வர் செய்த அற்புதத்தைக் கண்டதும் அவரிடமிருந்து அந்த அபூர்வ மந்திரத்தைக் கற்றுக்கொண்டு விடுவது என அவன் தீர்மானித்து அப்போது முதல் போதிசத்வருக்குப் பணிவிடைகள் செய்யலானான். கீழே விழுந்த பழங்களை எடுத்து மூட்டையாகக் கட்டிச் சுமந்து கொண்டு அவர் பின் நடந்து அவர் வீட்டில் கொண்டுபோய் இறக்கினான். அவருடைய வீட்டு வேலைகளை விழுந்து விழுந்து செய்தான்.

இதைக் கண்ட போதிசத்வர் தன் மனைவியிடம் "இவன் ஏன் இப்படி நமக்கு வேலை செய்கிறான் தெரியுமா? என்னிடமிருந்து அபூர்வ மந்திரத்தைக் கற்றுக்கொள்ளத்தான். இவன் அதனைக் கற்றுக்கொண்டாலும் வெகு சீக்கிரமே அதன் சக்தி இவனிடம் இல்லாமல் போய்விடும்" என்றார். அவரது மனைவியோ பாவம்! எப்படி மாடு போல நம் வீட்டில் உழைக்கிறான்! நீங்கள் அவனுக்கு மந்திரத்தை உபதேசித்து விடுங்கள். பலிப்பதும் பலிக்காததும்



அவனவன் தலையெழுத்தைப் பொறுத்தது" என்றாள்.

போதிசத்வரும் தம் மனைவியின் வற்புறுத்தலின் பேரில் சுநந்தனுக்கு அந்த அபூர்வ மந்திரத்தை உபதேசித்து "நீ இதனை யாரிடமிருந்து கற்றாய் என்ற இரகசியத்தை வெளியிடக் கூடாது. அப்படி வெளியிட்டால் மறுவிநாடியே உனக்கு இந்த மந்திரம் பலிக்காது" என்றார்.

சுநந்தனும் யாரிடமும் அந்த இரகசியத்தைக் கூறுவதில்லை என உறுதிமொழி அளித்து போதிசத்வரிடம் விடைபெற்றுக்கொண்டு சென்றான். அவன் தினமும் நிறைய மாம்பழங்களை மரங்களில் தான் உபதேசம் பெற்ற மந்திரத்தின் சக்தியால் வரவழைத்து அவற்றை விற்று நிறையப் பணம் அடைந்து வரலானான்.

இவ்வாறு சுநந்தன் வரவழைத்து விற்ற மாம்பழங்களில் ஒன்று காசி மன்னனுக்குக் கிடைத்தது. அவன் மாம்பழக் காலமில்லாத காலத்தில் மிகப்பெரிய ருசியான மாம்பழம் கிடைத்தது கண்டு ஆச்சரியப்பட்டான். அத்தகைய பழம் எங்கே கிடைத்தது என விசாரிக்கலானான். சுநந்தன்தான் அதனை விற்றவன் என்பதை அவன் தன் ஆட்களிடமிருந்து தெரிந்து கொண்டான்.


அவன் உடனே சுநந்தனை அழைத்து விசாரிக்கவே சுநந்தனும் "என்னிடம் அபூர்வ மந்திரசக்தி உள்ளது. அதனால் இத்தகைய பழங்களை வரவழைக்கிறேன்" என்று ஜம்பம் அடித்துக் கூறினான். அரசனும் அந்த சக்தியைக் காணவிரும்பவே சுநந்தனும் பலர் முன்னிலையில் அரசனின் தோட்டத்திலுள்ள ஒரு மாமரத்தின் முன்போய் நின்று அதன் மீது நீரைத்தெளித்து மந்திரத்தை உச்சரித்தான். மறுவிநாடியே அம்மரத்தில் மாம்பழங்கள் தோன்றி கீழே விழுந்தன. இந்த அதிசயத்தைக் கண்டு காசி மன்னன் ஆச்சரியப்பட்டு "ஆகா! இந்த அற்புத மந்திரத்தை உனக்கு உபதேசித்த மகான் யார்? உடனே சொல்" என்று கேட்டான்.

சுநந்தன் முதலில் தான் அதனைக் கற்றது போதிசத்வரிடமிருந்து எனச் சொல்லவேண்டாம் என நினைத்தான். ஆனால் அரசன் மீண்டும் மீண்டும் கேட்கவே சுநந்தனும் போதிசத்வர் எச்சரித்ததையும் பொருட்படுத்தாமல் தான் அந்த மந்திரத்தைக் கற்றது செருப்புத் தைக்கும் குலத்தில் பிறந்த போதிசத்வரிடமிருந்து என்று கூறிவிட்டான்.

இவ்வளவு சிரமப்பட்டுக் கற்ற மந்திரத்தின் சக்தி திடீரென்று தன்னை விட்டு விட்டுப் போய் விடவா போகிறது என அவன் எண்ணித் தன்குருவின் கட்டளையையும் மீறி இரகசியத்தை வெளியிட்டு விட்டான். காசி மன்னன் ஆச்சரியப்பட்டவாறே "அடேயப்பா! தாழ்குலத்தில் பிறந்த ஒருவனுக்கா இவ்வளவு சக்தி! பிராமணனாகிய நீ அவனிடம் உபதேசம் பெற்றது பற்றிக் கொஞ்சம்கூட வெட்கப்படவில்லையா?" என்று கேட்டான்.

சுநந்தனும் பதில் எதுவும் கூறாமல் தலை குனிந்தவாறே அங்கிருந்து சென்றான்.

ஓரிரண்டு மாதங்களாயின. காசி மன்னனுக்கு மாம்பழம் சாப்பிட வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. உடனே அவன் சுநந்தனை அழைத்துவரச் சொன்னான். சுநந்தன் வந்ததும் காசி மன்னன் அவனிடம் மந்திரத்தை உச்சரித்து முன்செய்ததுபோல இப்போதும் தனக்கு மாம்பழங்களை வரவழைத்துக் கொடுக்கும்படி கூறினான். சுநந்தனும் மிகவும் கர்வத்தோடு முன்போல அரசனின் தோட்டத்திற்குப் போனான். அவனோடு காசிமன்னனும் மற்றும் பலரும் சென்றார்கள். சுநந்தனும் ஒரு மாமரத்தின் முன் நின்று அதன்மீது நீரைத் தெளித்து



மந்திரத்தை உச்சரிக்க முயன்றான். ஆனால் அவனுக்கு மந்திரமே ஞாபகத்திற்கு வரவில்லை.

காசி மன்னனும் மற்றவர்களும் அது கண்டு ஆச்சரியப்பட்டனர். அப்போது சுநந்தன் "நான் என் குருவின் கட்டளையை மீறினேன்.

நான் யாரிடமிருந்து இந்த மந்திரத்தைக் கற்றேன் என்ற இரகசியத்தை காசி மன்னனிடம் கூறினேன். அதனால் எனக்கு அப்போது முதல் மந்திரம் பலிக்காது போயிற்று" என்று எல்லோரிடமும் கூறிவிட்டு தலைகுனிந்தவாறே தன் வீட்டிற்குச் சென்றான்.

# கவிதைத் கலசம்
## சங்குநாதம்

### இமயம் தொட...

உன்னை நியாயப்படுத்த
உண்மை நியாயத்தை
மறைப்பாயாயின்
மனிதப் பண்பிலிருந்து
நீ விலக்கப்படுவாய்
மனிதம் மறுக்கப்படும்
சந்தர்ப்பங்களில்
தெய்வம் கண்விழித்தேயிருக்கும்
மனிதனை மனிதனாக்கவே
தெய்வங்கள் தோன்றின

மாவை நா.கஜேந்திரன்

### என் உயிரே

என் மனதில் காதல் விதையை தூவி விட்டு
மெள்ள சங்கீதமாக அமர்ந்திருப்பவளே
புழுதி படிந்து மீட்டப் படாமலே
கண்டெடுத்த தேவதை நீ காலமெலாம் என்
இதயக்கோயிலில் வைத்து ஆராதிப்பேன் தேவியே

க.செல்வமலர்
இடைக்காடு

### மை கள் பலவண்ணம்

பிறக்கையில் நீ தனிமை வாழ்வதோ பேரினிமை
மழலைகள் கிடைப்பதும் அருமை
அவை சிறப்புடன் அமைந்தாலோ பெருமை
மனைவியோ சட்ட உரிமை மக்களோ எம் உடைமை
வருவதோ என்றும் முதுமை அதனை எண்ணிடின்
பெரும் கொடுமை இறக்கையில் நீயோ தனிமை
ஆனால் விட்டுவிடு உந்தன் பகைமை
வாழ்க்கையில் கொண்டிடு பொறுமை
சரிவர செய்திடு கடமை என்றுமே கடைப்பிடி நேர்மை
அதனால் கிடைத்திடும் பேருடைமை
கொண்டிரு என்றுமே வாய்மை அதனால் நீ
அடைவதோ மேன்மை – கொள்ளாதே
என்றும் பொறாமை அதை கொன்றிட்டால்
நீங்கிடும் வேற்றுமை பின் வந்துடுமே ஒற்றுமை

பொ. புனிதன்
வரியப்புலம்

### அவரவர் பார்வையில்

**மாறுதல்**

வழி மாறிய யானை வழிமாறியது
வழி தவறிய வழிப் போக்னுடன்

**கசப்பு**

காட்டு வாழ்க்கை கசப்பானதால்
கார்தேடி வந்ததோ காட்டுயானை

**எண்ணம்**

கால் நடை பயணியும்
கார்பயணம் செல்கின்றான்
கால்நடை தான்
கார்பயணம் சென்றால் என்ன

**வழி**

வழி மாறிய மகிழ்ந்து
வழி தவறிய (மத) யானையிடம்
வழி சொல்ல யாருண்டு
வழிபடும் கடவுள் தான் வரவேண்டும்
வழிப்பாதை சீராக்க

- வாகீசன்
இணுவில்

### கைவிடப்பட்டவள்


திருமண வாக்குறுதியில்
கடைசிவரை கூடவருவேனென
கைகோர்த்த கணவன்
மாதவிகளின் மனம் கண்டு
மட்டில்லா பேரின்பத்தில்
மதிமயங்கியதால்...!
மனம் நொந்து புலம்புகிறாள்
மங்கையொருத்தி
கண்ணகியாய்!
கோவலர்களும் மாதவிகளும்
கூடிக் குலாவுவது
இன்றைய கண்ணகிகள்
மட்டும்...
கையில் குழந்தையுடன்
சோற்றுக்காய் வாடுகின்றனர்
கோவலர்களும் மாதவிகளும்
தாம்பாளம் விரிக்கும்
சமூகம்...!
கைவிடப்பட்ட
கண்ணகிகளை மட்டும்
கரமொதுக்குகிறது

பி.ஏ. றெனோல்ட்
யாழ்.பல்கலைக்கழகம்

### ஊரைவிட்டு

அடிக்கடி ஊரைவிட்டு ஊர் ஓடி
குட்டிச்சுவராய் போனது வாழ்க்கை
தழைக்க தழைக்க வெட்டி எறியும்
வாழை மரம் போல
வெட்டி எறியப்பட்டோம் நாங்கள்
அப்போது தட்டிக் கேட்க ஆளில்லை
எல்லோரும் எட்டத் தள்ளி
நின்றார்கள் எங்களை தனிக்க விட்டு
நாங்கள் மீண்டும் ஊர்
திரும்பினாலும் உறவுகள்
மாண்ட இடம் நோக்கியே
பறக்கிறது எங்கள் நினைவுகள்

உயிரோவியன்



## மௌனத்தின் தேடல் – 109

### தமிழ் குலமே

வலம் வந்தோம் வீரர்களாய்
நிலம் இழந்து நலம் இழந்து
புலம் பெயர்ந்து சென்றாலும்
நீலம் வானில் படர்ந்தது போல்
ஆலம் விழுதின் சமபலம்போல்
குலம்காக்க பலம்பார்க்கின்றீரா?

க. அபர்ணா
வட்டுக்கோட்டை

### வீரத்தின் பரிசு

மனிதா நீ வீரனாய் இரு
வீரத்தை வெளிப்படுத்தாதே
ஏன் என்று தெரியுமா
ஒருவன் வீரனாய் இருந்தால்
அது மற்றவர்களுக்கு பிடிக்காது
அனைவரும் சேர்ந்து
உன்னை அழித்துவிடுவர்
இது தான் உலக வாழ்க்கையடா

யோ.தீபன்ராஜ்
நெல்லியடி, ஹாட்லிக் கல்லூரி

### வெற்றி நிச்சயம்

வெற்றி தோல்வி என்பது
வாழ்க்கையில் சகஜம்
தோல்வி என்பது
வெற்றியின் முதற்படி
தோல்வி என்பது
நிலையானது அல்ல
எங்களுக்கும் வெற்றி
கிடைப்பது நிச்சயம்

திருமதி சு.கமலாதேவி
அராலி தெற்கு

### போட்டி

குழந்தையாக பிறக்கும் போது
தாய்க்கும் குழந்தைக்கும்
இடையே போட்டி
இளைஞனாக வளர்ந்தவுடன்
வாழ்க்கைக்கும் இறைவனுக்கும் போட்டி
திருமணம் ஆகிவிட்டால்
கணவனுக்கும் மனைவிக்கும் போட்டி
அரசியலில் குதித்து விட்டால்
ஆளும்கட்சிக்கும் எதிர்
கட்சிக்கும் போட்டி

மு.நித்தி
தாவடியூர்

### பந்தயமா, பலமா

ஏன் இந்த பந்தயம்
எதற்காக இந்த பந்தயம்
மனிதர் மனிதரை
நசுக்கவா - இல்லை
மனிதப் பெலத்தை காட்டவா
எதுவானாலும் உங்கள் முடிவு
உங்களோடுதான்

அ.அன்ரன்
யாழ்ப்பாணம்

### உறவு வேண்டும்

எங்கும் சமாதானம் வேண்டும்
என்றே பேச்சு
உங்கள் கைகலப்பு எப்படி ஆச்சு
பங்கம் இல்லா உறவே
எங்கள் மூச்சே
கை கலப்பு வேண்டா
கைகுலுக்கி வாழ்வேன்

தேவி-நாதன்

### பலப் பரீட்சை

தன் மானங் காத்த மறத் தமிழன்
தலை நிமிர்ந்து வாழத்தான்
வேண்டாம் பலப் பரீட்சை
வெற்றி நிச்சயம்

ஆதிரை
ஆவரங்கால்

### வழிகாட்டல்

இளம் சந்ததியே
புரிந்து கொள்ளுங்கள்
அற்பத்தனம் புரியாமல்
சிதைக்கின்றோம் -எம்
சிநேகிதத்தை

சிவமணி
புதுக்குடியிருப்பு

### கைச்சாத்து ஒப்பந்தம்

கைகோப்பா! கைகலப்பா- இது
கணக்களுக்கு தெரியவில்லை
கனமான கரங்களென்றால்- அது
கனிவான கைச்சாத்து
ஒப்பந்தம் தான்

மு.சுகந்தினி
அச்சுவேலி தெற்கு

### போராட்டம்

வெற்றியென்று போராடுகிறாயா?
தோல்வியென்று போராடுகிறாயா?
எதையும் சந்திக்க தயாராக இரு
ஆனால் எது வந்தாலும் -நம்
தமிழரின் துயர் தீர்க்கப்போராடு

யோ.சுனபதா
யா/ வடமராட்சி இ.ம.க

### பலப்பரீட்சை

போட்டியில்லா வாழ்க்கை
நாட்டில் எங்குமே இல்லை
உறுதியான கரங்கள் பற்றி
உந்தித் தள்ளிச் சாய்த்து
வெற்றி பெறத்
துடிக்கின்றார் இருவரும்
பொறுத்திருந்து பார்ப்போம்
யார் கை ஓங்குமென்று

துரை
தென் மட்டுவில்

### மனிதன்

மனிதனுக்கு மனிதன் பலத்தை காட்டி
மாண்டவர்கள் இன்று எத்தனைபேர்
மானிடனே நீ சிந்தித்திருந்தால்
மனிதன் இரத்தம் சிந்தியா இருப்பான்

திருமதி.அ.மேரி அல்போன்சா
குருநகர்

### பரிசு

கையை மடக்கு
இது போட்டியில் பரிசு
மனதை அடக்கு
அது வாழ்க்கையின் பரிசு

துணவியூர் , நடா

## சங்குநாதம் மௌனத்தின் தேடல் –110



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 24.02.2012 ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளிற்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையத்தினால் நடத்தப்பட்ட பரீட்சையில் தெரிவானோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு வெளிக்களநிலையத்தினால் க.பொ.த. உயர்தர மாணவர்களிடையே கணித, விஞ்ஞான, வர்த்தகப் பாடப் பரீட்சைகள் நடத்தப்பட்டன. இப்பிரிவுகளில் புள்ளி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் பெயர் விபரங்களை யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா அறிவித்துள்ளார்.

இதில் ஒவ்வொரு பிரிவிலும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விபரம் வருமாறு,

**கணிதம்**

**தரம் 13 (2012)**

பி.கஜலக்சன்(ஆங்கிலமொழிமூலம்) (யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி), ஆர். நிதர்சன் (ஆங்கிலமொழிமூலம்) (யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி), எஸ்.கீதரி (யா/சென் ஜோன்ஸ் கல்லூரி), பி.ஜனார்த்தனசர்மா (ஆங்கிலமொழிமூலம்) (யா/ இந்துக் கல்லூரி), கே. டசின்திரகிருஷ்ணா (ஆங்கில மொழி மூலம்) (யா/சென் ஜோன்ஸ் கல்லூரி), வி.மகிலன்(ஆங்கிலமொழிமூலம்) (யா/ இந்துக் கல்லூரி), எஸ்.கஜந்தன் (ஆங்கில மொழி மூலம்) (யா/சென் ஜோன்ஸ் கல்லூரி), எம்.விதுரா (யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), எஸ். விதுர்சன் (யா/சென் ஜோன்ஸ் கல்லூரி), எஸ்.சரத்பவான் (யா/, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), பி.தாஸ் மோகன் (யா/ பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), எம். பார்த்தீபன் (யா/ பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி),வை.ஜனூஸ் (யா/ சென் ஜோன்ஸ் கல்லூரி), எஸ். மயூரன் (யா/ கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி), எஸ். நிசாந்தன் (யா/ பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), கே.ஐங்கரன் (யா/ பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), எஸ்.அகிலேந்திரன் (யா/கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி), ஜே.பிரசாந்த் (யா/கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி), எஸ். சுவீந்திரன் (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), ஏ.விமோசனன் (யா/ இந்துக் கல்லூரி), எஸ்.சர்மி (யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), கே.சுதர்சன் (யா/ பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), கே.பிரசாந்த் (யா/ பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), கே.கனபாலன் (யா/ இந்துக் கல்லூரி), ஜி.தாரணி (ஆங்கிலமொழிமூலம்) (யா/சுண்டுக்குழி பெண்கள் கல்லூரி), எஸ். கிருசாந்த் (யா/ பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), எம். கஜீபன் (யா/ இந்துக் கல்லூரி), கே.மயூரன் யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி), பி.பானுகோபன் (யா/ பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), எஸ். நிசாந்தன் (யா/ சென் ஜோன்ஸ் கல்லூரி)

**உயிரியல்**

**தரம் 13 (2012)**

எஸ்.சுமிதா (யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), எஸ். பிருந்தா (யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), என்.மாதங்கி (யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), வி.டக்சனா (யா/ சுண்டுக்குழி பெண்கள் கல்லூரி), எம். மிதுரிகா (யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), எஸ்.இளகீரன் (யா/ பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), என்.சரணியா (யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), பி.திலக்சி (யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), எஸ்.சோபிகா (யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), வி.கீர்த்தனன் (யா/ பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), பி.சயினி (யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), ஜே.அன்ரூ வசந்தன் (ஆங்கிலமொழிமூலம்) (யா/சென் ஜோன்ஸ் கல்லூரி), எச்.சோலமன் ராஜாராம் (ஆங்கில மொழிமூலம்) (யா/சென் ஜோன்ஸ் கல்லூரி), ஜே.விதுஜா (யா/சுண்டுக்குழி பெண்கள் கல்லூரி), எஸ்.சோபிதா (யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), யசோத கிருஷ்ணா (யா/சென் ஜோன்ஸ் கல்லூரி), கே.பிரசாந்தன் (ஆங்கிலமொழிமூலம்)(யா/ இந்துக் கல்லூரி), பி.துவாரகன் (யா/ பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), ஆர். கோபிகா (யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), ஏ.ராஜ்கரன் (யா/கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி), வை.விதுசன் (யா/ இந்துக் கல்லூரி), ஐ.ஜனோசா (யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), எஸ்.மிர்ஜினி (யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), ஆர்.சாம்பவி (யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), எஸ்.ஜதுசன் (யா/ இந்துக் கல்லூரி), ஆர்.கீர்த்தனா (யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை)

**வர்த்தகம்**

**தரம் 13 (2012)**

எம்.சிவரோசன்(ஆங்கிலமொழிமூலம்) (யா/சென் ஜோன்ஸ் கல்லூரி), எஸ்.சிந்து (யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி), எஸ்.சுதன் (யா/கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி), எஸ்.பிரகாஷ் (யா/ இந்துக் கல்லூரி), வி.நிரோஜன் (யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி), ரி.தேனுஜன் (யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி), எஸ்.சஞ்சீவன் (யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி), ஜி. மயூரன் (யா/ இந்துக் கல்லூரி), எஸ்.கோகிலன் (யா/கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி), கே.தனுசியா (யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), எஸ்.சுகன்யா (யா/கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி), பி.தனுஜன் (யா/ இந்துக் கல்லூரி);யூ.விதுசன் (யா/சென் ஜோன்ஸ் கல்லூரி), எஸ்.யுனித்ரன் (யா/ இந்துக் கல்லூரி), பி.ரென்சி (யா/ இந்துக் கல்லூரி) எஸ். ஆரணி (யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி), கே.துசியந்தன் (யா/ இந்துக் கல்லூரி), எஸ்.இதயசந்திரன் (யா/ இந்துக் கல்லூரி), எஸ். மயூரன் (யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்), ஏ.லோகநந்தன் (யா/ இந்துக் கல்லூரி), ரி.மனோஜன் (யா/சென் ஜோன்ஸ் கல்லூரி), எம்.சஜீவானந்த் (யா/சென் ஜோன்ஸ் கல்லூரி), எஸ். கிரிசாந்த் (யா/ இந்துக் கல்லூரி), ஜே.ஜதீசன் (யா/ இந்துக் கல்லூரி), என். பவதர்சன் (யா/ இந்துக் கல்லூரி), ஆர். நிரேஷ் (யா/ இந்துக் கல்லூரி), எஸ். ஜதுசன் (யா/ இந்துக் கல்லூரி)

**கணிதம்**

**தரம் 12 (2013)**

ஆர்.ஜதுசன் (யா/ இந்துக் கல்லூரி), எஸ். ராம்ராஜ் (யா/ இந்துக் கல்லூரி), யூ.கீர்த்தனன் (யா/ பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), கே. நிலக்ஷன் (ஆங்கில மொழிமூலம்) (யா/ இந்துக் கல்லூரி), கே.சுதாகர் (யா/ இந்துக் கல்லூரி), எஸ். கஜானன் (யா/ இந்துக் கல்லூரி), வி.ஜதுர்சன் (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), எஸ்.குருபரன் (யா/ இந்துக் கல்லூரி), ஆர்.அனட்ருபிசா (யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), கே. நிசாந்தினி (யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), ஜே. கீதராணி (யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), எஸ்.மேகலாதன் (யா/ இந்துக் கல்லூரி), என்.விவேக் (யா/ பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), எச்.சுதர்சன் (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி), எஸ்.டினேஷ் (யா/ பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), எஸ்.சிவானுஜன் (யா/ இந்துக் கல்லூரி), பி.பிரவீனா (யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), என்.பிருந்தா (யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), எஸ்.கபிதா (யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), எஸ்.குணேசன் (யா/சென் ஜோன்ஸ் கல்லூரி), ரி.கஜகரன் (யா/கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி), கே. எழிலரசி (யா/கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி), எஸ்.கிருஷ்ணபிரதாப் (யா/ பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), என்.சதுர்சன் (யா/சென் ஜோன்ஸ் கல்லூரி), கே.பிரணவன் (யா/நெல்லியடி மத்திய மகா வித்தி), ரி.சுதாகரன் (யா/ பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), பி.கிருபாகரன் (யா/ பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி), பி.வினுசிகா (யா/ வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலை), ஜே.ஜனுசன் (ஆங்கில மொழிமூலம்) (யா/ இந்துக் கல்லூரி), எஸ்.சுபரஞ்ஜனி (யா/ இந்து மகளிர் கல்லூரி).

(தொடரும்)

# நாட்டின் பிரதமருக்கு ஏற்பட்ட அசௌகரியம்

## சிங்கள நாளேடு தகவல்

(கொழும்பு)

அனுராதபுரத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றிற்காக பிரதமர் டி.எம். ஜயரட்ன உலங்குவானூர்தியில் பயணம் செய்திருந்தார். எனினும் பிரதமருக்காக காத்திருக்காது குறித்த உலங்குவானூர்தி கொழும்பு திரும்பியதாக தெரிவிக்கப்படுகின்றது.

பிரதமரின் பாதுகாப்பு பிரிவினரிடம் அறிவிக்காமல் திடீரென குறித்த உலங்குவானூர்தி கொழும்பு திரும்பியுள்ளது. இதனால் பிரதமர் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பிலிருந்து கிடைக்கப்பெற்ற அவசர அழைப்பை அடுத்து இவ்வாறு உலங்குவானூர்தி அவசரமாக திரும்பியுள்ளது. குறித்த நிகழ்வின் பின்னர் இது மூலம் கம்பளைக்கு செல்லவிருப்பதாக பிரதமர் ஏற்கனவே விமானப்படையினருக்கு அறிவித்திருந்தார்.

எனினும் பிரதமரின் அறிவுறுத்தல்களை உதாசீனம் செய்து குறித்த விமானி உலங்குவானூர்தியை கொழும்புக்குச் செலுத்தியுள்ளார். இதனால் பிரதமர் தரைவழியாக கம்பளைக்குச் சென்றார் என இலங்கையின் முக்கிய சிங்கள பத்திரிகையில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை அந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது,

சில சக்திகள் சர்வதேச சமூகத்துடன் இணைந்து நாட்டுக்கு எதிராக செயற்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

மீண்டும் இந்த நாட்டில் ஆக்கிரமிப்பு ஏற்படுவதனை சிலர் விரும்புகின்றனர். நாட்டின் சுயாதீன தன்மையையும் கலாசாரத்தையும் பாதுகாக்க வேண்டியது அனைவரினதும் கடமையாகும்.

எனினும் சிலர் சர்வதேச சமூகத்துடன் இணைந்து நாட்டுக்கு எதிராக சூழ்ச்சி செய்து வருகின்றனர் என பிரதமர் தெரிவித்துள்ளார்.

(அ-2)

# மேலைத்தேய சக்திகளின் சதிக்கு எதிர்க்கட்சித்தலைவர் துணை போகிறார்

## அமைச்சர் டளஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஆணைக்குழு அறிக்கை மற்றும் சனல் 4 போர்க்குற்றச்சாட்டு தொடர்பில் கடந்த 10 ஆம் திகதி ரணில் விக்ரமசிங்க பாராளுமன்றில் ஆவணமொன்றை சமர்ப்பித்தமை பாரிய சந்தேகத்தை எழுப்புவதாக அமைச்சர் டளஸ் அழகப்பெரும குற்றம் சாட்டியுள்ளார்.


கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற லங்கா சுதந்திரக் கட்சியின் ஊடகவியலாளர்கள் மாநாட்டில் கருத்துத் தெரிவித்த போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான ஆவணமொன்றை எதிர்க்கட்சித் தலைவர் கடந்த 10 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். இதில் சனல் 4 குற்றச்சாட்டு தொடர்பாகவும் 2002 இல் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் இந்த செய்தி சிங்கள ஊடகங்கள் எதிலும் பிரசுரமாகவில்லை. இந்த விடயத்தின் பின்னணி குறித்து பாரிய சந்தேகம் எழுகிறது.

மேலும் இலங்கைக்கு எதிரான மேலைத்தேய சக்திகளின் சதிக்கு எதிர்க்கட்சித் தலைவர் துணை போவதாக அமைச்சர் குற்றம் சாட்டியுள்ளார்.

இவ்வாறு பாராளுமன்றில் அரசாங்கத்திற்கெதிராக செயற்பட்டு ஐ.தே.க. தலைவர் பாரிய காட்டிக் கொடுப்பொன்றை செய்துள்ளார். இவர் இலங்கை நாட்டவரா என்ற சந்தேகம் எழுகிறது. மார்ச் மாதம் நடைபெறவுள்ள மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கையை பலி எடுக்கும் நடவடிக்கையில் சர்வதேச தரப்புக்கள் முயற்சிகள் மேற்கொண்டுள்ளன.




வியட்நாம், கொரியா, ஆப்கானிஸ்தான், ஈராக் போன்ற நாடுகளில் யுத்தக் குற்றங்கள் புரிந்த சில மேற்குலக நாடுகள் இலங்கைக்கு எதிரான யுத்தக் குற்றச்சாட்டுக்களை சுமத்த முயல்கின்றன.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் ஐ.தே.க. தலைவர் தனது செயலினூடாக சர்வதேச சக்திகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார் என அமைச்சர் டளஸ் தெரிவித்துள்ளார்.

(அ-2)

# அதிசய உலகம்...

## எலுமிச்சம்பழத்தில் மின்சாரம் தயாரித்து மாணவன் சாதனை



எலுமிச்சம் பழத்தில் மின்சாரம் தயாரித்து இந்திய மாநிலமான தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டத்தில் தென்காசி பகுதியைச் சேர்ந்த பாடசாலை மாணவர் அனைவரையும் ஆச் சரியப்பட வைத்துள்ளார்.


தென்காசி வடக்கு கீழ கொய்க் கால் தெருவை சேர்ந்தவர் காதர் முகைதீன். மெக் கானிகல் என்ஜினியர். அவரது மனைவி ஷமீமா கணனி என்ஜினியர். அவர்களின் மகன் முகமது ஹம்தான் (வயது-11). இவர் பழைய குற்றாலம் ஹில்டன் மெட்ரிக் மேல் நிலைப் பாடசாலையில் 6 ஆம் வகுப்பு படித்து வருகிறார். இம்மாணவர் எலுமிச்சம்பழத்தில் இருந்து மின்சாரம் தயாரித்து சாதனை படைத்துள்ளார்.

அவன் நான்கு எலுமிச்சம் பழங்களை எடுத்துக் கொண்டு ஒவ்வொரு பழத்திலும் இரும்பு ஆணி மற்றும் காப்பர் கம்பியை செருகினார். அதன்பின் காப்பர் கம்பியை தனி வயரிலும் இரும்பு ஆணியை தனி வயரிலும் இணைத்து 2 வோல்ட் திறன் கொண்ட சிறிய பல்பினை எரிய வைத்தான்.

இது பற்றி மாணவர் முகமது ஹம்தான் கூறுகையில், எலுமிச்சை ,பல்லாரி, உருளைக் கிழங்கு, தக்காளி, கத்தரிக்காய், ஒரஞ்சு, வாழைப்பழம் உள்ளிட்டவைகளில் இருந்து மின்சாரம் தயாரிக்கலாம் என வேதியியல் ஆசிரியை கூறினார். அதனை நான் செயல் படுத்தி மின்சாரம் கிடைப்பதை உறுதிப்படுத்திக் கொண்டேன்.

ஒரு எலுமிச்சம்பழத்தில் 5 வோல்ட் மின்சாரம் கிடைக்கும் என்றார்.

## இடத்துக்கிடம் செல்லக்கூடிய உலகின் விநோதமான கென்ரெயினர் வீடுகள்




தற்போது உலகெங்கும் பல்வேறு வகையான விநோதமான வீடுகள் உருவாகி வருகின்றன.

பிரான்ஸின் Lille என்ற பிரதேசத்தில் உருவாக்கப்பட்ட விநோதமான கென்ரெயினர் வீடுகளே இவை.

8 கென்ரெயினர்களைச் சேர்த்தே ஒரு குடும்பத்துக்கு ஏற்ற வீடு ஒன்று அழகாக வடிவமைக்கப்படுகின்றது. சாதாரண வீட்டில் உள்ள அத்தனை வசதிகளும் இதில் உள்ளன.

இங்குள்ள விசேடம் என்னவென்றால் வேலை காரணமாக இடம் மாற வேண்டி வந்தாலும் வீட்டை அப்படியே தூக்கிக் கொண்டு போய்விடலாம் .

## ஆண் ஒருவர் அம்மாவான அதிசய நிகழ்வு -லண்டனில்



பொதுவாக பெண்களே குழந்தை பெற்றுக் கொள்ளும் பாக்கியத்தை தம்வசம் வைத்திருக்கிறார்கள். காரணம் இயற்கையாக பெண்களுக்கே குழந்தை உருவாகும் கருப்பை காணப்படும்.

அத்துடன் உடலமைப்பு குழந்தை வளர்ப்பதற்கும் ஏற்றவாறு அமைந்திருக்கும். ஆனால், இன்றைய தொழில்நுட்ப யுகத்தில் மனிதன் இந்த இயற்கையான விடயத்தையும் செயற்கையாக மாற்றம் செய்துள்ளான்.

லண்டனைச் சேர்ந்த ஆண் ஒருவர் தனது ஓமோனில் மாற்றத்தை ஏற்படுத்தியதன் மூலம் குழந்தை ஒன்றிற்கு தாயாகியுள்ளார். இவரே பிரித்தானியாவின் முதலாவது ஆண் தாய் ஆவார்.

## உயிருள்ள பாலங்கள் இயற்கையின் படைப்பில்



இந்தியாவின் மேக லாயா மாநிலத்தில் உள்ள சோரா என்கிற ஊரில் ஒரு வகை மரங்களின் உயிருள்ள வேர்களில்பாலங்கள் அமைக் கப்ப டுகின்றன. இங்கு பழங் குடி மக்கள் இவ்வித்தையை அறிந்து வைத்திருக்கின்றனர்.

இப்பாலங்கள் மிகவும் பல மானவை ஆனால், பாலங்கள் முழுமை பெறுகின்றமைக்கு 10 முதல் 15 வருடங்கள் வரை பொதுவாக எடுக்கின்றது . பல நூற்றாண்டு காலத்துக்கும் நீடிக்கக் கூடியவை.

## பேசும் தாவரங்கள்

செடி, கொடிகள் போன்ற தாவரங்கள் ஒன்றுடன் ஒன்று பேசிக் கொள்கின்றன என்று இங்கிலாந்து நாட்டில் உள்ள எக்ஸ்டெர் பல்கலைக்கழகத்தை சேர்ந்த விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.



முட்டைக்கோஸ் கொடியானது ஆபத்து வரலாம் என உணர்ந்தால் தனது இலைப்பகுதியில் சிறிய வெடிப்பை ஏற்படுத்துகிறது. இதன்மூலம் ஒருவித வாயுவை வெளியேற்றி ஒலியை ஏற்படுத்தி பக்கத்தில் உள்ள செடியை எச்சரிக்கை செய்கிறது. இதனை நுட்பமான கமராவின் மூலம் ஆய்வு செய்து முதன்முறையாக விஞ்ஞானிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

## வாத்து வடிவில் வந்த பூசணி



பார்த்தால் மரத்தில் வாத்து ஒன்று கூட்டில் அமர்ந்திருப்பது போலவே இருக்கிறது. ஆனால் அது ஒரு பூசணிக்காய். பிரிட்டனைச் சேர்ந்த மரிலின், லியோநெல் பேட்ரிஜ் தம்பதியினரின் தோட்டத்தில் தான் இந்த அதிசயம் நிகழ்ந்துள்ளது.

இந்த அதிசய பூசணியில் உள்ள கீறல்கள் வாத்தின் கண்கள் போல உள்ளது. வளைந்துள்ள அதன் நுனி வாத்தின் கூர்மையான மூக்கை போலவே உள்ளது.

# எரிபொருள் விலையேற்றம் தோழமைக்கட்சிகள் விமர்சனம்

எரிபொருள் விலையேற்றம் தொடர்பில் ஆளும் கட்சியின் தோழமை கட்சியான லங்கா சமசமாஜக் கட்சி அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்துள்ளது.

இது தொடர்பில் லங்கா சமசமாஜக் கட்சியின் உதவிச் செயலாளர் அனில் சொய்ஸா அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அவ்வறிக்கையில் அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்தின் ஆலோசனைக்கு அமையவே எரிபொருட்களின் விலைகளை அதிகரித்துள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார். அத்துடன் இலங்கை ரூபாவின் பெறுமதி குறைப்பும் சர்வதேச நாணய நிதியத்தின் ஆலேசனையின் பேரிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உலக பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு பிரச்சினைகள் எனபவற்றை கருத்திற்கொள்ளும் போது எரிபொருட்களின் விலைகளை மேலும் உயர்த்த வேண்டிய நிலை உள்ளது.

எனினும் தற்போது எரிபொருளின் விலையை உயர்த்தியதன் காரணமாக அரசங்கத்தின் அரசியல் ஸ்திரதன்மைக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக சொய்ஸா சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேவேளை எரிபொருள் விலையேற்றத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்திய சிலாபத்தை சேர்ந்த மீனவர் ஒருவர் கொல்லப்பட்டமையையும் லங்கா சமசமாஜக்கட்சியின் செயலாளர் கண்டித்துள்ளார்.

லங்கா சமசமாஜக்கட்சியின் சார்பில் அதன் தலைவரான திஸ்ஸ விதாரண அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சராக பதவி வகிக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-2)

# அரசின் அடக்குமுறைகளை அனுமதிக்க முடியாது

## ஹரீன் எம்.பி.தெரிவிப்பு

மக்களை தொடர்ச்சியாக அடக்குமுறைகளுக்கு உட்படுத்த அனுமதியளிக்க முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அமைதியான முறையில் நடத்தப்பட்ட போராட்டத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். மக்கள் மீதான அடக்குமுறைகளை தொடர்ச்சியாக அரசாங்கத்தினால் மேற்கொள்ள முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் மீதான மக்களின் அதிருப்தி ஆர்ப்பாட்டங்களின் மூலம் தெளிவாக வெளிப்பட்டுள்ளது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இன்றைய தினம் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டம் ஓர் ஆரம்பம் மட்டுமே என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஜனநாயக விரோத அரசாங்கத்திற்கு எதிராக தொடர்ச்சியாக போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். ஆயுதங்கள் எதனையும் ஏந்தாது மக்கள் மிகவும் அமைதியான முறையில் போராட்டம் நடத்தியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

சிலாபத்திலும் இவ்வாறான ஓர் போராட்டத்தின் மீதே பொலிஸார் தாக்குதல் நடத்தியதாகத் தெரிவித்துள்ளார். (அ-2)

# நாட்டின் சமாதானத்தை வெற்றிகொள்ள அரசு தவறியுள்ளது

## அமைச்சர் ராஜித தெரிவிப்பு

அரசாங்கம் யுத்தத்தை வெற்றிக் கொண்டாலும் சமாதானத்தை வெற்றிக்கொள்ள தவறியுள்ளதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அமைச்சர் இலங்கை மக்கள் கட்சியின் இணைந்து செயற்பட்ட காலத்தில் உயிரிழந்த அந்தக் கட்சியின் தலைவர் விஜயகுமரணதுங்க உள்ளிட்ட 118 பேரை நினைவு கூறும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வைபத்தில் உரையாற்றும் போதே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

மக்களுக்கு விடுதலையை பெற்றுக் கொடுக்கும் நோக்கிலேயே தான் மக்கள் கட்சியின் இணைந்து அரசியல் செயற்பாடுகளை ஆரம்பித்தாகவும் ராஜித கூறியுள்ளார். வீண்வார்த்தைகளை பேசிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை எனவும் இதற்காக அனைவரும் குறுகிய கொள்கைகளை கைவிட்டு ஒன்றிணைய வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார்.

இந்த பயணத்தில் மக்கள் கட்சியின் ஊடாக அரசியல் பயணத்தை ஆரம்பித்த அனைவரையும் ஒன்றிணைத்து மீண்டும் அரசியல் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் எனவும் அமைச்சர் ராஜித மேலும் கூறியுள்ளார். (அ-2)

# நிலைய படிக்கட்டில் வீழ்ந்து இலங்கைப் பெண் காயம்

சென்னை விமான நிலையத்தில் உள்ள இயங்கும் படிக்கட்டில் (எஸ்கலேட்டரில்) சிக்கி இலங்கை பெண் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார். சென்னை விமான நிலையத்திற்கு நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் கொழும்பில் இருந்து விமானம் ஒன்று சென்றது. அதில் கொழும்பைச் சேர்ந்த குறித்த பெண் உட்பட 20 சிங்கள சுற்றுலா பயணிகள் சென்றனர். தங்களுடைய பயணப் பெட்டிகளை எடுப்பதற்கு இயங்கும் படிக்கட்டுக்கு (எஸ்கலேட்டர்) அருகே அவர்கள் சென்றனர்.

அப்போது பெண்ணின் துப்பட்டா இயங்கும் படிக்கட்டின் பட்டியில் சிக்கியது.

இதில் அவர் தடுமாறி கீழே விழுந்தார். பின்னர் அவர் சிறிது தூரம் இழுத்துச் செல்லப்பட்டதால் படுகாயம் அடைந்தார். இதைப் பார்த்த ஊழியர்கள் உடனடியாக இயங்கும் படிக்கட்டை நிறுத்தி அவரை மீட்டனர். (அ-2)

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

2012.02 19

★ 1600-பெருவின் ஹுவாய்நப்பூட்டினா என்ற எரிமலை வெடித்தது.

★ 1674-இங்கிலாந்துக்கும் நெதர்லாந்துக்கும் இடையில் அமைதி உடன்பாடு எட்டப்பட்டதில் மூன்றாவது ஆங்கில டச்சு போர் முடிவுக்கு வந்தது. இதன்படி டச்சு குடியேற்றப் பகுதியான நியூ ஆம்ஸ்டார்டாம் இங்கிலாந்துக்குக் கொடுக்கப்பட்டு நியூயோர்க் எனப் பெயர் மாற்றப்பட்டது.

★ 1819-பிரித்தானியாவின் நாடுகாண் பயணி வில்லியம் ஸ்மித் தெற்கு ஷெட்லாந்து தீவுகளைக் கண்டுபிடித்தார்.

★ 1876-ஆங்கில இதழான யாழ்ப்பாணம் கத்தோலிக்க கார்டியன் என்ற முதலாவது இதழ் வெளியிடப்பட்டது.

★ 1878-கிராமபோனின் காப்புரிமத்தை தோமஸ் எடிசன் பெற்றார்.

★ 1915-முதலாம் உலகப் போர்: கலிப்பொலி போர் ஆரம்பமாயிற்று.

★ 1942-இரண்டாம் உலகப் போர் கிட்டத்தட்ட 250 ஜப்பானியப் போர் விமானங்கள் அவுஸ்திரேலியாவின் வட மண்டலத்தின் தலைநகர் டார்வின் மீது குண்டுகளை வீசியதில் 243 பேர் உயிரிழந்தனர்.

★ 1945-இரண்டாம் உலகப் போர்: இவோ ஜீமா சண்டை-30 ஆயிரம் ஐக்கிய அமெரிக்கக் கடற்படையினர் இவோ ஜீமா தீவில் தரையிறங்கினர்.

★ 1959-ஐக்கிய இராச்சியம் சைப்பிரசுக்கு விடுதலையை வழங்கியது.

★ 1968-சைப்பிரசின் லனார்க்கா விமான நிலையத்தில் கடத்தப்பட்ட எகிப்திய விமானத்தை .விடுவிக்க சைப்பிரசின் முன் அனுமதியின்றி தாக்குதலில் ஈடுபட்ட எகிப்திய அதிரடிப் படைகளை சைப்பிரஸ் இராணுவத்தினர் தாக்கியதில் 15 எகிப்திய படைகள் உயிரிழந்தனர்.

★ 1985-ஸ்பெயினில்வின் போயிங் விமானம் ஒன்று ஓயிஸ் மலையில் மோதியதில் 148 பேர் உயிரிழந்தனர்.

★ 1986-சோவியத் ஒன்றியம் மீர் விண்வெளி நிலையத்தை விண்ணுக்கு ஏவியது.

★ 1986-அம்பாறை உடும்பன்குளம் படுகொலை: அம்பாறையின் உடும்பன்குளத்தில் 60 விவசாயிகள் கொலை செய்யப்பட்டனர்.

### பிறப்புக்கள்

★ 1473-நிக்கோலாஸ் கொப்பர்னிக்கஸ், கணிதவியலாளர், விண்வெளியியலாளர் (இ.1543)

★ 1833-ஏலி டுக்கோமன், நோபல் பரிசு பெற்றவர் (இ.1906)

★ 1859-சுவாண்டே ஆரேனியஸ், நோபல் பரிசு பெற்ற சுவீடன் வேதியியலாளர் (இ.1927)

★ 1900-ஜியோர்கஸ் செஃபேரிஸ், நோபல் பரிசு பெற்ற கிரேக்க எழுத்தாளர் (இ.1971)

★ 1941-டேவிட் குரொஸ், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க இயற்பியலாளர்

★ 1943-டிம் ஹண்ட், நோபல் பரிசு பெற்ற பிரித்தானியர்

★ 1956-ரொடெரிக் மாக்கினன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்

### இறப்புக்கள்

★ 1951-அண்டிரே கைட், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு எழுத்தாளர் (பி.1869)

★ 1952-நூட் ஹாம்சன், நோபல் பரிசு பெற்ற எழுத்தாளர் (பி.1859)

★ 1988-அண்டிரே கூர்னான்ட், நோபல் பரிசு பெற்றவர் (பி.1895)



1855- தமிழறிஞர் உ.வே.சாமிநாதையாரின் பிறந்த தினம் (இ.1942)

# இந்தியாவும் ஈழத்தமிழர் பிரச்சினையும்




1970 களில் தமிழர்களைக் கடவுள்தான் காப்பாற்ற வேண்டுமென்று கூறிய, ஈழத்தமிழ் மக்களின் தேசியத் தந்தையாக கருதப்படும் எஸ்.ஜே.வி. செல்வநாயகம், (தந்தை செல்வா) 1976 ஆம் ஆண்டிலோ ஈழத்தமிழர்கள் பிரிந்து சென்று தனிநாடு அமைப்பதற்கான பிரகடனத்தை முன்மொழிந்தார்.

இதனைத்தொடர்ந்து 1977இல் இடம்பெற்ற தேர்தலில் அப்போது வடகிழக்கு வாழ் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்திய தமிழர் விடுதலைக் கூட்டணி பெருவாரியான வெற்றியும் பெறுகிறது. இதுவே பிரிந்து செல்வதற்கான மக்கள் ஆணையாகவும் கொள்ளப்பட்டது.

ஆனால், செல்வநாயகத்தின் மேற்படி நிலைப்பாடானது தெற்கின் சிங்களத் தலைவர்களை எச்சரிக்கும் நோக்கம் கொண்டதேயன்றி, அடிப்படையில் பிரிந்து செல்லும் நிலைப்பாடல்ல என்று வாதிப்போரும் உண்டு. சிலர் இதனை, ஈழத்தமிழ் மக்களை உணர்வு நிலையில் ஒருங்கிணைக்கும் ஒரு தேர்தல் உத்தி என்றும் சொல்வதுண்டு.

ஆனால், 1970 இற்கும் 1976 இற்கும் இடைப்பட்ட காலத்தில் இடம்பெற்ற சில சம்பவங்களை ஆராயும்போது, செல்வநாயகம் இந்தியாவைக் கருத்தில் கொண்டே பிரிவினைக் கோரிக்கையொன்றை முன்வைக்கும் நிலைக்கு முன்னேறியிருகிறார் என்றே முடிவுக்கே வரவேண்டியிருக்கிறது. தமிழ் மக்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டுமென்று கூறிய செல்வா, 1972 பெப்ரவரி-20இல் தமிழ்நாட்டிற்குச் சென்று காங்கிரஸ்



மற்றும் தி.மு.க. கட்சிகளின் தலைவர்களைச் சந்திக்கின்றார். தமிழ் மக்கள், பிரிந்து சென்று தனிநாடு அமைக்கும் போரிக்கையை வலியுறுத்திவருவதாகவும், அது ஒன்றே தங்களை பாதுகாத்துக் கொள்வதற்கான ஒரேயொரு மார்க்கமென்றும் தங்களை நிர்ப்பந்தித்து வருவதாகவும் மேற்படி சந்திப்பின் போது, செல்வா குறிப்பிடுகின்றார்.

இதனைத்தொடர்ந்து செல்வா, 1972 ஒக்ரோபரில்தனது நாடாளுமன்றப் பதவியிலிருந்து விலகுகின்றார். செல்வாவின் இந்த நடவடிக்கைகள் அனைத்துக்கும் ஒரு உந்து சக்தியாக இருந்தது, 1971 இல் இடம்பெற்ற பங்காளதேசத்தின் உருவாக்கமாகும். பங்காளதேசின் பிறப்பின் பின்னால் இந்தியா இருந்தது என்பதொன்றும் இரகசியமானதல்ல.

பங்காள தேசம் தனிநாடாகியமை தமிழரின் அரசியல் முன்நகர்வில் தவிர்க்க முடியாத தாக்கத்தை ஏற்படுத்தியது. சமஷ்டி நிலைப்பாட்டை கைவிட்டு தனிநாட்டை பிரகடனம் செய்யும்படியான உத்வேகத்தையும்



ஏற்படுத்தியது. (இக்கூற்று, கலாநிதி ஏ.ஜே.வில்சனுடையது)

மேலும் கலாநிதி வில்சன் பதிவு செய்திருக்கும் பிறிதொரு விடயம் இங்கு மிகுந்த முக்கியத்துவமுடையதாகும். தமிழ்நாட்டுத் தலைவர்களை சந்தித்த மேற்படி பெப்ரவரியில், வடக்கின் கரையோரக் கிராமமான வல்வெட்டித்துறையில் அனைத்துக் கட்சிகளின் கூட்டமொன்று இடம் பெறுகிறது. காணி உரிமைகள், பிராந்தியரீதியான சுயாட்சி, குடியேற்றக் கொள்கை மற்றும் தொழில் வாய்ப்புக்களின் புறக்கணிப்பு ஆகியவற்றுக்கு எதிரான ஆறு அம்சக் கோரிக்கையொன்று அங்கு முன்மொழியப்பட்டது.

இது பங்காளதேசின் சுதந்திர யுத்தத்திற்கு முன்னர் ஷேக் முஜிபுர் ரகுமானால் அரசியலமைப்புப் பேரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆறு அம்சக் கோரிக்கைகளை மீள் நினைவுபடுத்துவதாகவே இருந்தது.

மேற்படி தகவல்களை, செல்வநாயகம் இந்தியாவை கருத்தில் கொண்டே தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்திருக்கின்றார் என்ற முடிவுக்கு வருமாறு நம்மை நிர்ப்பந்திக்கிறது. பங்காளதேசுக்கு உதவியது போன்று இந்தியா ஈழத்தமிழர்களுக்கும் உதவ முன்வரும் என்னும் நம்பிக்கையே செல்வநாயகத்திடம் இருந்திருக்கிறது.

பங்காளதேசம் சுதந்திர நாடாக உருவாகிய அதே 1971ல் இலங்கையின் தெற்குப் பகுதிகளில் ஜே.வி.பி. எனப்படும் இடதுசாரி இளைஞர் குழு, அரசை வீழ்த்துவதற்கான கிளர்ச்சியிலும் ஈடுபட்டுக் கொண்டிருந்தது. மேற்படி ஜே.வி.பி இடதுசாரித்துவத்தையும், மாவோவின் இந்திய விரிவாக்க முழக்கத்தையும் ஒருங்கே சுமந்து கொண்டிருந்த அமைப்பாகும்.

தெற்கில் மேலெழுந்திருக்கும் இந்திய எதிர்ப்பு வாதத்தை எதிர் கொள்ளும் நோக்கில், இந்திய ஆதரவு நிலையை வெளிப்படுத்திவரும் ஈழத்தமிழர்களுக்கு இந்தியா பக்கபலமாக இருக்கும் என்னும் கணிப்பும் செல்வாவிடம் இருந்திருக்கக்கூடும். 1971 கிளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்கு சிறிமாவோ அரசிற்கு, இந்தியா உதவியது என்பது கவனிக்கத்தக்கது.

1970 களில் வேர்கொள்ளத் தொடங்கிய ஆயுதரீதியான போராட்டச் சிந்தனைகள், படிபடியாக ஈழத்தமிழர்களுக்கான போராட்டத்தை இளைஞர்களின் பக்கமாக இடம் மாற்றிக் கொண்டிருந்தது. அவ்வாறு தோற்றம்பெற்ற அனைத்து ஆயுத விடுதலை இயக்கங்களும் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் தமிழீழ முழக்கத்தையே தங்களது முழக்கமாகமாகவும் வரித்துக்கொண்டன. அன்றைய சூழலில் சமார் 32 ஆயுதரீதியான அமைப்புகள் இயங்கியதாக சில பதிவுகள் கூறுகின்றன. அதில் முதன்மையான ஒருசில அமைப்புக்களும் பல்வேறு சிறு குழுக்களும் அ்டங்கும்.

ஜனநாயக அரசியல் தளத்தல் தனிநாட்டுக் கோரிக்கை வழிமொழியப்பட்ட அதேகாலப்பகுதியில் இலங்கையில் ஆட்சி மாற்றமொன்றும் இடம்பெறுகின்றது. பெரும்பான்மை பலத்துடன் ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான தாராளவாத நிலைப்பாடு கொண்ட ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியைக் கைப்பற்றுகின்றது.

1977ல் செல்வநாயகம் (தேர்தலுக்கு முன்பதாக) இறக்கின்றார். செல்வநாயத்திற்கு பிற்பட்ட அரசி



யல் என்பது, செல்வநாயகத்தின் தமிழீழ முழக்கத்தை ஆயுதரீதியான விடுதலை அமைப்புகள் தத்தெடுத்துக்கொண்ட காலமாகவே கழிந்தது.

செல்வநாயகத்தின் நேரடி வாரிசுகளான கூட்டணித் தலைவர்களோ, தமிழீழக் கொள்கையை எப்போதோ கைவிட்டிருந்தனர்.

இந்தியாவை நம்பி முன்னிறுத்தப்பட்ட தமிழீழக் கோட்பாட்டை உண்மையிலேயே இந்தியா எவ்வாறு நோக்கியது?

இந்தியா தமிழீழ முழக்கத்தை தாங்கியிருந்த ஈழத்து ஆயுத இயக்கங்களுக்கு பயிற்சியளித்ததும், ஆயுதங்கள் வழங்கியதும், தமிழ்நாட்டில் சுயாதீனமாக இயங்குவதற்கு அனுமதித்திருந்ததும், இந்தியா தமிழீழத்திற்கு ஆதரவாக இருப்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தியது உண்மைதான்.




இந்தியாவிடம் பயிற்சி பெற்ற இயக்கங்களிடமும் அத்தகைய தொரு நம்பிக்கையே மேலோங்கியிருந்தது. ஆனால், இந்தியாவிடம் அப்படியான நிலைப்பாடு எதுவும் இருந்திருக்கவில்லை.

1987 இல் இந்தியா இலங்கைப் பிரச்சினையில் நேரடியாக தலையீடு செய்தபோது, இது வெள்ளிடைமலையானது. ஏனெனில் இலங்கை பாகிஸ்தான் அல்ல. ஆனால், இலங்கையை ஒரு கட்டுக்குள் வைத்திருக்க வேண்டிய தேவை இந்தியாவிற்கு இருந்தது.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் வெளிவகாரக் கொள்கையை இந்தியாவை எரிச்சலடையச் செய்தது. சோவியத் சார்பாக இயங்கிய இந்தியாவின் பிராந்திய நலன்கள், ஜே.ஆரின் மேற்கு சார்பான நிலைப்பாட்டால் அச்சுறுத்தலுக்குள்ளாவதாகவே இந்தியா கருதியது. இதன் தொடர்ச்சியாகத்தான் இந்தியா ஈழத்தமிழர் பிரச்சினையைக் கையில் எடுத்தது.

இதுபற்றி 'கொழும்பின் ஆளும் பிரிவினரின் நெருங்கிய நண்பரும், தீவிரவாத நிபுணருமான ரொஹான் குணரத்தின பதிவு செய்திருக்கும் விடயமொன்று இங்கு எடுத்தாளத்தக்கது- நீங்கள் அணிசாராப் பொறுப்பிற்கு வெளியில் செல்கின்றீர்கள். நீங்கள் அமெரிக்க குரலான வானொலி நிலயத்திற்கு இடமளித்திருக்கின்றீர்கள். நீங்கள் திருகோணமலை துறைமுகத்தை அமெரிக்கக் கடற்படைக்கு வழங்கியிருக்கின்றீர்கள். அங்கு எண்ணெய் சேமிப்புவசதிகள் இருக்கின்றது. நீங்கள் இஸ்ரேலிய நலன்பிரிவுக்கு இடமளித்திருக்கின்றீர்கள். நீங்கள் தென்னாபிரிக்க கூலிப் படையினர் வருவதற்கு அனுமதித்திருக்கின்றீர்கள். இவையெல்லாம் இந்திய நலன்களுக்கு இடையூறா



னவை- இந்திய வெளியக உளவுத் துறையான றோவின் நிறுவகத் தலைவரான, ஆர்.என்.காவோ தன்னிடம் இவ்வாறு கூறியதாக ரொஹான் பதிவு செய்திருக்கின்றார்.

(தொடரும்)

நன்றி: இணையம்

## பாகிஸ்தானில் குண்டுவெடிப்பு; 11 பழங்குடியினர் உயிரிழப்பு

பாகிஸ்தானின் வடமேற்கில் பழங்குடியினர் வாழும் குர்ரம் பகுதியிலுள்ள சந்தையொன்றில் சக்திவாய்ந்த கார்க்குண்டு நேற்று முன்தினம் வெடித்தது. இந்த வெடிகுண்டுத்தாக்குதலில் 11 பழங்குடியினர் பலியாகியுள்ளனர். 30 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

இந்த விபத்தில் பலியானவர்களில் பெரும்பாலானோர் பொதுமக்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த தாக்குதலுக்கு இதுவரை எந்த தீவிரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

குர்ரம் பகுதியில் சியா மற்றும் சன்னி முஸ்லிம்களுக்கிடையே நடந்துவரும் பிரச்சினையில் கடந்த நான்கு வருடங்களில் நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றன. (அ-2)

# தலிபான் தீவிரவாத அமைப்பினரை உடனடியாக கொண்டு வாருங்கள்!

## பாகிஸ்தானிடம் கோரினார் ஹர்சாய்

தலிபான்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு பாகிஸ்தான் தன் நாட்டில் பதுங்கியுள்ள தீவிரவாதிகளை கொண்டு வர வேண்டும் என்று ஆப்கான் ஜனாதிபதி ஹர்சாய் கோபமாக கூறியதாகவும் அதனால் பாகிஸ்தான் அதிர்ந்து போயுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

ஆப்கானில் தலிபானுக்கு எதிரான நேட்டோ படைகளின் தாக்குதல் பெரிய அளவில் பலனைத் தராத நிலையில் தலிபான்களுடன் அமைதிப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவது தான் சிறந்தது என ஆப்கான், அமெரிக்க நாடுகள் முடிவெடுத்துள்ளன. இதற்குப் பாகிஸ்தான் ஒத்துழைப்பும் அவசியம் என அவை கூறி வருகின்றன.



ஆப்கானின் முன்னேற்றம் குறித்து கடந்த 16 ஆம் திகதி தலைநகர் இஸ்லாமாபாத்தில் ஆப்கான், பாகிஸ்தான் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளின் முத்தரப்பு சந்திப்பு தொடங்கியது.

இதில் முதல் நாள் பேசிய ஆப்கான் ஜனாதிபதி ஹமீத் கர்சாய், ஆப்கான், தலிபான் மற்றும் அமெரிக்கா இடையேயான முறையான தகவல் தொடர்பு பேணப்பட்டு வருவதாகவும் பேச்சுவார்த்தைக்கு வர தலிபான் விரும்புவதாகவும் தெரிவித்தார். ஆனால் இதற்கு தலிபான் தரப்பு நேற்று முன்தினம் மறுப்புத் தெரிவித்தது. அதே நேரம் பேச்சு நடப்பதாக ஆப்கான் ஒப்புக் கொண்டிருப்பதை அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் லியோன் பனெட்டா வரவேற்றுள்ளார்.

ஆப்கானுக்குப் பதிலாக அமெரிக்க தலிபானுடன் பேச்சு நடத்த முடியாது என்பதையும் கர்சாய் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் கர்சாய், பாகிஸ்தான் வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஹினா ரப்பானி கர் ஆகிய இருவரின் தலைமையிலான உயர்மட்டக்குழுக்களிடையே நேற்று முன்தினம் பேச்சுவார்த்தை நடந்தது.

தலிபான் தலைவர் முல்லா முகமது ஓமர் உட்பட பல்வேறு முக்கிய தலிபான் பயங்கரவாதிகள் பாகிஸ்தானில் ஒளிந்திருப்பதாக ஆப்கான் தொடர்ந்து குற்றம்சாட்டி வருகின்றது. ஆனால் பாகிஸ்தான் அதை மறுத்து வருகின்றது.

இதைச் சுட்டிக் காட்டிப் பேசிய கர்சாய், பாகிஸ்தானில் உள்ள பள்ளி, கல்லூரிகளில் படிக்கும் பெண் குழந்தைகளைப் படிக்க விடாமல் நீங்கள் தடுப்பீர்களா? பாகிஸ்தானில் உள்ள தலிபான் அமைப்பினரை பேச்சில் கலந்துகொள்ள வைக்க முயற்சி மேற்கொள்ளுங்கள் என கடும் கோபத்துடன் பேசினார்.

நல்லிணக்க வாழ்வுக்கு தடையாக பாகிஸ்தான் இருக்காது. இந்தப் பேச்சு சற்றே காரசாரமாகவும் தீவிரமாகவும் இருந்தது. பேச்சில் கலந்து கொள்ள வைக்க எங்களிடம் முல்லா ஓமர் இல்லை. அவர் பாகிஸ்தானில் இருப்பதாக கூறப்படுவது கேலிக் கூத்தானது என்றார். (அ-2)

## பிரான்ஸில் பிராங்க் நாணய புழக்கம் நடைமுறையிலிருந்து அகற்றப்படுகிறது

பிரான்சில் தற்போது உபயோகிக்கப்படும் நாணயமான பிராங் நேற்றுமுன்தினம் தொடக்கம்புழக்கத்திலிருந்து அகற்றப்படுகிறது.

கடந்த 2012 ஆம் ஆண்டில் ஐரோப்பாவின் பொது நாணயமாக யூரோ அறிமுகமானதும் பிரெஞ்சு மத்திய வங்கி பிராங்கின் பயன்பாட்டைக் குறைத்துவிட்டது.

எனவே நேற்றுமுன்தினம் முதல் பிராங் நாணயப் புழக்கம் நடைமுறையிலிருந்து அகற்றப்படுகிறது. அதன்பின்பு பிராங்கை யாரும் பயன்படுத்தக்கூடாது. பயன்படுத்தவும் இயலாது என்று அரசு அறிவித்து விட்டது. இதனால்பிராங்க் நாணயங்களை வைத்துள்ள மக்கள் வங்கிகளில் கொடுத்து யூரோவாக மாற்றிக் கொள்ளலாம்.

பெரிய நகரங்களில் உள்ள மத்திய வங்கியில் மட்டுமே யூரோக்களாக பிராங்குகளை மாற்றலாம். (அ-2)




## ஆசாத் மீதான கண்டன தீர்மானத்திற்கு 137 நாடுகள் ஆதரவாக வாக்களிப்பு

(நியூயோர்க்)

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் சிரிய ஜனாதிபதிபஷார்அல் ஆஸாத்மீதான கண்டனத் தீர்மானத்திற்கு இந்தியா உட்பட 137 நாடுகள் ஆதரவாக வாக்களித்தன. சீனா, ரஷ்யா உட்பட 12 நாடுகள் எதிராக வாக்களித்தன.

சிரியாவில் மக்களுக்கு எதிரான இராணுவத்தின் வன்முறை அராஜகங்களை எதிர்த்து ஐ.நா. பொதுச் சபையில் கடந்த 15 ஆம் திகதி வாக்கெடுப்பு நடந்தது. இதற்கு ஆதரவாக இந்தியா உட்பட 137 நாடுகளும் எதிராக சீனா, ரஷ்யா, வடகொரியா, ஈரான், வெனிசுலா உட்பட 12 நாடுகளும் வாக்களித்தன. 17 நாடுகள் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

தீர்மானத்திற்கு ஆதரவாக இந்தியா வாக்களித்தது குறித்துப் பேசிய இந்தியத் தூதுவர் ஹர்தீப் சிங் புரி கூறியதாவது,

சிரியாவில் நீண்ட காலமாக நிலவி வரும் நிலையற்ற தன்மை மற்றும் அமைதியின்மை அந்த வட்டாரம் முழுவதும் பரவும் அபாயம் உள்ளது. அங்கு நடக்கும் அனைத்து வன்முறைகள், அராஜகங்களை இந்தியா வன்மையாகக் கண்டிக்கின்றது. அமைதி காக்க அரபு லீக் எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு ஆதரவாகவே இந்தியா இத்தீர்மானத்திற்கு ஆதரவளித்துள்ளது என அவர் தெரிவித்தார். (அ-2)

## மாணவர்களுக்கான சிறந்த நகரங்களின் பட்டியலில் பாரிஸ் நகரத்திற்கு முதலிடம்

தேர்வு முடிபு, வேலைவாய்ப்பு, கல்விக் கட்டணம் மற்றும் உணவு விலை போன்றவற்றில் மாணவர்களுக்கான சிறந்த நகரமாக பாரிஸ் விளங்குகின்றது என சமீபத்திய ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

நிறுவனங்களின் ஆய்வாளர்கள் நடத்திய ஆய்வில் வாழ்க்கைத்தரம், கல்விக் கட்டணம், அன்றாடச் செலவு, கல்வி நிறுவனங்களின் எண்ணிக்கை போன்றன அடிப்படை அலகுகளாக எடுத்துக் கொள்ளப்பட்டன.

பல்கலைக்கழகங்களை ஆய்வு செய்ததில் பிரிட்டனில் உள்ள கேம்பிரிட்ஜ் முதல் இடத்தையும் அமெரிக்காவில் உள்ள ஹார்வர்ட்டு 2 ஆம் இடத்தையும் தக்கவைத்துள்ளன.

நகர வரிசையில் பாரிஸ் முதல் இடத்தையும் லண்டன் இரண்டாம் இடத்தையும் பொஸ்டன் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளது. இந்த ஆய்வு மையத்தின் தலைவரான பென் சோதெர் கூறுகையில்,

பாரிஸ் உயர்கல்வி சிறந்த மையமாக இருந்து வருகின்றது. ஆனால் அதன் தனிப் பல்கலைக்கழகங்கள் தான் சர்வதேச மதிப்பீட்டின் படி இயங்காமல் இருக்கின்றன என்றார்.

முதற்காலத்தில் பரவலாக உள்ள கல்வி நிறுவனங்களை வைத்து சிறப்புத் தன்மை மதிப்பிடப்பட்டது. தற்போது புதிய முறையில் பெரிய பல்கலைக்கழகங்கள் மட்டும் மதிப்பீடு செய்யப்பட்டது. (அ-2)




லிபியாவில் முவம்பர் கடாபியின் ஆட்சியை வீழ்த்துவதற்கு காரணமான புரட்சியின் ஓராண்டு நிறைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. இதனை முன்னிட்டு உற்சாக கொண்டாட்டங்களில் லிபிய மக்கள் ஈடுபட்டதைப் படத்தில் காணலாம்.

# பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தொடர்ந்து நட்டத்தில்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கடந்த ஆண்டு 89 பில்லியன் ரூபாயை நட்டமாகப் பதிவு செய்துள்ளதுடன், கடந்த வாரம் அதிகரிக்கப்பட்டுள்ள எரிபொருள் விலைக்கமைவாக இவ் ஆண்டிலும் இதேநிலை தொடருமாயின் 63.6 பில்லியன் ரூபாயை நட்டமாகப் பதிவு செய்ய நேரிடுமென பெற்றோலியத்துறை அமைச்சின் செயலாளர் ஆர்.எச்.எஸ்.சமரதுங்க தெரிவித்தார்.

கடந்த வார இறுதியில் எரிபொருட்களின் விலை அதிகரிக்கப்படாவிடில் இவ்ஆண்டில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 188,465 மில்லியன் ரூபாயை இழக்க நேரிட்டிருக்கும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டிருந்தார்.


மசகு எண்ணெயின் விலை சர்வதேச சந்தையில் பீப்பாய் ஒன்று 115-120 அமெரிக்க டொலர்களாக காணப்படும் இடத்து இந்த ஆண்டிலும் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 63,684 மில்லியன் ரூபாயை இழக்க நேரிடும் என கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வர்த்தக உலகம்

ஆர்.எஸ்.கே.முருகதாஸ்

# மிலங்கா விலைச்சுட்டி பட்டியல்

## பிரதான சுட்டிகளில் தாக்கத்தை ஏற்படுத்துகிறதா?



ஜனவரி மாதம் முதல் பங்குச் சந்தையில் பிரதான சுட்டிகளில் தளம்பல் நிலை ஏற்படுகின்றமைக்கு பிரதான காரணங்களில் ஒன்றாக மிலங்கா விலைச் சுட்டெண்ணில் பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனங்களில் கடந்த மாதம் முதல் மாற்றம் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

இவற்றில் விசேடமாக குறிப்பிடக்கூடிய வகையில் ஹேமாஸ், ஜனசக்தி, செலான் வங்கி, ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ், நவலோக போன்ற நிறுவனங்களின் பெயர்கள் அகற்றப்பட்டு, புதிதாக சென்றல் பினான்ஸ், கொலம்போ லாண்ட், சொப்ட்லொஜிக், யூனியன் வங்கி, பிரீலங்கா கப்பிட்டல், வலிபல் வன் போன்ற நிறுவனங்களின் பெயர்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்நிறுவனங்கள் பங்குச்சந்தையில் பட்டியலிடப்பட்டு ஒரு வருடம் கூட பூர்த்தியடையாத நிலையில் இவற்றின் விலைகளில் ஏற்படும் தளம்பல் மற்றும் ஆரம்ப பொது வழங்கலில் காணப்பட்டதை விட குறைந்த விலையில் விற்பனையாகின்றமை போன்றவற்றால் இரு பிரதான சுட்டிகளிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தி வருவதாக பங்கு முகவர்கள் தெரிவித்துள்ளனர்.

ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், வெளிநாட்டு முதலீட்டாளர்களின் ஈடுபாடும், அரச உடைமைகளான ஊழியர் சேமலாப நிதியம் போன்றவற்றின் முதலீடுகளும் பங்குச் சந்தையின் கொடுக்கல் வாங்கல்களில் செல்வாக்கு செலுத்தியிருந்தன.

விலை ஈட்டும் விகிதம் தற்போது ஏறத்தாழ 13.11 ஆகக் காணப்படுவதால் தூரநோக்கில், நீண்டகால வருமானத்தை எதிர்பார்க்கும் முதலீட்டாளர்களும், இடர்களை எதிர்பார்த்து முதலீடுகளை மேற்கொள்வோருக்கும் தற்போது சந்தை நிலை கவர்ச்சிகரமானதாக அமைந்துள்ளதாகவும் முகவர்கள் தெரிவித்திருந்தனர்.

**கடந்த 2 நாட்கள் முன்னேற்றம்**

கடந்த வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் பங்குச் சந்தையில் கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகள் முன்னேற்றகரமாக நிறைவடைந்திருக்கின்றன.

வலிந்த விற்பனையின் மூலம் அதில் கிட்டும் அனுகூலங்களை நேர்த்தியான முறையில் கடந்த வெள்ளியன்று முதலீட்டாளர்கள் பெற்றிருந்தமையை அவதானிக்க முடிந்தது.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

CSE

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 5316.99 | 5285.17 ⇩ |
| மிலங்கா விலைச்சுட்டி | 4627.14 | 4549.43⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 8,648.18 |

உயர்வடைந்த பங்குகள்: லங்கா ஐஓசி (20.00), ஏசிஎம்ஈ(26.50), கூஜே (128.70) கல்பி பினான்ஸ்(135.70) மொறிஷன்ஸ்(148.90).

சரிவடைந்த பங்குகள்: ஹேலீஸ் -எம்ஜிரி(13.60), சொப்ட் லொஜிக் கப்.(16.50), எம்.சி.பிங்(163.50), ஏஎம்.எப் கோ லிமிட்டெட்(302.00), சிடிஎச்சி(200.00). மேலதிக தகவல்கள்: www.cse.lk

# வ.பி. இலாபமாக ரூ.1 பில்லியனுக்கும் அதிகமாக பெற்றுள்ள செலான் வங்கி

செலான் வங்கி பி.எல்.சி. நிறுவனமானது முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு மிகவுயர்ந்த நிதிப் பெறுபேறுகளை 04ஆம் காலாண்டில் பெற்றுக் கொண்டுள்ளதாக அறிவித்துள்ளது.

இக்காலாண்டு காலத்தில் பெறப்பட்ட வரிக்குப் பின்னரான தேறிய இலாபம் ரூ.699.73 மில்லியனாக பதிவு செய்யப்பட்டதுடன் (2010இல் -ரூ.383.91 மில்லியன்) கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 82 வீதமான ஓர் அதிகரிப்பாக இது அமைந்துள்ளது.

செலான் வங்கியின் தலைவர் ஈஸ்ட்மன் நாரங்கொட இது குறித்து கூறுகையில்,

இந்த நிதியாண்டு முழுவதிலும் பெற்றுக் கொள்ளப்பட்ட வரிக்குப் பின்னரான இலாபம் ரூ.ஒரு பில்லியனையும் தாண்டிச் சென்றுள்ளது. தன்னார்வ ஓய்வுபெறல் திட்டத்திற்காக ரூ.698.7 மில்லியன் அசாதாரண செலவு ஏற்பட்டிருந்த நிலையிலேயே, வங்கி இவ்வாறான நிதிப் பெறுபேறு ஒன்றினைப் பெற்றுக் கொண்டுள்ளது.


2011ஆம் ஆண்டில் நிறுவனமானது வரிக்குப் பின்னரான இலாபமாக பெற்றிருந்த 1003 மில்லியன் ரூபாயானது, கடந்த வருடத்தின் இலாப பெறுபேறான 1229 மில்லியன் ரூபாயை விடவும் குறைவானதாகும்.



செலான் வங்கியின் தலைவர் ஈஸ்ட்மன் நாரங்கொட

எவ்வாறிருந்த போதிலும் இக் காலப் பகுதியில் தன்னார்வ ஓய்வு பெறல் திட்டத்திற்காக ஏற்பட்ட (ரூ.698.7 மில்லியன்) செலவுத் தொகையானது இதிலிருந்து வெளியகற்றப்பட்டால், கடந்த வருடத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த நிதிப் பெறுபேறுகளை விடவும் 2011ஆம் ஆண்டின் பெறுபேறுகள் நிச்சயமாக குறிப்பிடத்தக்களவான அதிகரிப்பினை வெளிக்காட்டும் என்றார்.

# ஆயுள் காப்புறுதி விழிப்புணர்வு பிரசாரத்தில் செலிங்கோ லைப்




ஆயுள் காப்புறுதியின் பெறுமதியை மக்கள் மத்தியில் உணர்த்தும் வகையிலும் அதை ஊக்குவிக்கும் வகையிலும் விழிப்புணர்வு பிரசார வேலைத்திட்டம் ஒன்றினை செலிங்கோ லைப் ஆரம்பித்துள்ளது.

இதற்கென செலிங்கோ லைஃபின் ஐயாயிரம் பேர் கொண்ட விற்பனைப் படை நாடு முழுவதும் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளது.

நாடு முழுவதும் மக்களை ஒருங்கிணைக்கும் விழிப்புணர்வு பிரசார வேலைத்திட்டமாக இது அமையும்.

கடந்த 4 வருட முயற்சியின் விளைவாக 50 ஆயிரம் குடும்பங்கள் செலிங்கோ லைஃப்பின் காப்புறுதிப் பாதுகாப்பைப் புதிதாகப் பெற்றுள்ளன.

புள்ளிவிபரங்களின் பிரகாரம் 10.9 வீதமான இலங்கையர்கள் மட்டுமே ஆயுள் காப்புறுதியைப் பெற்றுள்ளனர்.

ஆயுள் காப்புறுதிகளைப் பெற்றுக் கொள்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்பட்ட போதிலும் இந்தப் பிரிவின் மீதுதான ஊடுருவல் மிகக் குறைவாகவே உள்ளது என்று செலிங்கோ லைஃப்பின் பிரதி பிரதம அதிகாரி துஷார ரணதுங்க கூறியுள்ளார்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 117.56 | 120.54 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 185.23 | 191.18 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 153.50 | 159.09 |
| சுவிஸ் பிராங் | 126.94 | 132.20 |
| கனேடிய டொலர் | 117.25 | 121.86 |
| அவுஸ்திரேலிய டொலர் | 125.80 | 131.01 |
| சிங்கப்பூர் டொலர் | 92.62 | 96.13 |
| ஜப்பான் யென் | 1.47 | 1.53 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.42 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 32.49 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

# இந்தியாவின் மதுரா பெஷனுடன் ஹமீடியா ஒப்பந்தம்




இலங்கையின் ஆண்கள் ஆடைத்துறையில் நிபுணத்துவம் பெற்ற முன்னணி நிறுவனமாகத் திகழும் ஹமீடியா, இந்தியாவின் மிகப் பெரியதும் மிக வேகமாக வளர்ச்சியடைந்து வருவதுமான ஆடை உற்பத்தி நிறுவனமான மதுரா பெஷன் அன்ட் லைவ்ஸ்ரைல் உடன் ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளது.

லூயிஸ்பிலிப், வன்ஹெவ்சென், அலன் சொல்லி, பீற்றர்இங்லன்ட் போன்ற முன்னணி வர்த்தக குறியீடுகளிலான ஆண்கள் ஆடைகளை இறக்குமதி செய்து, இந்நாட்டின் விநியோகிப்பதற்கு இடமளிக்கும் வகையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தம் மூன்றாண்டுகளுக்கானது.

அடிடாஸ், லீ, றெங்லெர், றெய்மொன்ட், பார்க் எவென்யூ போன்ற பல்வேறு மிக உன்னதமான சர்வதேச வர்த்தக குறியீடுகளின் ஏக விநியோக முகவர் அந்தஸ்தினை ஹமீடியா நிறுவனம் தற்போது அனுபவித்து வருகின்றது.

இந்நிலையில் மதுரா பெஷன் அன்ட் லைவ்ஸ்ரைல் நிறுவனத்துடனான இந்த ஒன்றிணைவானது, ஹமீடியாவின் தற்போதைய உற்பத்திவரிசைகளைமேலும் விஸ்தரிப்பதுடன் அதன் மூலம் இலங்கை வாடிக்கையாளர்களுக்கு வழங்கிவரும் ஆடை உற்பத்திகளையும் மேலும் மேம்படுத்துகின்றது.

ஹமீடியா நிறுவனத்தின் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் ஹுசைன் சாதிக் கூறுகையில்,

ஆடைகளுக்கான ஈடுஇணையற்ற தெரிவு மற்றும் சௌகரியம் ஆகிய விடயங்களில் இலங்கையைச் சேர்ந்த ஆண்களுக்கு உண்மையான சர்வதேச சில்லறை வர்த்தக அனுபவத்தை வழங்குவதே எமது நோக்கமாக உள்ளது என்றார்.

மதுரா பெஷன் அன்ட் லைவ்ஸ்ரைல் நிறுவனத்திற்கு மிகவும் முன்னேற்றகரமான வசதிகளைக் கொண்ட 8 தொழிற்சாலைகள் இருப்பதுடன் உற்பத்தி, புத்தாக்கம் உயர் தொழில்நுட்பம் போன்ற -தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு மற்றும் அறிவு முகாமை மத்திய நிலையம் ஆகியவற்றை மையமாகக் கொண்டு செயற்பட்டுவருகின்றது.

ஹமீடியா நிறுவனமானது, இலங்கையிலும் அதேபோன்று இந்தியா, மாலைதீவுகள், நோர்வே மற்றும் செக்.குடியரசு போன்ற சர்வதேச நாடுகளிலும் தமது வாடிக்கையாளர் தளத்தை மிக விரைவாக அதிகரித்துக் கொண்டுள்ள அதேநேரம், இலங்கையின் ஆண்கள் ஆடைத்துறையில் நிபுணத்துவம் பெற்ற முன்னணி நிறுவனம் என்ற அந்தஸ்தினையும் அனுபவித்து வருகின்றது.

# குற்றம் இழைத்த இராணுவத்தினரை பிறிதொரு இராணுவக்குழு விசாரிப்பது வேடிக்கையானது

## இரா.சம்பந்தன் தெரிவிப்பு



(கொழும்பு)

**அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டுள்ள இராணுவ நீதிமன்றத்தின் ஊடாக இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இராணுவத்தினரால் இழைக்கப்பட்ட குற்றங்கள், அநீதிகள் மற்றும் உண்மைத் தன்மைகள் வெளி வரும் என்ற நம்பிக்கை கிடையாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளார்.**

குற்றம் இழைத்த இராணுவத்தினரை பிறிதொரு இராணுவக்குழு விசாரிக்கின்றது என்றால் அதனை எவராலும் ஏற்றுக் கொள்ள முடியாது என்பதை உலகமே அறியும் என்றும் சம்பந்தன் எம்.பி.கூறினார். கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் பிரகாரம் அரசாங்கத்தினால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள இராணுவ நீதிமன்றம் தொடர்பில் கருத்துக் கூறுகையில், அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டுள்ள இராணுவ நீதிமன்றமானது போர்க்குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கானதாக அமையவில்லை.

எவ்வா றாயிருப்பினும் இராணுவத்தினால் இழைக்கப்பட்ட குற்றங்கள் மற்றும் அநீதிகளை இராணுவத்தைக் கொண்ட பிறிதொரு குழு விசாரிக்கின்றது என்றால் அங்கு எந்தவொரு உண்மையும் வெளிவரப்போவதில்லை.

எனவே, இந்த இராணுவ நீதிமன்றம் தொடர்பில் நாம் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய தாம் செயற்படுவதாகவும் அந்த பிரேரணையை நாம் நிறைவேற்றியிருப்பதாகவும் காட்டிக் கொள்வதற்காகவே அரசு இவ்வாறு செயற்பட்டிருக்கின்றது.

எனவே இந்த இராணுவ நீதிமன்றத்தில் எமக்கு நம்பிக்கை இல்லை.

இராணுவக் குழுவின் ஊடாக குற்றமிழைத்த இராணுவத்தினரை விசாரிப்பதென்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. இதனை சர்வதேசம் அறிந்திருக்கின்றது என்றார்.

(அ-2)

# நைஜீரியாவில் புரட்சி; சிறையை தகர்த்து 119 கைதிகள் விடுவிப்பு

(லாகோஸ்)

நைஜீரியா நாட்டில் அரசுக்கு எதிராக ஒரு குழுவினர் ஆயுதம் தாங்கி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். ஆயுதப் புரட்சியால் நாட்டில் அமைதி இழந்து பீதியும் பதட்டமும் நிலவுகிறது. அரசுப் படையினருக்கும் புரட்சிக் காரர்களுக்கும் இடையே ஆங்காங்கே பயங்கர சண்டை நடக்கிறது.

போராட்டக்காரர்கள் நேற்று லாகோஸ் நகரில் உள்ள பெடரல் சிறையை தாக்கினார். சிறையின் நுழைவு வாயிலை சக்திவாய்ந்த வெடி குண்டு பொருத்தி தகர்த்தனர். தடுக்க வந்த சிறைச்சாலை பாதுகாவலரை துப்பாக்கியால் சுட்டுக்கொன்றனர்.

பின்னர் சிறைச்சாலை வளாகத்துக்குள் நுழைந்த போராட்டக்காரர்கள் அறைகளை உடைத்து அங்கு அடைக்கப்பட்டிருந்த 119 கைதிகளை விடுவித்தனர். போராட்டக்காரர்களின் கை ஓங்கியுள்ளதால் நாட்டின் ஸ்திரத் தன்மை கேள்விக்குறியாகியுள்ளது. (அ-2)

# வோஷிங்டன் நாடாளுமன்றை தகர்க்க வந்த ஆசாமி கைது

(வோஷிங்டன்)

அமெரிக்க தலைநகர் வோஷிங்டனில் பாராளுமன்றை தகர்க்க மனித வெடிகுண்டாக வந்த ஆசாமியை சரியான நேரத்தில் பாதுகாப்புப் படையினர் கைது செய்தனர். மொராக்கோவை சேர்ந்தவர் அமின் எக் கலீப்பி (வயது 29) ஆகும்.

இவர் அமெரிக்காவின் விர்ஜினியா மாநிலத்தில் ஆர்லிங்டன் பகுதியில் தீவிரவாதிகளுடன் சேர்ந்து பல சதி திட்டங்களை தீட்டியதும் பல இடங்களில் வெடிகுண்டு தாக்குதல் நடத்த திட்டமிட்டதும் கண்டுபிடிக்கப்பட்டது. இது குறித்து இவர் மீது கிரிமினல் வழக்கு பதிவு செய்யப்பட்டது. கடந்த ஓராண்டாக இவரது நடமாட்டத்தை பொலிஸார் கண்காணித்து வந்தனர்.

இந்நிலையில் வோஷிங்டன் கேபிட்டால் ஹில்ஸ் பகுதியில் பாராளுமன்றம் கட்டடத்தை தகர்க்க அமின் சதி திட்டம் தீட்டியது நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்டது. உடலில் சக்திவாய்ந்த வெடிகுண்டுகளை கட்டிக் கொண்டு கட்டடத்தின் அருகில் சுற்றியபோது எளளளப்.பி.ஐ. அதிகாரிகளும் பொலிஸாரும் அவரை சுற்றி வளைத்து கைது செய்தனர்.

பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். இது குறித்து எப்.பி.ஐ. உதவி இயக்குநர் மெக்ஜன்கின் கூறுகையில், அமினுக்கு அல்கொய்தா தீவிரவாதி இயக்கத்துக்கும் தொடர்பு இருக்கும் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இது குறித்து தீவிர விசாரணை நடத்துகிறது என்றார். அமின் கைதை தொடர்ந்து கேப்பிடால் கட்டடத்தின் அருகில் உள்ள வீடுகளில் பொலிஸார் அதிரடி சோதனை நடத்தி வருகின்றனர். (அ-2)


# அச்சகத்தினர்கள்

## சிறி லங்கா அச்சகத்தினர்கள் சங்கத்தில் பதிவுசெய்தல்

ஸ்ரீ லங்கா அச்சகத் தொழில்துறையில் ஸ்ரீ லங்கா அச்சகத்தினர் சங்கம் ஒரு பிரதானமான நிறுவனம் என்பதை நீங்கள் அறிவீர்கள். அத்துடன் இச் சங்கம் பாராளுமன்றச் சட்டத்தின கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது. பலவிதமான வழிகளில் நாங்கள் வசதிவாய்ப்புக்களை வழங்கி வரும் அதே வேளையில் நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் அச்சகத் தொழில்துறை குறிப்பிடத்தக்களவு பங்களிப்பை வழங்கும் பொருட்டு அச்சு, பொதிசெய்தல் தொழில்துறைகளில் ஈடுபட்டுள்ளோருக்கு தொடர்ந்து உதவுவதே எமது குறிக்கோளாகும்.

எங்களது பதிவுகளை புதிப்பிக்கும் பொருட்டும் சிறி லங்காவின் அச்சகத் தொழில்துறை சம்பந்தமாக சரியான தகவல்களை திரட்டி வைத்திருக்கம் பொருட்டும் உங்களை எங்களுடன் பதிவசெய்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இப் பதிவுசெய்தல் மூலம் சங்கத்தின் தொழிற்பாடு சம்பந்தமான பொதுவான தகவல்களையும் இத் தொழில்துறைபற்றிய தகவல்களையும் கிரமமான முறையில் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். இச் சங்கத்தில் பதிவுசெய்யப்படும் கம்பனி அங்கத்தவர்கள் கீழே காணப்படும் பயன்களைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

- இத் தொழில்துறையின் கிரமமான முறையில் புதுப்பிக்கப்படும் தரவுகளைப் பெற்றுக்கொள்ளலாம்
- சங்கத்தின் எல்லா விதமான வெளியீடுகளையும் சந்தாப்பணமின்றி பெற்றுக்கொள்ளலாம்
- எல்லா சர்வதேச வர்த்தக கண்காட்சிகள் பற்றிய தகவல்களை பெறமுடியும்
- வெளிநாட்டிற்கு சங்கத்தினூடாக குழுப்பயணம் சலுகைக் கட்டணத்தில் பயணிக்க இணைந்துகொள்ளலாம்
- சங்கத்தால் வழங்கப்படும் பயிற்சி திட்டங்கள் சலுகை அடிப்படையில் பங்குபற்றலாம்
- அச்சகப் போட்டிகளில் பங்குபற்ற முடியும்
- சங்கத்தின் எல்லா சமூக செயற்பாடுகளிலும் பங்குபற்றல்ாம்
- எல்லாவிதமான சுங்க. இறக்குமதி வரி சம்பந்தமான விடயங்களில் இணக்கப்பாடு ஏற்படுத்தும் உரிமை

அங்கத்துவம்பற்றி மேலதிக தகவல்கள் தேவைப்படின் தயவுசெய்து எங்களது செயலகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள் தொலைபேசி : 0112 472315
0112 386716

* பூர்த்தி செய்த கூப்பனை கீழே தரப்பட்ட விலாசத்திற்கு அனுப்பவும்

**பதிவு விபரங்கள்**

கம்பனியின் பெயர்: ....................
உரிமையாளரின் பெயர் : ....................
விலாசம் : ....................
மின் அஞ்சல் : ....................
தொலைபேசி : ....................
கைத்தொலைபேசி: ....................

கம்பனி விபரங்கள்
(தயவுசெய்து X இடவும்)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| லெற்றர் பிரஸ் | ஒப் செற் | டிஜிரெல் அச்சு | ஸ்கிறீன் | ரைப்செற்றிங் | பிறி பிறஸ் |

## லொத்தர் சீட்டிழுப்பு

Collate 2012
அச்சகக் கண்காட்சி
24-26 பெப்ரவரி 2012
சிறி லங்கா கண்காட்சி. மாநாடு நிலையம்

தயவுசெய்து நிரப்பிய கூப்பனை கொலற் 2012 கண்காட்சிக்கு எடுத்துவாருங்கள். தரப்பட்ட தொடர்பு கொள்ளவேண்டிய இலக்கத்தின் மூலம் அதிர்ஷ்டசாலிகள் அறிவிக்கப்படுவர்

பெயர் : ....................
கம்பனியின் பெயர் : ....................
விலாசம்: ....................
தொடர்பு கொள்ளவேண்டிய இல: : ....................
தே.அ.அ. இல : ....................

Collate 2012 - அச்சு கண்காட்சி | பரிசு வழங்கும் இரவு | கண்டி கருத்தரங்கு | கொழும்பு கருத்தரங்கு



தரப்படுத்தல் செயலமர்வு | சீன அச்சு 2011 | அச்சகத்தார் ஆறு | ஸ்ரீ லங்கா அச்சக ஊடக அக்கடமி இடம்

ஏற்பாட்டாளர்கள்

SLAP

இலங்கை அச்சகத்தினர் சங்கம்
இல: 290, டி.ஆர் விஜேவர்த்தன மாவத்தை, கொழும்பு 10.
தொலைபேசி: 0094 11 2 472315 / 2 386716
தொலை நகல்: 0094 112 386716
மின் அஞ்சல்: slap@srilankaprint.com
இணையத் தளம்: www.srilankaprint.com

(த-5882)

# எரிபொருள் விலையேற்றம்; கிளர்ந்தெழுந்த எதிர்க்கட்சிகள்

(கொழும்பு)

எரிபொருள் விலையேற்றத்திற்கு எதிரான போராட்டத்திற்கு அரசின் பதில் துப்பாக்கி ரவையினால் ஜே.வி.பி எரிபொருள் விலை அதிகரிப்பிற்கு எதிராக போராடிய மீனவர்களுக்கு இந்த அரசாங்கம் துப்பாக்கி ரவைகளினால் பதிலளித்துள்ளதாக ஜே.வி.பி தெரிவிக்கின்றது.

அத்துடன் இந்த அரசாங்கம் ஏகாதிபத்தியத்தின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக சர்வதேச கடன்களை பெற்று கொள்ளும் நோக்கில் இந்த நாட்டுமக்களை அடக்கி ஒடுக்கி விலை அதிகரிப்பை தொடர்ந்தும் முன்னெடுத்து செல்வதாக ஜே.வி.பி யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு புறக்கோட்டையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற துண்டுப்பிரசுர விநியோக நடவடிக்கையின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். எரிபொருட்களின் விலையேற்றத்திற்கு எதிராக ஜே.வி.பி யினால் இன்று பொதுமக்களை தெளிவுபடுத்தும் வகையில் துண்டுபிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்னாள் நேற்று முன்தினம் காலை 10 மணியளவில் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்கவின் தலைமையில் நடைபெற்ற இந்த துண்டுப்பிரசுரம் விநியோகிக்கும் நடவடிக்கையில் கட்சியின் பொதுச் செயலாளர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

அநீதியான முறையில் உயர்த்தப்பட்ட எரிபொருளின் விலை, மின்கட்டணம் மற்றும் பேருந்து கட்டணத்தை உடனடியாக குறைக்கும் படி அரசாங்கத்தை வற்புறுத்துவோம்! என்ற தொனிப்பொருளில் இன்றைய துண்டுப் பிரசுரம் விநியோகிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது இந்த அராஜக அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் அனைவரும் ஓரணியில் திரண்டு போராட வேண்டும் என ஜே.வி.பி மக்களுக்கு அழைப்பு விடுத்தது. (அ-2)

## புகைப்படக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.படைத்தலைமையகத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 24,25,26 ஆகிய மூன்று தினங்களில் யாழ்.பொதுநூலகத்தில் காலை 9 மணி தொடக்கம் மாலை 6 மணி புகைப்படக் கண்காட்சி இடம்பெற உள்ளது.

(அ-2-4)

## சிறப்புச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு பருத்தித்துறை பசுபதீஸ்வரர் ஆலயத்தில் நாளை திங்கட்கிழமை மாலை 6.30 மணிக்கு அ எனும் தலைப்பில் சைவப்புலவர்.பொன்.சுகந்தன் சிறப்பு சொற்பொழிவாற்றவுள்ளார்.

(அ-2)

## கிளி.உருத்திரபுரம் சிவாலய சிவராத்திரி விழா நாளை

கிளிநொச்சி உருத்திபுரம் உருத்திரபுர நாயகி உடனுறை உருத்திரபுரீஸ்வரர் ஆலயத்தின் சிவராத்திரி விழா நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

தவத்திரு கணேசானந்த சுவாமிகளின் நல்லாசிகளுடன் ஆரம்பமாகும் இவ்விழாவில் நான்கு சாமப்பூசைகள் இடம்பெறவுள்ளன.

பூசைகளில் இடையேயுள்ள நேரங்களில் மகாதேவ ஆச்சிரம சைவச் சிறுவர் இல்லம், உருத்திரபுரீஸ்வரர் அறநெறிப் பாடசாலை, உருத்திரபுரம் மகா வித்தியாலயம், சிவநகர் அ.த.க.பாடசாலை ஆகியவற்றின் மாணவ, மாணவிகளின் கலை நிகழ்வுகளும் சொற்பொழிவுகளும் இடம்பெறும்.

பூசைகள் முடிவுற்றதும் எம்பெருமான் வீதியுலா வரவுள்ளதாக ஆலய அறங்காவல் சபையினர் அறிவித்துள்ளனர்.

அத்துடன் மேற்படி ஆலயமானது கி.மு. 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதென ஆராய்ச்சியாளர்களால் தெரிவிக்கப்படுகின்றமை இவ்வாலயத்தின் சிறப்பம்சமாகும்.(அ-2)



வடமாகாணத்தில் **நெல்சிப்** முன்னெடுக்கும் வேலைத்திட்டங்கள் சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று வடமாகாண ஆளுநர் பணிமனையில் நேற்று முன்தினம் நடைபெற்ற போது வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ. சந்திரசிறி உரையாற்றுவதையும் அருகில் பிரதம செயலாளர் ஆர்.விஜயலக்சுமி, ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோ ஆகியோர் அமர்ந்திருப்பதையும் கலந்து கொண்ட உயரதிகாரிகளையும் படத்தில் காணலாம். (படம்:- என்.குமார்)

## நடன ஆசிரியர்களுக்கான விண்ணப்பம் கோரல்

(தனங்கிளப்பு)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ்ப்பாண இசைக் கல்லூரியினால் நடன ஆசிரியர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி 22 வயது தொடக்கம் 30 வயதிற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

அத்துடன் தங்களது சுயவிபரப்படிவத்தினை பூர்த்தி செய்து அதில் குறிப்பிட்டுள்ள கல்வித்தகைமைச் சான்றிதழ்களின் நிழற்பிரதியினையும் இணைத்து எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன்னர் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், வடமாகாணம், வவுனியா எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு மன்றப் பணிப்பாளர் திருமதி விமலேஸ்வரி ஸ்ரீகாந்தரூபன் அறிவித்துள்ளார். (அ-2-37)

## பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயத்தில் சிவராத்திரி விழா

(கொழும்பு)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கொழும்பு கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானத்தில் நாளை திங்கட்கிழமை மஹா சிவராத்திரி விழா நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

கலை நிகழ்ச்சிகள் யாவும் அன்றைய தினம் மாலை 6 மணி முதல் மறுநாள் செவ்வாய்க்கிழமை அதிகாலை 6 மணிவரை ஆலய முன்றலில் நடைபெறும்.

தமிழகத்தின் பிரபல தென்னிந்தியப் பாடகரான ரீ.எம்.சௌந்தரராஜனின் புதல்வர் தேனிசைத் திலகம் ரி.எம்.எஸ். செல்வக்குமாரின் இன்னிசை நிகழ்வு, கலாபூஷணம் அருள்மொழியரசி திருமதி வசந்தா வைத்தியநாதனின் சிறப்பு சொற்பொழிவு, திருவாவடுதுறை ஆதீன சைவத் திருமுறை மன்றத்தின் திருமுறைப்பண்ணிசை நிகழ்ச்சி, பூர்ணம் பௌண்டேசன் செல்வி அம்மா குழுவினரின் பஜனை, அபிநய ஷேத்ரா நடனப்பள்ளி இயக்குநர் செல்வி.திவ்யா சிவனேசனின் பரத நாட்டியம், திருமதி சத்யா சுரேஸின் ஆன்மீக சொற்பொழிவு என்பனவும் நடைபெறும்.

அத்தோடு பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலய, கொட்டாஞ்சேனை ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலய, ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்ரமணிய ஆலய அறநெறிப்பாடசாலை மாணவர்கள் வழங்கும் நிகழ்ச்சிகள், மோதரை சிவசக்தி நர்த்தன ஷேத்ராநடனப்பள்ளி மாணவர்களின் நாட்டியம் போன்ற கலை நிகழ்வுகள் என்பனவும் இடம்பெறவுள்ளதாக பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் அறிவித்துள்ளார்.

(அ)

## தாதியர் பற்றாக்குறையை ஈடுசெய்த சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் பணியாளர்கள்

### சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ்ஸின் தலைமை அதிகாரி புகழாரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் தாதிகள் பற்றாக்குறை காணப்பட்டபோதும் யுத்த சூழ்நிலைகளிலும் சிறப்பாக யாழ்.சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் பணியாளர்கள் சேவையாற்றினர் என தேசிய தலைமை அதிகாரி வைத்தியர் வீரசூரி தெரிவித்தார்.

சென்ஜோன்ஸ் அம்புலன்சின் யாழ்.காரியாலயத்தில் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு தெரிவிக்கையில், வடபகுதியில் ஊரடங்குச் சட்டம் மற்றும் போரின் மத்தியிலும் கூட சென்ஜோன்ஸ் பணியாளர்கள் மிகவும் சிறப்பான முறையில் தமது சேவையினை மக்களுக்கு ஆற்றியுள்ளனர்.

மிகக் கடுமையான உழைப்பு சேவை என்பவற்றால் பாராளுமன்றில் கூட அங்கீகாரம் பெற்றதொன்றாக காணப்படுகின்றது.

இலங்கையில் சென்ஜோன்ஸ் அம்புலன்சின் பயிற்சி நிலையங்கள் 5 உள்ளன. இவ் ஐந்து பயிற்சி நிலையங்களிலும் யாழ்.பயிற்சி நிலையமே சிறந்து விளங்குகின்றது.

இதில் முதல்தரமான பல வசதிகளைக் கொண்ட பயிற்சி நிலையம் கொழும்பில் அடுத்த மாதம் திருமதி ஷிராந்தி ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப்படவுள்ளது.

ஏனைய மாவட்டங்களைவிட சிறப்பாக யாழ்.மாவட்டம் பணியாற்றுவதனால் யாழ்.சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ்சிற்கு 2 அம்புலன்ஸ் வாகனங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

பாடசாலை மட்டங்களில் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையணியில் இணைந்து கொண்டு சேவையாற்றுபவர்களுக்கு உயர்தரப் பரீட்சைகளின் பெறுபேறுகளில் சில புள்ளிகளை உயர்வாக பெற்றுக்கொள்ள முடியும்.

இங்கு தேசிய ரீதியிலான சான்றிதழ்கள் அவசியமானதொன்றாகும். மற்றும் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ்சின் பிரிவுகளில் ஒன்றாக புலமைப்பரிசில் மாணவர்களுக்கான பயிற்சிகள் இதன்மூலம் மாத்தளை மாவட்டத்தில் அதிகளவான மாணவர்கள் சித்தியடைந்து தேசிய ரீதியில் சாதனை படைத்துள்ளனர்.

இம்முயற்சிக்கு அரசாங்கம் பாரியளவு நிதியினை ஒதுக்கி வருகின்றது. இலங்கையில் எங்கும் காணப்படாத பாண்ட் வாத்திய அணி யாழ்ப்பாணத்தில் காணப்படுகின்ற சிறப்பம்சம்மிக்க ஒன்றாகும்.

இதற்கு இங்குள்ளவர்களின் கடின உழைப்பே முக்கிய காரணமாகும். மேலும் வைத்திசாலையில் பணிபுரிகின்ற தொண்டர்களுக்கு நிரந்தர நியமனம் பெற்றுக் கொடுக்க நாம் முடிந்தளவு முயற்சி செய்வோம் என அவர் தெரிவித்தார். (அ-2-4)

யானையைக் கொன்று கைச்சுளகால் மூடி மறைத்தாளாம். - *தமிழ்ப் பழமொழி*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# சர்வதேசத்தை ஏமாற்ற இராணுவ நீதிமன்றம்

இராணுவ நீதிமன்றத்தை அமைத்து விசாரணை மேற்கொள்ளுதல் என்றொரு நாடகத்தை அரசு இப்போது அரங்கேற்றியுள்ளது.

சர்வதேச அழுத்தத்தை சமாளிப்பதற்கான நடவடிக்கையாக இந்த முறையை அரசு மேற்கொண்டுள்ளது.

இராணுவ நீதிமன்ற விசாரணை, அதில் கிடைக்கக்கூடிய முடிபுகள் பற்றி தமிழ் மக்கள் இம்மியளவும் அலட்டிக் கொள்ள மாட்டார்கள்.

ஏனெனில் இலங்கை ஆட்சியாளர்களிடம் இருந்து எந்தவொரு நீதியையும் எதிர்பார்க்க முடியாது என்பதை தமிழ் மக்கள் பலமாக உணர்ந்துள்ளனர்.

இருந்தும் இலங்கை அரசு இராணுவ நீதிமன்றத்தை அமைத்து விசாரணையை மேற்கொள்வதன் மூலம் சர்வதேச அழுத்தத்தை [illegible]ளிக்க முடியும் என நம்புகின்றது.

இங்குதான் இலங்கை அரசின் அறியாமை - பலவீனம் வெளிப்படுகின்றது.

சர்வதேச சமூகமானது மிகத் தெளிவான முடிபுகளை ஆதாரங்களுடன் எடுத்துக் கொண்ட பின்பே தனது அழுத்தத்தைப் பிரயோகிக்கின்றது.

அந்த வகையில் வன்னிப் போரின்போது நடந்த சம்பவங்கள் அத்தனையையும் சர்வதேசம் தெளிவாக அறிந்துள்ளது.

போர்-போராட்டம் என்றால் அழிவுகளும் இழப்புகளும் எதிர்பார்க்கப்படக்கூடியவை என்பதற்கான நியாயப்பாடுகளை சர்வதேசம் அறியாததும் அல்ல.

ஆனால், திட்டமிட்டு, இன அழிப்புடன் மிகக் கொடூரமான செயல்கள் மற்றும் பொதுமக்கள் மீதான தாக்குதல்கள் என்பவற்றை சர்வதேச [illegible]கம் ஒருபோதும் ஏற்றுக் கொள்வதில்லை.

அத்தகைய சம்பவங்களை மூடி மறைத்தல் என்பது வெற்றியளித்ததாகவும் வரலாறு இல்லை.

எனவே இலங்கை அரசு இராணுவ நீதிமன்றத்தை அமைத்து போர்க் குற்றம் தொடர்பில் விசாரணை நடத்துவதானது மிகப் பெரிய ஏமாற்றுவித்தை என்பதை சர்வதேச சமூகம் தாராளமாக உணர்ந்து கொள்ளும்.

இத்தகைய உணர்தல் என்பது இலங்கை மீதான நம்பகத் தன்மையை மேன்மேலும் குறைக்கும்.

ஆக! சர்வதேச சமூகத்தின் அழுத்தத்தை இலங்கை அரசு வெற்றிகொள்ள வேண்டுமாக இருந்தால், அதற்கான ஒரேயொருவழி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனக்கிருக்கக்கூடிய அதிகாரத்தையும், பாராளுமன்றத்தில் இருக்கக்கூடிய பெரும்பான்மை பலத்தையும் பயன்படுத்தி இனப் பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதேயாகும்.

ஆனால், அதனைச் செய்வது பற்றி அரசு ஒருபோதும் சிந்திக்காது என்பது தெளிவு.

இந்நிலையில் சர்வதேச சமூகத்தின் அழுத்தம் பலமானதாக அமைவதற்கான வாய்ப்பு உண்டு.

அதேசமயம் தற்போது சர்வதேச் சமூகத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய இலங்கை தொடர்பான எதிர்க்கணிய கருத்து நிலையை தமிழ்த் தரப்புகள் தக்கமுறையில் பயன்படுத்திக் கொள்வது மிகவும் அவசியமாகும்.

ஏனெனில் உலகில் ஏற்பட்ட அத்தனை மாற்றங்களும் காலத்தின் அசைவில் நிகழ்ந்தவைதான்.

எனவே ஈழத் தமிழ் மக்களின் விவகாரங்களும் தகுந்த முறையில் நெறிப்படுத்தப்படாவிடில் கால அசைவு பெரும் இழப்புக்களை நமக்கு தந்து விடலாம்.

# போர்க்குற்ற விசாரணை தீர்மானத்தை ஆதரிக்க மத்திய அரசை வலியுறுத்த வேண்டும்

## தமிழக அரசிற்கு சீமான் வேண்டுகோள்

இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக அந்நாட்டு அரசு நடத்திய போரில் தடைசெய்யப்பட்ட ஆயுதங்களைப் பயன்படுத்தி ஒன்றே முக்கால் இலட்சம் தமிழர்களை அழித்தொழித்தது.

போரின் இறுதிநாட்களில் முள்ளிவாய்க்கால், வட்டுவாகல் ஆகிய இரண்டு கிராமங்களில் நெருக்கமாகத் தஞ்சமடைந்திருந்த தமிழர்களைச் சுற்றி வளைத்து இலங்கை இராணுவத்தினர் நடத்திய கொடூரமான தாக்குதலில் மட்டும் 50 ஆயிரத்திற்கும் அதிகமானோர் கொன்றொழிக்கப்பட்டனர். அப்பட்டமான, திட்டமிட்ட இந்த இன அழித்தல் உலக நாடுகளையும் மக்களையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

இப்படிப்பட்ட ஒரு திட்டமிட்ட பெரும் இன அழிப்பை செய்த இலங்கை அரசுக்கு எதிராக போர்க்குற்ற விசாரணை நடத்தவேண்டும் என்றுகோரி போர் முடிந்த ஒரு மாதத்திலேயே ஐ.நா. மனித உரிமை மன்றத்தில் ஐரோப்பிய நாடுகள் தீர்மானம் கொண்டு வந்தபோது அதனை எதிர்த்தது இந்திய அரசு.

இந்திய அரசின் பிரதிநிதி கோபிநாத் அச்சங்குளங்கரே தீர்மானத்தை எதிர்த்தது மட்டுமன்றி சீனா, தென்னமெரிக்காநாடுகளின் ஆதரவைப்பெற்று தீர்மானத்திற்கு எதிராக வாக்களிக்கச் செய்து தோற்கடிக்கவும் செய்தார்.

அதன் பின்னர் இலங்கை அரசைப் பாராட்டி அந்நாடு கொண்டு வந்த தீர்மானத்தையும் இந்திய அரசு தனது செல்வாக்கைப் பயன்படுத்தி நிறைவேற்றிக்கொடுத்தது.

தங்கள் சொந்தங்கள் இலட்சக் கணக்கில் கொன்றொழித்த இலங்கை அரசுக்கு ஆதரவாக நின்ற இந்திய அரசின் இந்த நடவடிக்கை உலகத் தமிழர்களை அதிர்ச்சியிலும் சினத்திலும் ஆழ்த்தியது.

மனித உரிமை அமைப்புகள் அனைத்தும் இந்திய அரசின் அநியாயமான நடவடிக்கையை கண்டித்தன. அதன் எதிர்வினையாகவே தமிழ்நாடு சட்டப் பேரவைக்கு நடந்த தேர்தலில் காங்கிரஸ்-தி.மு.க அணி படுதோல்வியைச் சந்திக்க நேர்ந்தது.

ஆனால், இலங்கை அரசிற்கு எதிராக போர்க்குற்ற விசாரணை நடத்தப்படவேண்டும் என்பதில் உலக நாடுகள் இன்றுவரை உறுதியாக குரல் கொடுத்து வருகின்றன. இப்படிப்பட்ட சூழலில் இம்மாத இறுதியில் ஐ.நா.வின் மனித உரிமை மாமன்றம் ஜெனீவாவில் கூடுகிறது.

ஒருமாத காலத்திற்கு நடை பெறவுள்ள இக்கூட்டத்தில் இலங்கையில் நடந்த உள்நாட்டுப் போர்குறித்தும் அது குறித்து ஐ.நா.நிபுணர் குழு அளித்த அறிக்கை பற்றியும் போர்க் குற்றங்கள் மீது விசாரணை நடத்த பன்னாட்டுக் குழு அமைப்புக் குறித்தும் விவாதிக்கப்படவுள்ளது.


இக்கூட்டத்தில் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் போர்க்குற்ற விசாரணை நடத்த வலியுறுத்தி தீர்மானத்தைக் கொண்டுவர திட்டமிட்டுள்ளன. கடந்த 2009 ஆம் ஆண்டு நடந்துகொண்டது போல் இலங்கை அரசுக்கு ஆதரவாக நடந்துகொள்ளாமல் இந்திய அரசு நடுநிலையுடன் நடந்து கொள்ள வேண்டும் என்று மத்திய அரசை தமிழக அரசு வலியுறுத்த வேண்டும்.

இலங்கையில் நடந்த தமிழின அழிப்புப்போரின் பிரதிபலிப்பே கடந்த ஆண்டு நடந்த சட்டப்பேரவைத்தேர்தலில் அ.இ.அ.தி.மு.க பெற்ற மாபெரும் வெற்றியாகும். அதனை கருத்திற்கொண்டே இலங்கை அரசுக்கு எதிராக போர்க்குற்ற விசாரணை நடத்த உலக நாடுகளுடன் இணைந்து மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தமிழக முதல்வரே முன்மொழிந்த தீர்மானம் தமிழக சட்டப்பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. எனவே மத்திய அரசு சட்டப்பேரவை தீர்மானத்திற்கு எதிரா நடந்தால் தமிழக மக்கள் நம்பிக்கை இழந்துவிடுவர் என நாம் தமிழர் கட்சி குறிப்பிட்டுள்ளது. (அ-2)

# தவத்திரு யோகர் சுவாமிகளின் நற்சிந்தனை

## என் குருபர புங்கவ சிங்கமே

**மூன்று மொன்றாய் முடிந்திட வேண்டுமே**
**முனையின் வாசல் திறந்திட வேண்டுமே**
**ஊன்று பாதத் துறந்திட வேண்டுமே**
**உள்ளே யானந்தம் பொங்கிட வேண்டுமே**
**தூண்டு சோதி விழுங்கிட வேண்டுமே**
**தூய நிர்க்குண அற்புத பொற்பதம்**
**ஈண்டு தந்த இனிய குருபர!**
**என்னை யாண்டவ! இங்கித சிங்கமே!**



# நம்பிக்கையே கிறிஸ்தவ வாழ்க்கைச் சக்கரத்தின் அச்சாணி

மனித வாழ்வு நம்பிக்கையில் கட்டப்பட்ட ஒரு வாழ்வு. நம்பிக்கையில்லா மனிதன் உண்மை மனிதனே அல்லன்; எதிர்காலத்தை நோக்கி வாழ்தலே மனிதனின் உண்மை இயல்பு என்று கூறுகின்றனர் புளோக் மற்றும் ஷார்டேன் என்னும் அறிஞர்கள். இறை நம்பிக்கையில் மனிதன் தன் வாழ்வின் உட்பொருளை அறிந்து எதிர்காலத்தை எதிர்நோக்குகின்றான்.

அதனால்தான் மனித வாழ்வு எதிர்பார்ப்பின் வாழ்வு என்று அழைக்கப்படுகிறது. மனிதன் தான் வாழும் இவ்வுலகில் எத்தனையோ குறைபாடுகளைக் காண்கின்றான். சமுதாயத்தில் அநீதிகளைக் கண்டுகலங்குகின்றான். ஆனால் இக்குறைபாடுகளும் அநீதிகளும் ஒருநாள் மறைந்தே தீரும் என்ற ஓர் எதிர்பார்ப்பும் நம்பிக்கையும்

## பரமபிதா காட்டிய பாதை

அவனுக்கு உறுதியான உள்ளத்தை வழங்குகிறது.


குழப்பம் நிறைந்த உலகிற்கு கிறிஸ்துவின் பிறப்பு புதிய நம்பிக்கையைத் தந்தது முதல் பெற்றோரின் குற்றம் தொடக்கம் மீட்பரின் திருவருகை வரை மெசியா பிறப்பார், பிறந்து மீட்பார், வாழ்வை அளிப்பார் என்ற நம்பிக்கையோடும் எதிர்பார்ப்போடும் யூதமதம் வளர்ந்து வந்தது.

பல நூற்றாண்டுகளாக பலவாறு முன்னுரைக்கப்பட்டு, செழிப்பான வாழ்விற்கும் மனநிறைவிற்கும் சமூக முன்னேற்றத்திற்கும் அரசியல் சுதந்திரத்திற்கும் அப்பாற்பட்ட புதிய நம்பிக்கையை தருபவராக கிறிஸ்து பிறந்தார். உலகம் தர இயலாத உண்மையான, தளர்வற்றநம்பிக்கையை அவர் அளித்தார். மீட்பரின் இவ்வுலக வாழ்வு முடிபுற்ற போது அவர் கூறியது போலவே மீண்டும் வருவார் (தி.ப 1:11) என்ற எண்ணத்தில் அவரை மாட்சிமையோடு வரவேற்க திருச்சபை காத்திருக்கின்றது.

தம்மேல் முழு நம்பிக்கை கொண்ட மக்களை இறைவன் ஒருபோதும் கைவிட்டதில்லை என்பதை திருவிவிலியம் பல நிகழ்ச்சிகள் மூலமாக எண்பித்து நிற்கிறது. தொடக்கநூலிலே பிதாப்பிதாவாக வருகின்ற ஆபிரகாம் இறைவனின் வார்த்தையில் நம்பிக்கை கொண்டு நிபந்தனைஎதுவுமின்றி அதனை ஏற்றுக்கொண்டு அதற்கேற்ப தன் வாழ்வை அமைத்துக்கொண்டதன் மூலமாக விசுவாசத்தின் தந்தை என்கின்ற பெரும் பேற்றினைப் பெற்றுக்கொண்டார்.

நோவாவும் மோயீசனும் வாழ்ந்த விசுவாச வாழ்வு புனித பவுலினால் புகழ்ந்து பேசப்படுகிறது (எ.பி.11). யோபு என்கின்ற நீதிமான் பெரும் துன்பங்களையெல்லாம் அனுபவித்து, தனக்குரிய யாவற்றையும் இழந்தபோதிலும் இறைநம்பிக்கையை இழந்து விடாததால் கடவுள் அவருக்கு 100 மடங்கு சம்பாவனை அளித்தார் என்பதனை யோபுவின் புத்தகத்தில் காண முடிகின்றது.

சிங்கக்குகையில் இருந்து தானியேலும் தானியே லின் மூலமாக சூசன்னா என்ற தூயவளும் காப்பாற்றப்பட்டது இறைவனில் அவர்கள் கொண்ட நம்பிக்கையால் தான். இயேசுவின் காலத்தில் அவர் புதுமைகள் புரிவதற்கு முன்னர் யார்யார் அப் புதுமைகளால் பயன்பெற இருக்கிறார்களோ அவர்களிடம் நம்பிக்கை இருக்கிறதா என சோதித்துப்பார்ப்பது வழக்கமாக இருந்தது. நம்பிக்கையாயிரு மகனே, நம்பிக்கையாயிரு மகளே எனும் வார்த்தை நற்செய்தி ஏட்டில் நிறைந்திருப்பதைக் காண முடியும். இயேசுவின் வார்த்தையில் நம்பிக்கை கொண்ட அனைவருமே மீட்பைப் பெற்றுக் கொண்டார்கள்.



பல வேளைகளில் நாம் வாழ்வின் இருண்ட பகுதியை மட்டுமே நோக்குவதால் ஒளிமிக்க பகுதி ஒன்று உண்டு என்பதையே மறந்து விடுகின்றோம். இருளில் நடந்தாலும் கண்டிப்பாக ஒளி கிடைக்கும் என்ற மனநிலை உருவாக வேண்டும். எத்தனை துன்பச்சுமைகளை நாம் சுமந்தாலும் அதற்கு ஓர் விடுதலையும் மாற்றமும் கிடைக்கும் என நம்பிக்கையோடு காத்திருக்க வேண்டும். எனவே ஆண்டவரே

**அருட்சகோதரர் றமேஸ் அ.ம.தி**

என் ஒளி, ஆண்டவரே என் மீட்பு, நான் யாருக்கு அஞ்சவேண்டும்? ஆண்டவரே என் வாழ்வுக்கு அடைக்கலம், நான் யாருக்கு நடுங்க வேண்டும் (தி.பா 26:1) என மன்றாடி மனத்தைரிய மடைவோம்.

ஆகையால் மக்களே சகல மனிதரையும் பாருங் கள். ஆண்டவரை நம்பிய எவனும் கலங்கியதில்லையென்று கண்டறியுங்கள்(சீரா. 2:11).

# இந்திய- அவுஸ். வர்த்தக ஒப்பந்தத்தில் தமிழக தென் பகுதிக்கு முன்னுரிமை

(மதுரை)

இந்திய, அவுஸ்திரேலிய நாடுகளுக்கு இடையிலான வர்த்தகத்தில் தமிழகத்தின் தென் மாவட்டங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும் என இந்திய தென் மாநிலங்களுக்கான அவுஸ்திரேலிய தூதர் டேவிட் ஹோலி தெரிவித்தார்.

மதுரை சி.ஐ.ஐ. சார்பில் நடந்த இந்திய, அவுஸ்திரேலிய வர்த்தகம் குறித்த கலந்துரையாடலில் அவர் உரையாற்றுகையில்,

இந்தியாவும் அவுஸ்திரேலியாவும் அனைத்து துறைகளிலும் வலுவான வர்த்தக உடன்படிக்கைகள் செய்துள்ளன. கடந்த 2005 இல் இருநாடுகளுக்கு இடையே 8.5 அவுஸ்திரேலிய டொலர் வர்த்தகம் நடந்தது. 2010 இல் இது 22 பில்லியனாக உயர்ந்தது. எதிர்வரும் 2020 இல் இது இரு மடங்காகும் வாய்ப்பு உள்ளது.

இந்தியாவிற்கு ஆண்டிற்கு 1.20 இலட்சம் அவுஸ்திரேலியர்கள் வருகின்றனர். இது ஒவ்வொரு ஆண்டும் 8 சதவீதம் உயர்ந்து வருகின்றது. ஜெய்ப்பூர் ஆக்ரா டில்லிக்கு வருவது அதிகம். மதுரை காமராஜ் பல்கலையுடன் ரூ. 3.7 கோடியில் நீர்நிலைகள் மாசுபடுதல் குறித்த ஆராய்ச்சிக்கு உடன்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழகத்தின் தென் மாவட்டங்களில் மருத்துவ சுற்றுலா, கல்வி, விவசாயம், உணவுப் பொருள் தயாரிப்பு என பல வர்த்தகங்கள் செய்ய வாய்ப்புகள் உள்ளன. அதனால் மதுரையை மையமாக வைத்து அவுஸ்திரேலிய வர்த்தகத்தை இப்பகுதியில் பயன்படுத்த முடிவு செய்துள்ளது. அவுஸ்திரேலியாவில் உள்ள சிறு நிறுவனங்களுக்கு இங்குள்ள ஐ.டி. நிறுவனங்கள் தரமான சேவை வழங்குகின்றன என்றார். (அ-2)

# குறைந்த செலவில் வாழக்கூடிய நகரங்களில் மும்பைக்கு 2 ஆவது இடம்

(புதுடில்லி)

குறைந்த செலவில் வாழ்க்கை நடத்த வாய்ப்பு உள்ள உலகின் முக்கிய நகரங்கள் பட்டியலில் மும்பை 2 ஆவது இடத்தையும் டில்லி 4 ஆவது இடத்தையும் பிடித்துள்ளன. உலகின் முக்கிய நகரங்களில் உணவு, உடை, இருப்பிடம், பாடசாலை, வைத்தியசாலை போன்ற அத்தியாவசிய தேவைகள் மற்றும் பங்களா, கார் போன்ற ஆடம்பரத்துடன் வாழ்வதற்கு குறைவாக செலவாகும் நகரங்கள் மற்றும் அதிக செலவாகும் நகரங்கள் குறித்து பொருளாதார அமைப்பான இ.ஐ.யூ.ஆய்வு நடத்தியது.

அதன் விபரப்படி தற்போதைய நவீன காலத்தில் உலக நாடுகள் போட்டி போட்டு முன்னேறி வருகின்றன. அதற்கேற்ப முக்கிய நகரங்களின் ஆடம்பரங்களும் அதிகரித்து வருகின்றன.

இதில் குறைந்த செலவில் வாழ்வதற்கு வாய்ப்புள்ள நகரங்களில் பாகிஸ்தானின் கராச்சி முதலிடத்தை பிடித்துள்ளது. அதை தொடர்ந்து மும்பை, டெக்ரான், டில்லி முறையே அடுத்தடுத்த இடங்களை பிடித்துள்ளன.

நம் நாட்டின் பணவீக்க உயர்வால் ஏற்படும் பாதிப்புக்களை நாள்தோறும் மக்கள் அனுபவித்து வரும் நிலையில் செலவுகள் குறைந்த முக்கிய நகரங்களில் மும்பை, டில்லி இடம்பிடித்துள்ளன. மேலும் அதிகம் செலவாகும் ஆடம்பர நகரங்களின் டாப் 5 இல் சுவிட்சர்லாந்தின் சூரிச் மற்றும் டோக்கியோ, ஜெனீவா, ஓசகா, லொபெ, ஆஸ்லோ நகரங்கள் இடம்பிடித்துள்ளன.

(அ-2)




# சர்வதேச குன்னேரஸ் விருதுக்கு இந்தியக் குடிமகன் தெரிவு

(வோஷிங்டன்)

சர்வதேச அளவில் இந்தாண்டு முதல் வழங்கப்படவுள்ள குன்னேரஸ் விருதுக்கு இந்திய வம்சாவளி உயிரியல் அறிஞர் கமல்ஜித் எஸ்.பாவா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

உயிரியல் துறையில் அறிவியல் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு அளப்பரிய சாதனைகளை ஏற்படுத்தியவர்களை கௌரவிக்கும் பொருட்டு இந்தாண்டு முதல் குன்னேரஸ் விருது வழங்கப்படவுள்ளது. அதில் முதல் விருதை இந்திய வம்சாவளியினர் பெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவின் மசாசூசெட்ஸ் பல்கலைக் கழகத்தில் உயிரியல்துறை பேராசிரியராக இருப்பவர் டாக்டர் கமல்ஜித் பாவா. இந்தியாவின் மேற்குமலைத் தொடர்ச்சி, இமாலய மலைத்தொடர் மற்றும் மத்திய அமெரிக்க காடுகளில் புதிய உயிரின கண்டுபிடிப்புகளில் இவரது பங்கு அளப்பரியது என்பது குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் ஏப்ரல் 17 ஆம் திகதி நோர்வே நாட்டில் நடைபெறவுள்ள நிகழ்ச்சியில் இவருக்க இவ்விருது வழங்கப்படவுள்ளது.

(அ-2)

# மாலைதீவில் இடைத் தேர்தல்; இந்தியாவுக்கு நன்றி தெரிவிப்பு

(மாலே)

மாலைதீவின் அரசியல் பிரச்சினையில் தலையிட்டு இடைத்தேர்தல் நடத்துவதற்கான சூழலை ஏற்படுத்தியதாக அந்நாட்டின் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிக்ள் இந்தியாவுக்கு நன்றி தெரிவித்துள்ளன.

மாலைதீவில் கடந்த 7 ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதி நஷீத் பதவி இறக்கப்பட்டு துணை ஜனாதிபதி முகமது வாகித் ஹசன் புதிய ஜனாதிபதியாக பொறுப்பேற்றார். எனினும் தன்னை மிரட்டி பதவி பறிக்கப்பட்டதால் எதிர்வரும் 2013 இல் நடத்தப்பட வேண்டிய தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டும் என நஷீத் கோரிக்கை விடுத்தார்.

இதையடுத்து இந்தியா சார்பில் வெளியுறவுச் செயலாளர் ரஞ்சன் மத்தாய் மாலைதீவிற்கு அனுப்பப்பட்டார். அவர் இருதரப்புடனும் பேசி சுமுகமான ஒரு சூழலை உருவாக்கினார். அதபடி பேட்டியளித்த அதிபர் ஹசன் சுமுகமான சூழல் நிலவும் பட்சத்தில் தேர்தல் முன்கூட்டியே நடத்தப்படும் என வாக்களித்தார்.

தொடர்ந்து எதிர்க்கட்சி தலைவர் நஷீத் கட்சி பிரமுகர் இப்ராகிம் உசேன் ஜாகி நேற்று அளித்த பேட்டியில் மாலைதீவு பிரச்சினையில் சரியான நேரத்தில் இந்தியா தலையிட்டு நல்ல முன்னேற்றத்தை உருவாக்கியுள்ளது. இதற்காக இந்தியாவுக்கு எங்கள் நன்றியை தெரிவிக்கிறோம் என்றார்.


இதையடுத்து மாலைதீவில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி ஒரு முடிவுக்கு வந்து விட்டதாக தெரிகிறது. (அ-2)

# இந்திராகாந்தி விமான நிலையத்திற்கு 2ஆம் இடம்

(மும்பை)

சர்வதேச அளவில் சேவை தர அடிப்படையில் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பில் டில்லி இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையம் இரண்டாம் இடத்திலும் மும்பைசத்பதி சிவாஜி சர்வதேச விமான நிலையம் 3 ஆம் இடத்தையும் பிடித்துள்ளது.

தேசிய அளவில் முதலிடத்தில் டில்லி விமான நிலையம்குறிப்பிடத்தக்கது. ஏர்போர்ட் கவுன்சில் இண்டர் நேஷனல் நிறுவனம் நடத்திய சேவை தர அடிப்படையிலான கருத்துக்கணிப்பில் சர்வதேச அளவில் 180 ஏர் போட்கள் கலந்து கொண்டன. அதன் முடிவுகள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி 2 ஆம் இடத்தில் டில்லி ஏர்போர்ட்டும் 3 ஆம் இடத்தில் மும்பை ஏர் போர்ட்டும் உள்ளன. இந்த விமான நிலையங்களுக்கு ஏர் போர்ட் கவுன்சில் இண்டர் நேஷனல் ஏர் போர்ட் சர்வீஸ் குவாலிட்டி விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த விருது, மும்பை சத்பதி ஏர்போர்ட் கடந்த முறையும் வென்றது குறிப்பிடத்தக்கது. (அ-2)



கூடங்குளம் அணு உலை பாதுகாப்பு தொடர்பாக அறிக்கை அளிக்க தமிழக அரசால் நியமிக்கப்பட்டுள்ள வல்லுனர் குழு சென்னை தலைமை செயலகத்தில் முதல்வர் ஜெயலலிதாவை சந்தித்து கலந்துரையாடியதை படத்தில் காணலாம்.

# போலி டொலர் வைத்திருந்த பெண் உட்பட ஐவர் கைது

புதுடில்லியில் போலி விசா மற்றும் போலி டொலர்கள் வைத்திருந்த பெண் உட்பட ஐந்து வெளிநாட்டினரை டில்லி பொலிஸார் கைது செய்தனர்.

தலைநகர் புதுடில்லி கணேஷ் நகர் பகுதியில் நைஜீரியா, கென்யா, கானா ஆகிய நாடுகளை சேர்ந்தவர்கள் வசித்து வருகிறார்கள்.

இவர்களிடம் பொலிஸார் திடீரென சோதனை நடத்தி போது 120 க்கும் மேற்பட்ட போலி கடவுச்சீட்டுகள் 300 விசாக்கள் மற்றும் 22 ஆயிரம் போலி அமெரிக்க டொலர்கள் ஆகியவற்றை கைப்பற்றினார்கள்.

இவர்களில் கேப்ரியேல் ஓல்வாலே என்பவன் இக் கும்பல்களுக்கு தலைவனாக செயற்பட்டுள்ளான். இவர்களை கைது செய்த பொலிஸார் தங்களுடைய கட்டுப்பாட்டில் வைத்து விசாரித்து வருகின்றனர்.

(அ-2)

# பதுக்கப்பட்டுள்ள கறுப்புப் பணத்தை மீட்க புலனாய்வாளர்களின் ஒத்துழைப்பு தேவை

(புதுடில்லி)



கணக்கில் காட்டாமல் பதுக்கி வைக்க ப்பட்டு உள்ள கறுப்பு பணத்தை மீட்க வேண் டுமானால் வெளிநாட்டு புலனாய்வு அமைப் புகளின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம் என சி.பி.ஐ இயக்குனர் ஏ.பி.சிங் வலியுறுத்தினார்.

டில்லியில் நடந்த கறுப்பு பண மீட்பு மற் றும் ஊழல் எதிர்ப்பு நடவடிக்கைகள் தொடர் பான சர்வதேச மாநாட்டின் நிறைவு விழாவில் அவர் உரையாற்றுகையில், கணக்கில் காட் டாமல் பல இலட்சம் கோடி கறுப்பு பணம் வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டு உள் ளது. இந்த பணத்தை கண்டுபிடித்து மீட் பதற்கு கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன.

குறிப்பாக வெளிநாட்டு புலனாய்வு அமை ப்புகளின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம். சர்வதேச சட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டு இந்த ஒத்துழைப்பு இருக்க வேண்டும் சர்வ தேச புலனாய்வு அமைப்புகள் மேலும் தீவிர மாக செயற்பட்டால் மட்டுமே ஊழலை ஒழிக்க முடியும்.

குற்றவாளிகளுக்கு எதிராக வழக்கு தொட ரவும் அவர்களின் சொத்துக்களை பறிமுதல் செய்யவும் சர்வதேச ஒத்துழைப்பு தேவைப் படுகிறது. இந்த் மாநாட்டில் கலந்து கொண்டு ள்ள பல்வேறு நாடுகளின் புலனாய்வு அமை ப்புகளின் நடவடிக்கைகள் வெவ்வேறாக இருந்தாலும் நோக்கம் ஒன்று தான். அது ஊழலை அடியோடு ஒழிக்கும் நோக்கமாக இருக்க வேண்டும் என்றார். இந்த மாநாட்டில் சீனா, பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, இலங்கை உள்ளிட்ட 34 நாடுகளை சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (அ-2)

# இந்தியா-ஆஸி இன்று மோதல்

3 நாடுகள் கிரிக்கெட் போட்டியின் 7ஆவது லீக் ஆட்டம் பிரிஸ்பேனில் இன்று நடக்கிறது. இதில் இந்திய-அவுஸ்திரேலிய அணிகள் மோதுகின்றன. இந்திய அணி 4 ஆட்டத்தில் விளையாடி 10 புள்ளிகளைப் பெற்றுள்ளது.

இந்திய அணி தொடக்க ஆட்டத்தில் அவுஸ்திரேலியாவிடம் 65 ஓட்டங்களால் தோற்று 2வது ஆட்டத்தில் இலங்கையை 4 விக்கெட்டிலும் 3ஆவது ஆட்டத்தில் அவுஸ்திரேலியாவை 4 விக்கெட்டிலும் வீழ்த்தியது. 4ஆவது ஆட்டத்தில் இலங்கையுடன் சமன் செய்தது.

அவுஸ்திரேலிய அணி 4 ஆட்டத்தில் 2 வெற்றி 2 தோல்வியுடன் 9 புள்ளிகள் பெற்று உள்ளது. இந்திய அணி 3ஆவது வெற்றியை பெறும் ஆர்வத்தில் உள்ளது.

அடிலெய்டில்நடந்த போட்டியில் 4 விக்கெட்டால் வீழ்த்தியதால் இந்திய அணி நம்பிக்கையுடன் உள்ளது.

ஆனால் அணித்தலைவர் தோனி தொடக்க வீரர்களின் சுழற்சி முறையை தொடர்ந்து பின்பற்றுவதில் உறுதியாக இருப்பதாக கூறினார்.

இந்நிலையில் இன்றைய போட்டியில் காம்பீருக்கு ஓய்வு கொடுக்கப்படவில்லை. இம் முறை மீண்டும் சேவாக்குக்கு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது. ஆரம்ப ஆட்டக்காரர்களாக கௌதம் கம்பீரும் சச்சினும் களமிறக்கப்பட உள்ளனர் எனதகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த போட்டியில் கோலி, ரோகித் சர்மா, ரெய்னா ஆகியோரது துடுப்பாட்டம் சிறப்பாக இல்லை. இதனால் அவர்கள் தங்களது திறமையை வெளிப்படுத்த வேண்டும். அணித் தலைவர் தோனி மிகவும் பொறுப்புடன் விளையாடி அணியை வழி நடத்தி செல்கிறார். ஆட்டத்தை வெற்றிகரமாக முடிப்பதில் அவர் சிறந்தவர் என்று பாராட்டப்பட்டுள்ளார்.

கடந்த போட்டியில் ஓய்வு கொடுக்கப்பட்ட சகீர் கான் இன்றைய போட்டியில் ஆடுவார். இதனால் இர்பான் பதான், உமேஸ் யாதவ் ஆகியோரில் ஒருவர் நீக்கப்படலாம்.

அவுஸ்திரேலிய அணித்தலைவர் கிளார்க் இன்றைய போட்டியிலும் ஆடவில்லை இதனால் பொன்டிங்தான் அணியை வழி நடத்திச் செல்கிறார். இலங்கையிடம் மோசமாக தோற்றதால் இன்றைய ஆட்டத்தில் அந்த அணி தங்களது முழு திறமையை வெளிப்படுத்துவார்கள்.

பொன்டிங் துடுப்பாட்டம் மிகவும் மோசமாக இருப்பதால் அவர் சிறப்பாக விளையாட வேண்டிய கட்டாயத்தில் உள்ளார். இதே போல அந்த அணியின் கட்டாயத்தில் உள்ளார். இதே போல அந்த அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர்களும் நெருக்கடியில் உள்ளனர். இன்றைய ஆட்டம் இலங்கை நேரப்படி காலை 8.50 மணிக்கு தொடங்குகிறது.

# பந்துவீச்சாளர்களே வெற்றிக்கு காரணம்

## -ஜெயவர்த்தன



இலங்கை-அவுஸ்திரேலியாவிற்கு இடையேயான முத்தரப்பு ஒருநாள் போட்டியில் இலங்கை அணி 8 விக்கெட் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியாவை வீழ்த்தியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 40.5 ஓவர்களில் 158 ஓட்டங்களில் சுருண்டது. டேவிட் ஹஸி அதிகபட்சமாக 58 ஓட்டங்கள் எடுத்தார்.

இலங்கை தரப்பில் பெரேரா, மகரூப் தலா 2 விக்கெட்டும், மலிங்க, மத்யூஸ் தலா ஒரு விக்கெட்டும் கைப்பற்றினார்கள்.


இலங்கை அணிக்கு 41 ஓவரில் 152 ஓட்டங்கள் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இலங்கையோ 101 பந்துகள் எஞ்சி இருந்த நிலையில் 2 விக்கெட் இழப்புக்கு 152 ஓட்டங்கள் எடுத்து டக்வோர்த் லூயிஸ் விதிப்படி 8 விக்கெட்டால் வெற்றிபெற்றது.

அணித்தலைவர் ஜெயவர்த்தன 61 ஓட்டங்களும் (ஆட்டமிழக்காமல்) டில்சான் 45 ஓட்டங்களும் எடுத்தனர். சங்ககாரா 30 ஓட்டங்கள் எடுத்தார். 11 ஓட்டங்கள் எடுத்த போது அவர் 10 ஆயிரம் ஓட்டங்களை எடுத்து சாதனை புரிந்தார்.

இந்த வெற்றி குறித்து இலங்கை அணியின் தலைவர் ஜெயவர்த்தன நிருபர்களிடம் கூறியதாவது, பந்துவீச்சாளர்களால் இந்த வெற்றி கிடைத்தது. எங்களது பந்துவீச்சாளர்களால் எல்லா விதமான ஆடுகளத்திலும் சிறப்பாக பந்துவீச முடியும்.

தொடக்கத்தில் 2 பிடிகளை தவறவிட்டோம். என்றாலும் அதை நாங்கள் சரி செய்து சிறப்பாக விளையாடினோம். துடுப்பாட்டத்தில் எங்களது தொடக்கம் நன்றாக இருந்தது.

# தென்னாபிரிக்காவுடனான இருபது-20 நியூசிலாந்து அணி அபார வெற்றி



முதலாவது இருபது-20 போட்டியில் நியூசிலாந்து அணி தென்னாபிரிக்காவை 6 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

கடந்த 8 ஆண்டுகளின் முதல் முறையாக நியூசிலாந்து சென்றுள்ள தென்னாபிரிக்கா அணி 3போட்டிகள்கொண்ட இருபது-20 தொடரில் பங்கேற்கிறது. முதல் போட்டி நேற்று வெலிங்டனில் நடந்தது.

நாணயச்சுழற்சியல் நியூசிலாந்து அணித் தலைவர் பிரண்டன் மெக்கலம் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

தென்னாபிரிக்க அணியின் முதல்வரிசை துடுப்பாட்ட வீரர்கள் ஏமாற்றினர். லெவி 13, அம்லா 19, இங்கிராம் பூச்சியம், அணித்தலைவர் டிவில்லியர்ஸ் 8 விரைவில் வெளியேறினார்.

பின் டுமினி ஆன்டாங் இணைந்து அசத்தினர். வாண வேடிக்கை காட்டிய ஆன்டாங் வில்லியம்சன் ஓவரில் தொடர்ந்து 4 சிக்ஸரை விளாசினார்.

இவர் 32 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். டுமினி 41 ஓட்டங்கள் எடுத்தார். தென்னாபிரிக்க அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களையிழந்து 147 ஓட்டங்கள் எடுத்தது.

### குப்தில் கலக்கல்

சுலப இலக்கை விரட்டிய நியூசிலாந்து அணிக்கு நிகோல் 13, பிரண்டன் மைக்கலம் 16, கிரண்ட்ஹோம் 2 ஓட்டங்கள் என நிலைக்கவில்லை.

ஒருபக்கம் விக்கெட் சரிந்தாலும் மறுபக்கம் அதிரடியாக ஆடிய குப்தில் அரைச்சதம் கடந்து வெற்றியை உறுதி செய்தார். வில்லியம்ஸன் 24 ஓட்டங்களை எடுத்தார்.

நியூசிலாந்து அணி 19.2 ஓவர்களில் 4 விக்கெட்டுக்கு 148 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. இதன் மூலம் தொடரில் 1:0 என முன்நிலைபெற்றது. குப்தில் 78 ஓட்டங்களுடன் (5 பவுண்டரி, 4 சிக்ஸர்) ஆட்டமிழக்காமல் இருந்தார். இவரே ஆட்டநாயகன் விருதையும் தட்டிச் சென்றார்.

# யுவராஜ் சிங்கை தவறாக வழிநடத்தினர்-தந்தை புகார்

யுவராஜ் சிங்கிற்கு உடல் நிலை பாதிக்கப்பட்ட போது 6 மாதங்களுக்கு முன்பே அமெரிக்கா சென்று சிகிச்சை பெறமுடியாமல் ஒரு மருத்துவரும் கடவுள் என்று கூறிக்கொள்ளும் சாமியார் ஒருவரும் யுவராஜ் சிங்கை தவறாக வழி நடத்தி எல்லாம் சரியாகிவிடும் என்று கூறி வந்ததாக யுவராஜ் சிங்கின் தந்தை யோக்ராஜ் கூறியுள்ளார்.

இந்த நோயை தானே சரி செய்து விடுவதாக ஒரு மருத்துவர் யுவராஜிக்கு சிகிச்சை அளித்து வந்ததாகவும் எல்லாம் தானாகவே சரியாகிவிடும் என்று பாபா என்று கூறிக் கொள்ளும் ஒரு சாமியார் யுவராஜை மேல் சிகிச்சைக்காக அமெரிக்கா செல்லவிடாமல் தடுத்து வந்ததாகவும் கூறியுள்ள யோக்ராஜ் நல்ல வேளையாக யுவராஜ் தற்போது அமெரிக்கா சென்று சிகிச்சை பெற்று வருகின்றார் என்று கூறியுள்ளார்.

# மிட்செல் மார்ஷ் காயம்

அவுஸ்திரேலிய சகலதுறைவீரர் மிட்செல்மார்ஷ் காயம் காரணமாக முத்தரப்பு ஒரு நாள் தொடரில் இருந்து நேற்று விலகினார். எஞ்சியுள்ள ஆட்டங்களில் அவர் விளையாட மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது. மாற்று வீரராக ஜார்ஜ் பெய்லி சேர்க்கப்பட்டுள்ளார்.

# சுயநிர்ணய உரிமையை...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் தமிழ் சிவில் சமூகத்துக்கும் இடையேயான சந்திப்பு நேற்றையதினம் வவுனியா சென். அன்ரனிஸ் தேவாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

நேற்றுக் காலை 10 மணிமுதல் பிற்பகல் 2.30 மணிவரை நீடித்த இச்சந்திப்பில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இரா.சம்பந்தன் தலைமையிலும், தமிழ் சிவில் சமூகத்தினர் மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசப் அடிகளாரின் தலைமையிலும் சந்தித்து கலந்துரையாடினர்.

இச்சந்திப்பிலேயே மேற்படி கோரிக்கையை தமிழ் சிவில் சமூகம் முன்வைத்தது.

தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு தமிழ் சிவில் சமூகம் விடுக்கும் அழைப்பு எனும் தலைப்பில் தமிழ் சிவில் சமூகத்தால் அண் மையில் வெளியிடப்பட்டிருந்த அறிக்கை தொடர்பாக இந்த சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவு செய்யும் வகையில் நியாயபூர்வமான அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதுடன் எவ்வகையிலும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை விட்டுக் கொடுக்காத வகையில் அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தையை முன்னெடுக்க வேண்டும் என இச்சந்திப்பில் தமிழ் சிவில் சமூகம் சுட்டிக் காட்டியுள்ளது.

அத்துடன் இக் கொள்கைக்கு ஆதரவான அனைத்துக் கட்சிகளுடனும் இணைந்து பேசி சரியானதொரு தீர்வை தமிழ் மக்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்றுத்தர வேண்டும் எனவும் வலியுறுத்திய தமிழ் சிவில் சமூகம் அதற்கான ஒத்துழைப்புகளை தாம் முழுமையாக வழங்குவோம் எனவும் தெரிவித்துள்ளது.

இதற்குப் பதிலளித்த தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்,

அரசாங்கத்துடன் தமிழ்த் தேசிய சுயநிர்ண உரிமை என்ற அடிப்படையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று சிவில் சமூகமாகிய நீங்கள் கோரியுள்ளீர்கள்.

ஆனால், நாங்கள் எந்தப் பதாகைகளையும் தூக்கிக் கொண்டு அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைக்குச் செல்லவில்லை.

எனினும் தமிழ் மக்களுக்கு தேவையான நீதியான, நியாயமான, சுதந்திரமான, பொருளாதார, சமூக, கலாசார, பண்பாட்டுடன் கூடிய தீர்வு ஒன்று காணப்பட வேண்டும் என்பதில் உறுதியுடன் உள்ளோம்.

இதற்கு ஏனைய கட்சிகளுடனும் சமூகத்துடனும் இணைந்து பேசி கலந்துரையாட தயாராக உள்ளோம் என்றார்.

வட மாகாண சபைக்கான தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பங்குபற்றினால், மாகாண சபை முறையை தமிழ் மக்கள் ஏற்றுக்கொண்டுவிட்டார்கள் எனக்கருதப்படும்.

ஆகவே கூட்டமைப்பு இந்தத் தேர்தலில் நேரடியாகப் பங்கு பற்றக் கூடாது என்றும் அவசியமானால் மாற்றுவழிகள் குறித்து அது மக்களுடன் பேச்சுக்களை நடத்த வேண்டும் என்றும் சிவில் சமூகத்தால் சுட்டிக்காட்டப்பட்ட போது,

இதற்குப் பதிலளித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படாத வட மாகாண தேர்தல் குறித்து' முன்கூட்டியே தீர்மானம் எடுக்க வேண்டிய அவசியமில்லை என்றும் அரசியல் தீர்வு தொடர்பான பேச்சுகளின் உண்மை நிலைமை குறித்து சிவில் சமூகத்தினரை நேரடியாக சந்தித்து விளக்கமளிக்க முடியும் என தெரிவித்திருந்தது.

இச்சந்திப்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா, எம்.சுமந்திரன், சுரேஸ் பிரேமச்சந்திரன், ஈ.சரவணபவன், சி.சிறிதரன், சிவசக்தி ஆனந்தன், செல்வம் அடைக்கலநாதன் உள்ளிட்ட கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமிழ் சிவில் சமூகத்தின் சார்பில் சுமார் 15 பேரும் கலந்துகொண்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தமிழ் சிவில் சமூகம் விடுக்கும் அழைப்பு எனும் தலைப்பில் தமிழ் சிவில் சமூகத்தால் அண்மையில் வெளியிடப்பட்டிருந்த அறிக்கையில் 77 பேரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தன.

இந்தக் கலந்துரையாடலில் ஊடகவியலாளர்கள், படமெடுக்க அனுமதிக்கப்பட்டபோதிலும் செய்தி சேகரிக்க அனுமதி வழங்கப்படவில்லை.

அதேநேரம் சந்திப்புக்குப் பின்னர் இரா.சம்பந்தனும், மன்னார் ஆயரும் செய்தியாளர்களைச் சந்தித்து விளக்கம் கொடுத்தனர். (ந-8,11)

# இராணுவ நீதிமன்றுக்கு ஹெல உறுமய ஆதரவு

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொள்ள இராணுவ நீதிமன்றம் ஒன்றை இராணுவத் தளபதி நியமித்துள்ளதை ஜாதிக ஹெல உறுமய வரவேற்றுள்ளது.

இது தொடர்பாக ஜாதிக ஹெல உறுமயவின் பேச்சாளர் நிசாந்த சிறிவர்ணசிங்க கருத்து வெளியிடு

கையில் பொறுப்புக் கூறும் விவகாரத்தில் இலங்கை பொறிமுறை ஒன்றைக் கொண்டிருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை அமெரிக்காவின் அழுத்தத்தின் பேரில் இந்த இராணுவ விசாரணை நீதிமன்றம் நியமிக்கப்பட்டிருந்தால் அதனைத் தாம் எதிர்ப்பதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (ந-8;11)

## தங்க பிஸ்கட் விற்பனை யாழில் இருவர் கைது

தங்க பிஸ்கட்டுக்களை விற்பனை செய்த வியாபாரிகள் இருவரை நேற்று யாழ்.நகரில் வைத்து இரகசியப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்தே இவர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

மத்திய வங்கிக்கூடாக பவுண் பிஸ்கட்டுகள் ஏனைய வங்கிக்கு வழங்கப்பட்டு அவற்றின் மூலம் வியாபாரிகள் வாங்கிக்கொள்ள வேண்டும் என்பதே முறையாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ந-6)

## அதிபர் பதவி வெற்றிடம்

தீவகக் கல்வி வலயத்தில் யா/ எழுவைதீவு றோ.க.த.க பாடசாலை (வகை 11) யில் அதிபர் பதவி வெற்றிடம் ஏற்பட்டுள்ளது.

இவ் வெற்றிடத்திற்கு தீவக கல்வி வலயத்தில் கடமையாற்றும் அதிபர் தரத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அதிபர் தரத்தினை சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்காதவிடத்து இலங்கை ஆசிரியர் சேவையைச் சேர்ந்தவர்களின் (வகுப்பு1 வகுப்பு 2-1) விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விண்ணப்ப படிவங்களை தீவகக் கல்வி வலயத்தில் பெற்று இம் மாதம் 29ம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு தீவக கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஏ.புவனேந்திரன் கேட்டுள்ளார்.(ந)

## சுதுமலையில் இன்று

சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப.1.30 மணிக்கு பாடசாலை அதிபர் த.சண்முகசுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.(ந)

## சிலாபம் மீனவரின் இறுதிக்...

சென் செபஸ்தியர் சேமக்காலையில் இடம்பெற்றது.

பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் இடம்பெற்ற அன்ரனி பெர்ணான்டோவின் இறுதிச் சடங்கில் அரசியல்வாதிகள், புத்தளம் மற்றும் கம்பஹா மாவட்ட மீனவர்கள், பொதுமக்கள் என பெருந்திரளானோர் கலந்து கொண்டனர். அத்துடன் இவரின் நினைவாக வீதி களில் பதாகைகள் கட்டப்பட்டிருந்ததுடன் நகரமெங்கும் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்ததுடன் கடைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன.

எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட எதிரணி அரசியல் தலைவர்களும் உள்ளூர் அரசியல் பிரமுகர்களும் இறுதிச்சடங்கில் கலந்து கொண்டனர்.

மீனவர் குடியிருப்பிலிருந்து கிறிஸ்தவ தேவாலயமொன்றுக்கு கொண்டு செல்லப்பட்ட அன்ரனி பெர்ணான்டோவின் உடல் மத ஆராதனைகளின் பின்னர் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இறுதிச் சடங்குகளின்போது, அசம்பாவிதங்கள் எதுவும் நடந்துவிடக்கூடாது என்பதற்காக நூற்றுக்கணக்கான பொலிஸாரும் படையினரும் சிலாபம் நகர் முழுவதும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

சிலாபம் வெல்ல பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதான அன்ரனி பெர்ணான்டோ 2 பிள்ளைகளின் தந்தையாவார். குடும்ப வறுமை காரணமாக இவரது மனைவி சில மாதங்களுக்கு முன்னர் தொழிலுக்காக வெளிநாடு சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-8;11)

## பால்மா விலை...

காரணங்காட்டி, விலைகளை அதிகரிப்பதற்கு அனுமதி கோரியுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்தது.

விலைகள் அதிகரிக்கப்படாவிட்டால் தமது தொழிற்துறை நெருக்கடியை எதிர்நோக்கும் எனத் தெரிவித்துள்ளதுடன் இது குறித்து வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவிடம் பேச்சு நடத்துவதற்கான அனுமதியையும் இந் நிறுவனங்கள் கோரியுள்ளன.

2012 ஆம் ஆண்டுவரவு செலவுத் திட்டத்தில் ரூபாயின் மதிப்பை 3 சதவீதத்தால் குறைத்தமையானது, பால்மா இறக்குமதியில் எதிர்மாறான தாக்கத்தை ஏற்படுத்தியதாகவும் டொலருக்கு எதிரான ரூபாயின் பெறுமதி 120 ரூபாயாக வீழ்ச்சியடைந்தமையால் இந் நிலைமை மிக மோசமடைந்ததாகவும் அந்நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. (ந-8,11)

## இராணுவத்தின்...

உள்ளிட்ட பல சம்பவங்களை உதாரணமாகக் காட்ட முடியும். எனவே மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கை விவகாரம் குறித்து பேசப்பட வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார். (ந-8;11)

## மினி பஸ் மோதி...

குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார்.

தேவாலயத்தின் திருவிழாப் பணிகளை முடித்துவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தபோதே மினிபஸ் மோதியதில் அருகில் இருந்த மின்கம்பத்துடன் மோதுண்டு சம்பவ இடத்திலேயே உயிரிழ ந்தார்.

மினிபஸ் நடத்துனர் மினி பஸ்ஸை செலுத்திச் சென்ற போது மேற்படி விபத்து ஏற்பட்டது என ஆரம்ப கட்ட விசாரணைகளிலிருந்து தெரியவருவதாகத் தெரிவித்த இளவாலைப் பொலிஸார் இச்சம்பவம் தொடர்பாக மினிபஸ் நடத்துனரைக் கைது செய்ததுடன் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டுவருகின்றனர்.(ந-4,6,11)

## சர்வதேச...

செயல்களுக்கு தண்டனை வழங்கும் பொறிமுறைமை ஒன்றை உருவாக்கி பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் வழங்க வேண்டியது மனித உரிமைப் பேரவையின் கடமையாகும் எனவும் குறித்த அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன. (ந-8,11)

Vision Bus Booking Centre
AC / Non AC / Normal ஆசனங்கள்
இல. 112, தபாற் பெட்டி சந்தி, திருநெல்வேலி.
♦ யாழ் - கொழும்பு பிரயாண பதிவுகளை வீட்டில் இருந்தவாறே மேற்கொள்ளலாம்.
♦ எமது திருநெல்வேலி தரிப்பிடத்தில் இருந்தும் பிரயாணத்தை மேற்கொள்ளலாம்.
♦ கொழும்பு செல்லும் பல்கலைக்கழக மாணவர்களிற்கு விசேட கட்டண கழிவு.
HOT LINE - 0779210136
(7531)

IELTS — BRITISH COUNCIL
IELTS FOR UK STUDENT VISA APPLICANTS
Cours Fees 15000/- Only
Our teachers have undergone IELTS Teachers preparation at the BRITISH COUNCIL
Mon, Tue, Wed, Thu 4.00-5.30 p.m
Course Schedule: Sat & Sun
Duration: 10 Weeks
Time: 8.30 to 11.30
புதிய பிரிவுகள் ஆரம்பம் : 18.02.2012, 20.02.2012
CITY COLLEGE OF ENGLISH
No.143, Adiyapatham Road, Thirunelvely - Jaffna.
Tel. 021 222 0384, 077 8803887

மகளிருக்கான 3 மாத கால பயிற்சிகள்


அனேகரின் வேண்டுகோளுக்கிணங்க பின்வரும் பயிற்சிகள் சனி, ஞாயிறுகளிலும் நடைபெற உள்ளன.
முக அழுகுக் கலை (Facial):- (B) பஞ்சாறாஸ் Saffron, Papaya, Neem மற்றும் Gold, சொக்கலேற், தமக்குத் தாமே Facial செய்தல் உட்பட 15 வகையானவை.
Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல்)
இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான முறைகளில் சேலை அணிதல்,
அழகு சாதனப் பொருட்களின் அறிமுகப்படுத்தல், செய்முறை தொடர்பான குறிப்புகள் (Notes) மற்றும் போதிய விளக்கங்களுடனான செயன்முறைப் பயிற்சிகள்.
முடி சீராக்குதலும் கூந்தல் வடிவமைப்புகளும் (HAIR DRESSING & STYLING)
50 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், (Straightening), முடி சுருட்டுதல், முடி நிறமூட்டுதல், 6 வித முடி வெட்டுதல்கள். தமக்குத் தாமே முடி வெட்டுவதற்கானபயிற்சி, Perming, தலைக்கு எண்ணை மசாஜ் செய்தல்.


பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ்கள் வழுங்கப்படும்.
மேற்படி பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது
ஆரம்பம் - 25-02-2012 சனி காலை 9.30 மணி
கலாலயா பயிற்சியகம் 1985-2012
பெருமாள் கோயிலுக்கு அண்மையில் - யாழ்ப்பாணம்

A1 Exam
Sponsor/Settlement Visa
திருமணம் செய்து UK செல்வதற்கான British High Commission ஆல் அங்கீகரிக்கப்பட்ட City &Guilds இன் கற்கை நெறியை எமது நிறுவனத்திலேயே கற்று, ஆங்கிலப்பரீட்சைக்கு எமது நிறுவனத்திலேயே தோற்றமுடியும்.
City & Guilds Approved Centre
DMI COMPUTER EDUCATION
# City & Guilds ஆல் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்
# சித்தியடைவதற்கான 100% உத்தரவாதம் எமது நிறுவனத்தால் வழங்கப்படும்.
# சித்தியடையாவிட்டால் கற்கைநெறிக் கட்டணம் மீள்ளிக்கப்படும்.
Student Visa மூலம் வெளிநாடு செல்பவர்களுக்கானது
IELTS | B1-Exam City & Guilds
A/L, O/L பரீட்சை எழுதியவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஆங்கிலத்தில் சரளமாக பேச விரும்புபவர்களுக்கானது Spoken English
DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113, கஸ்தூரியார் வீதி, Tel.: 021-222 4403
நெல்லியடி M.M.V. வீதி, Tel. : 021-226 2470

திருமண சேவை
உயர்தரம் முதல் சாதாரண தரம் வரை உள்நாட்டிலும் உலக நாடுகளிலும் உள்ள மணமக்களைத் தேர்ந்தெடுத்து உங்கள் திருமணங்களை நிறைவேற்ற தொடர்பு கொள்ளுங்கள்
"சர்வதேச புலவர் திருமண சேவை"
ஸ்தாபிதம்: 10.05.1962
"மதுரகானம்", 238, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
T.P. 021 222 7147, 0713352215
57. விகாரை லேன் வெள்ளவத்தை, கொழும்பு - 6.
T.P.0112363435
(7510)

DANIKA A-Z MARKET

Japan, England, America, Germany ஆகிய நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்ட அனைத்து வகையான இலத்திரனியல் பொருட்களை உங்களுக்கேற்ற விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்
No. 121, Manipay Road, Thavady, Jaffna.
Tel: 021 320 6896, 077 059 1511, 077 326 3314
(5886)

... இல.3.2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.02.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.